# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 03, ஞாயிற்றுக்கிழமை 18.12.2016 | கதிர் 43



யாழ்.நகரில்
புத்தம் புதிய நவீன ஆடைத் தெரிவுகளுக்கு
றோயல் கலெக்ஷன்ஸ்
இல.223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5573


## ரஷ்யாவுக்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிக்கு புடின் அழைப்பு

ரஷ்யாவுக்கு உத்தியோக பூர்வ பயணமாக வருகை தரும்படி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அடுத்த மூன்று மாதங்களுக்குள் மொஸ்கோவுக்குச் செல்வார்.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவுடன் மலேசியா சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அங்கு செய்தியாளர் சந்திப்பின்போது இத்தகவலை வெளியிட்டார். (உ)

## குழப்ப சம்பவங்களுடன் முன்னாள் போராளிகளுக்கு தொடர்பில்லை

யாழ்ப்பாணம், டிசெ.18

வடமாகாணத்தில் அண்மையில் நடந்த குழப்பகரமான சம்பவங்கள் எதிலும் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பயிற்சிகள் வெற்றிகரமான முறையில் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக அவர்கள் மீண்டும் எந்த வகையிலும் மோதல்களுடன் சம்பந்தப்படமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். (உ)

## உள்ளூராட்சித்தேர்தலை நடத்தக் கோரி தொடர் போராட்டம்


உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்தும் தீர்மானம் ஒன்றை அரசு விரைவாக முன்னெடுக்காவிட்டால், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் நாடு தழுவிய ரீதியில் தொடர் எதிர்ப்புப் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்திருக்கின்றது.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டு எதிரணியின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரித்தார். (உ)

### அளப்பு அருணாசலம்



லீற்றர் கணக்கிலை மண்டி பெருங்குடிமக்கள் எண்டதை நிரூபிச்சுப் போட்டம் பாருங்கோ...!



## ஹயஸ் - பஸ் நேருக்குநேர் மோதி

# கோர விபத்து 11பேர் சாவு!

## 20பேர் காயம்; சாவகச்சேரியில் சம்பவம்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 18**

**சாவகச்சேரி, சங்கத்தானை ரயில் நிலையத்துக்கு அண்மையில் 'ஏ9' வீதியில் ஹயஸ் வான் ஒன்றும் இ.போ.ச.பஸ் ஒன்றும் நேருக்குநேர் மோதியதில் வானில் வந்த 11 பேர் பலியாகினர். வானிலும் பஸ்ஸிலும் பயணித்த இருபது பேர் படுகாயமடைந்தனர். இந்தக் கோர விபத்து நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றிருக்கின்றது.**

மாறம்பவில்இருந்து தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளுடன் வந்த ஹயஸ் வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுமே இப்படி நேருக்கு நேர் மோதின.

ஹயஸ் வாகனத்தின் முன்பகுதி பஸ்ஸுடன் மோதுண்டு அப்பளம் போல சப்பளிந்து போனது. வானுக்குள் இருந்த பதின்மூன்று பயணிகளில் பத்துப்பேர் அந்த இடத்திலேயே பலியாகினர். படுகாயமடைந்த மூவர் முதலில் சாவகச்சேரி

பக்கம் 24 »

# ஹயஸ் பாதை மாறி நேராக வருவதை கண்டதும் பஸ்ஸை நிறுத்தி விட்டேன்!

## தப்பிப் பிழைத்த சாரதி ஆஸ்பத்திரியில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

"ஹயஸ் திடீரென பக்கம் மாறி வேகமாக வருவதைக் கண்டதும் நான் உஷாராகி எமது பஸ்ஸை நிறுத்தி விட்டேன். நின்ற பஸ்ஸுடன்தான் ஹயஸ் வந்து மோதியது."

–இவ்வாறு தெரிவித்தார் நேற்று விபத்துக்குள்ளான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதி.

தலை, கைகள் மற்றும் உடற்பகுதிகளில் பலத்த காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் முதலுதவிச் சிகிச்சைகளின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-



"நான் எனது பஸ்ஸை செலுத்திக் கொண்டிருந்தேன். எதிரில் வந்த அந்த ஹயஸ் வாகனம் திடீரென தங்களின்

பக்கம் 24 »

## புதிய அரசமைப்பின்படி கட்சி மாறினால் எம்.பி. பதவி காலி!

கட்சி மாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி இரத்தாகி, அவர்கள் மீண்டும் இடைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை புதிய அரசமைப்புச் சட்டத்தில் திட்டவட்டமாக சேர்த்துக் கொள்வது அவசியம்.

– இத்தகைய நிலைப்பாடு தொடர்பில் அரசமைப்பு உருவாக்கும் தரப்புகள் மத்தியில் ஒருமித்த கருத்துக்கள் ஏற்பட்டுள்ளன எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## 70 லட்சம் லீற்றர் கள்ளு ஏப்பம்!

யாழ்ப்பாணமாவட்டத்தில் இவ்வருடம் கள்ளு நுகர்வு பெருமளவு அதிகரித்திருக்கின்றது. இந்த வருடம் பெப்ரவரி தொடக்கம் ஒக்ரோபர் வரையான காலப்பகுதியில் 69 லட்சத்து 19 ஆயிரத்து 663 லீற்றர் கள்ளு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் வடமாகாணப் பொறுப்பதிகாரி சோதிநாதன் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கில் பொதுவாக ஜனவரி மாதத்தில் கள்ளு இறக்கப்படுவதில்லை. ஒக்ரோபர் முதல் ஜனவரி வரை பொதுவாக கள்ளு சீசன் இல்லை. (உ)

## நெளுக்குளம் விபத்தில் ஒருவர் படுகாயம்; சாரதி தப்பி ஓட்டம்

வவுனியா – மன்னார் பிரதான வீதியில் நெளுக்குளம் சந்தியில் நேற்று நண்பகல் வேளையில் ஏற்பட்ட வீதி விபத்தில் ஒருவர் படுகாயடைந்துள்ளார்.

வீதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி மீது பின்னால் வந்த சிறிய ரக லொறியொன்று மோதியுள்ளது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி எதிரே சென்ற கொள்கலன் வாகனத்துடன் மோதியுள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய சிறிய ரக லொறியின் சாரதி தப்பியோடியுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சமஷ்டி கனவாம்! ஹெல உறுமய கருத்து

"தமிழ்க்கூட்டமைப்பின் சமஷ்டிக் கனவு ஒரு போதும் நிறைவேறப்போவதில்லை. கூட்டமைப்பின் இனவாதக் கொள்கை இன்னும் மாறவில்லை. சிங்கள மக்கள் சமஷ்டியை ஒருபோதும் ஏற்கார்."

ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த வர்ணசிங்க நேற்று செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். (உ)

# ஜனாதிபதி சிறிசேனவின் மலேசிய விஜயம் வெற்றி

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை*

கொழும்பு, டிசெ.18

மலேசியாவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நேற்று பிற்பகல் நாடு திரும்பினார்.

ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் போது இலங்கை - மலேசிய இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன என இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மலேசியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வதற்கு இலங்கை அரசதலைவர் ஒருவருக்கு 19 வருடங்களுக்குப் பின்னர் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மலேசிய பிரதமர் அப்துல் ரஸாக்கிற்கும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும் இடையே இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடல் இலங்கைக்கு பல்வேறு பொருளாதார நன்மைகளைப் பெற்றுத் தந்திருப்பதுடன் ஆசியாவின் ஒரு முக்கிய நாடான மலேசியா இலங்கைக்கு முடியுமான அனைத்து உதவிகளையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிவதற்கும், இருநாடுகளுக்கும் இடையில் கல்வித் துறையில் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் சுற்றுலாத்துறையை அபிவிருத்திசெய்வதற்கும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதியின் இவ்விஜயம் இலங்கையின் புதிய வெளிநாட்டுக் கொள்கைக்கு கிடைத்த வெற்றி என்றும் அந்த ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# திருடப்பட்ட 21 சைக்கிள்கள் மீட்பு 3 சந்தேக நபர்கள் விளக்கமறியலில்!



யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சைக்கிளைத் திருடிய சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருநகர், குருநகர், கல்வியங்காடு பகுதிகளைச் சேர்ந்த 21, 23, 25 ஆகிய வயதுகளை உடைய சந்தேக நபர்களே யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து ஆண், பெண்களுக்கான 21 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டன.

ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் திருடப்படுகின்றன எனப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-18)

# மழை வேண்டி இன்று பொங்கல்

மழை வேண்டி வடமாகாணத்தில் பல இந்து ஆலயங்களிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பொங்கலும் விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள பெரும்பாக உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

பருவமழையை நம்பி வட பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்த வருடம் எதிர்பார்த்த மழை வீழ்ச்சி இல்லாமையால் குடாநாடு உட்பட வடபகுதியில் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நெற்பயிர்கள் வாடி வதங்கிக்கருகிப் போகும் நிலையிலுள்ளன.

இந்நிலை குறித்துக் கவனம் செலுத்தியுள்ள கமநலசேவைத் திணைக்களத்தினர் மழை வேண்டி ஆலயங்களில் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு தேசிய ரீதியாகச் சகல பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவித்தலைத் தொடர்ந்து வடமாகாணத்திலுள்ள பல ஆலயங்களிலும் இன்று காலை பூஜை வழிபாடுகளும் பொங்கலும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள பெரும்பாக உத்தியோகத்தர்கள் பொங்கல் வழிபாடுகளில் கலந்து கொள்ளுமாறு விவசாய சம்மேளன உறுப்பினர்களுக்கும், விவசாயிகளுக்கும் அறிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் நவாலியிலுள்ள களவோடை கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும், பொங்கலும் இடம் பெறவுள்ளன. (உ-59)

# நூல் வெளியீடு வழிகாட்டுதல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.18

நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அச்சிட்டாளர்களை விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு, யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் - எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை நடைபெறும் என்று தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை அறிவித்துள்ளது.

வெளியீட்டின்போது பொருத்தமான தர நிர்ணயங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல் மற்றும் உயர் தரத்தையுடைய நூல்களை வெளியிடுவதற்கு வழிகாட்டுதல் என்பனவே இந்தக் கருத்தரங்கின் பிரதான நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# முதியோருக்கான விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.18

முதியோர்களுக்கான விளையாட்டு நிகழ்வும் ஒன்று கூடலும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில் நாவாந்துறை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. ஜே/85 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட முதியோர்களைக் கௌரவிக்கும் பொருட்டு இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (இ-8)

# கம்பர்மலையில் கௌரவிப்பு விழா

கம்பர்மலை கலாவாணி முன்பள்ளியின் சிரேஷ்ட மாணவர்களுக்கான கௌரவிப்புவிழா இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு, கலாவாணி முன்றிலில் முன்பள்ளித்தலைவர் எஸ். மயூரன் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபர் கே.ராஜதுரையும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திருமதி ரி.ராஜ்குமார், சக்திவேல், உடுப்பிட்டி கிராமசேவகர் பு.சுஜீந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சதீஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.பிரபாகரன், பி.முத்துலிங்கம், எஸ்.வரதராஜன், உடுவில் சிவில் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ப.கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (இ-08)

# பொருத்து வீடுகளை எதிர்ப்பதற்கு கிளி. கச்சேரிக்கு முன் அணிதிரள்க

*பொது அமைப்புக்கள் கோரிக்கை*

பொருத்துவீடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கவனவீர்ப்பு போராட்டத்திற்கு அனைவரையும் ஆதரவளிக்குமாறும் அதில் பொதுமக்களைப் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசங்கள் கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

கிளிநொச்சியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில், மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு ஏற்கனவே அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட நிரந்தர வீடுகளைப் போன்ற வீடுகளையே தாங்கள் எதிர்பார்த்துள்ள நிலையில், மீள்குடியேற்ற அமைச்சு பொருத்து வீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான பொருத்து வீடுகள் எமது சூழலுக்கு பொருந்தா. எமது வாழ்க்கை முறை, எமது பிரதேசத்தின் காலநிலை, எமது பாரம்பரிய கட்டடமுறை என்பன இதன் மூலம் சிதைக்கப்படுகின்றன. அத்துடன் மறைமுகமாக பல கட்டட வேலை செய்யும் தொழிலாளர்களது வேலை பறிக்கப்படுகின்றது. அத்துடன் இந்த வீடுகள் நீண்ட காலத்திற்கு ஏற்றவையும் அல்ல.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்று நாம் மீள்குடியேற்ற அமைச்சைக் கேட்டுக்கொள்கின்றோம். அதனை வலியுறுத்தும் முகமாக இடம்பெறும் நாளைய கவனவீர்ப்பு போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுங்கள். - என்றும் மேற்படி கூட்டு வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம - 81)

# ஒளிரும் வாழ்வு அமைப்பின் அலுவலகம் நேற்று திறப்பு



முல்லைத்தீவு, டிசெ.18

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒளிரும் வாழ்வு அமைப்பின் அலுவலகம் உடையார்கட்டு பகுதியில் நேற்று சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

சர்வதேச வலுவிழந்தோர் தினமும் அந்த அமைப்பினால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அமைப்பின் தலைவர் ப.இராசகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் ஆகியோரும் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளான பாடசாலை மாணவர்கள் 20 பேருக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வங்கிப் புத்தகங்கள் அவர்களிடம் வழங்கப்பட்டன. 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் 50 பேருக்கான உலருணவுப் பொதிகளும் 2 பேருக்கு நிதி உதவியும் 5 பேருக்கான சுழற்சி முறைக் கடன்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருமளவான மாற்றுத் திறனாளிகள் கலந்துகொண்டனர். (ம-81)

# விமல் வீரவன்ஸ ஒத்துழைப்பு தரவில்லை என்பது தவறாம்!

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ பொலிஸ் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார் எனப் பொலிஸ் நிதி மோசடி தடுப்புப் பிரிவு முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைகேடான வாகனப்பயன்பாடு தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் மற்றும் அவரது ஐந்து ஆதரவாளர்களுக்கு எதிராகக் கொழும்பு நீதிமன்றில் பொலிஸ் நிதி மோசடி தடுப்புப் பிரிவு வழக்குத் தொடர்ந்துள்ளது என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, நான்கு நாள்கள் சுமார் 30 மணித்தியாலங்களுக்கு மேலாக வாக்குமூலம் வழங்கியுள்ளார். அத்துடன் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட 50 பேரிடமும் இது தொடர்பான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தேசிய சுதந்திர முன்னணி விடுத் துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சாதாரண தர பரீட்சை பூர்த்தி

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான - தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான - ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை நேற்றுடன் நிறைவடைந்தது. சுமார் 7 லட்சம் பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றினர்.

இம்முறை புதிய பாடத்திட்டம் மற்றும் பழைய பாடத்திட்டம் என இரண்டு பிரிவுகளுக்கும் ஏக காலத்தில் பரீட்சை நடைபெற்றமை குறிப் பிடத்தக்கது (உ)

# 2017 இல் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது

## பிரதம காலநிலை நிபுணர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.18

தற்போதுள்ள அரிசிக் கையிருப்பு பெப்ரவரி மாதம் வரைக்கும் மாத்திரமே போதுமானது. பெப்ரவரியில் அறுவடை செய்யப்படும் அரிசி எதிர்வரும் ஜூன் மாதம் வரையே போதுமாக இருக்கும். அதன்பின்னர் பெரும் நெருக்கடி ஏற்படும் சாத்தியம் காணப்படுகிறது.

-இவ்வாறு விவசாயத் திணைக்களத்தின் பிரதம காலநிலை நிபுணர் கலாநிதி ரஞ்சித் புண்ணியவர்த்தன தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

நாட்டில் பயிர்ச் செய்கைக்கு உகந்த 850 ஆயிரம் ஹெக்ரேயர்நிலப்பரப்பு உள்ளது. வறட்சி காரணமாக 280ஆயிரம் ஹெக்ரேயர் காணிகளில் மாத்திரமே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டில் அரிசித் தட்டுப்பாடுஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

காலநிலை மாற்றம் மற்றும் உரத்தட்டுப்பாடு காரணமாக இந்த முறை பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ளமுடியாது போகும்.

இதன் காரணமாக, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில்இம்முறை பெரும்போகநெற்செய்கை அறுவடை அரைவாசியாகக் குறைவடையும் நிலைகாணப்படுகின்றது.

அதிகளவில் நெல் பயிரிடப்படும் பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த முறை பெரும்போக நெற்செய்கை குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் வயல் காணியில், சுமார் 19 ஆயிரம் ஏக்கரில் மாத்திரமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்றார். (ஐ)

# தந்தை சிறைக் கூண்டில் பிள்ளைகள் நடுத்தெருவில்



இலங்கையில் தந்தையர் பலர் சிறைகளில் கம்பி எண்ணி வருகிறார்கள். அவர்களின் பிள்ளைகளோ பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அது மட்டுமன்றி அந்தப் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சம்பவங்களும் ஏராளம்.

தமிழ்ப் பிரதேசங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன.

தந்தை சிறையில் காலத்தை கழிக்க பிள்ளைகள் நடுத்தெருவில் நிற்கும் அவலம் யாழ்ப்பாணத்திலும் நடக்கிறது. அவ்வாறானதொரு சம்பவத்தை- அவலத்தை நமது 'காலைக்கதிர்' செய்தியாளர் அறிந்து பதிவு செய்துள்ளார்.

புங்குடுதீவில் மாணவி வித்தியாவை வன்புணர்ந்து கொலை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்ஒருவரின்பிள்ளைகளே இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக யாழ்.நகரில் கச்சான் விற்கும் தொழிலைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தங்களது குடும்ப கஷ்டத்தை வேதனைகளை விவரிக்கின்றான் அந்தச் சிறுவன்-

அப்பா வவுனியா சிறையில். அதனால் எங்கள் குடும்பம் மிகவும் வறுமையான நிலையில் உள்ளது. நாம் முதலில் புங்குடுதீவில் வசித்தோம். பின்னர் அப்பா அந்த வழக்கில் கைது செய்யப்பட்டமையால் நாம் தொடர்ந்து அங்கு வசிக்க முடியவில்லை. யாழ். நகருக்கு வந்து விட்டோம்.

நாம் தற்போது உள்ள வீட்டின் அருகில் உள்ள பாடசாலையில் தான் கல்வி கற்று வருகின்றோம். பாடசாலை சென்று வீடு வந்ததும் அம்மா கச்சான் வறுத்துச் சரையாகக் கட்டி வைச்சு இருப்பா, அதனை எடுத்து வந்து யாழ். நகர் பகுதிகளில் விற்போம். அதில் வரும் வருமானம் மூலமே எமது குடும்பம் ஓடுகிறது.

எமது குடும்பத்தில் மூன்று பிள்ளைகள். நான்தான் முதல் பிள்ளை. அடுத்த ஆண்டில் நான்காம் ஆண்டுக்குச் செல்கிறேன். எனக்கு ஒரு தங்கையும் ஒரு தம்பியுமுள்ளனர். வேறு வழியில்லாத நிலையில்கச்சான்வியாபாரத்தைச் செய்கின்றோம்.- என்றான் அவன். (இ-18)

## உரும்பிராயில் பாலர் பாடசாலை கட்டடம் திறப்பு

உரும்பிராய்,டிசெ.18

உரும்பிராய் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் நம்பிக்கை நிதியத் தலைவருமான அ.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளும் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட்குரே புதிய முன்பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். (இ)

## 51 படைப் பிரிவின் ஏற்பாட்டில் கரோல்

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை தலைமை அலுவலகம் மற்றும் 51 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டின் நடத்தப்படும் வருடாந்த நத்தார் கரோல் யாழ்ப்பாணம் சாந்த மரியா தேவாலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது என்று படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## காடழிப்பு மற்றும் மாசுபடுத்தல்களுக்கு எதிராகக் கொழும்பில் நேற்றுப் பேரணி

கொழும்பு, டிசெ.18

இயற்கைக்கு எதிரான காடழிப்பு மற்றும் மாசுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக கொழும்பில் கவனவீர்ப்பு பேரணியென்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கவனவீர்ப்பு பேரணி கொழும்பு நகர சபைக்கு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியில் ஈடுபட்டவர்கள் வனவிலங்குப் பாதுகாப்பு, காடழிப்பு மற்றும் காற்று மாசு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சுலோகங்களை தாங்கியிருந்தனர். இயற்கை தொடர்பான விழிப்பூட்டும் இந்தப் பேரணியில் இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 15 கிலோ கண்ணிவெடி கரடியனாறில் மீட்பு!

மட்டக்களப்பு,டிசெ.18



மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் 15 கிலோ கிராம் நிறையுடைய கண்ணிவெடி ஒன்று நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு விவசாயப் பண்ணை வீதி விஸ்தரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள், நிலத்தைத் தோண்டும் போது இந்த கண்ணிவெடி தென்பட்டுள்ளது. இதனையடுத்து கரடியனாறு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து கண்ணிவெடி மீட்கப்பட்டது.

இந்தக் கண்ணிவெடியை செயலிழக்கச் செய்வது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## வெளிநாட்டுப் பெண் சடலமாக மீட்பு

கொழும்பு, டிசெ.18

கம்பஹா மெதகம பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வெளிநாட்டுப் பெண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டை சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பில் காரணம் எதுவும் தெரியவரவில்லை என்றும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கைதடியில் இன்று 'கலந்து பேசுதல்'

கைதடி, டிசெ.18

எழுகலை இலக்கிய பேரவையின் வெளியீடான தளவாசல் 2 இன் 'கலந்து பேசுதல்' நிகழ்வு இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

விஸ்டம்
தொழில்நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 221 7860, 077 248 7774

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கி வரும் கல்வி நிறுவனம். பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியான வழியைத் தெரிவு செய்து NVQ படிநிலை ஊடாக தொழில்நுட்பவியல் பட்டமொன்றுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சியன
யாழ்ப்பாணம்
இல்லங்களுக்கான நவீன கூரைத் தெரிவுகள்...
இல்லங்களுக்கான அதிசிறந்த நவீன கூரைத் தெரிவுகள்...




100% சூழலுக்கு பாதிப்பற்றது
அனைத்து விதமான கொள்வனவுக்கும் 10% வரை விலைக்கழிவு

- அதி உன்னத தரம்
- இலகுவான உபயோகம்
- பொருத்தமான ஒலிக் கட்டுப்படுத்தி
- உச்ச வெப்பம் மற்றும் குளிரைக் கட்டுப்படுத்தல்
- நீண்டகாலப்பாவனை
- அதிக பாரம் மற்றும் அழுத்தத்தைத் தாங்கும் சக்தி

(C/133)

Hospital Road, Jaffna. (வேம்படி சந்திக்கு அருகில்) 077 949 4200 jaffnasiyana

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## 'அம்போ'வான அம்பாந்தோட்டை!

தனது சொந்த இடமான அம்பாந்தோட்டையை தலைநகர் கொழும்புக்கு அடுத்து இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாக்கும் எண்ணத்துடன் மஹிந்த ராஜபக்ஷ தமது அரசின் காலத்தில் முன்னெடுத்த பல திட்டங்கள் நாட்டுக்குப் பெரும் தலைவலியாக மாறியிருக்கின்றன.

மாகம்புர துறைமுகமாகட்டும், மத்தள சர்வதேச விமான நிலையமாகட்டும், சர்வதேச கிரிக்கெட் அரங்கமாகட்டும், மாநாட்டு மண்டபமாகட்டும், அல்லது அங்கு பரவலாக அமைக்கப்பட்ட அதிவேக வீதிகளாகட்டும் எல்லாமே அவற்றைச் சாதாரணமாகப் பராமரிப்பதற்குக் கூட போதிய வருமானம் தராத வெள்ளை யானைகளாகி விட்டன.

மத்தள சர்வதேச விமான நிலையத்தை அரிசிக் களஞ்சியமாக மாற்றவும், சர்வதேச மாநாட்டு அரங்கத்தை திருமணங்கள் நடத்தும் மண்டபமாகச் சீரமைக்கவும் எண்ணும் அளவுக்கு, அவற்றின் பராமரிப்புச் செலவு அரசுக்குத் தலைவலியாகி விட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் 140 கோடி அமெரிக்க டொலர் (சுமார் 21 ஆயிரம் கோடி ரூபா) கடன் வாங்கி மஹிந்த அரசு உருவாக்கியது. ஆனால், 'ஆனைப் பசிக்கு சோளப் பொரி' போடும் அளவுக்கு கூட அது வருமானம் தருவதாக இல்லை.

இந்தத் துறைமுகத்தில் பொருள்களை இறக்கி, ஏற்றினால் சலுகை என்று பல உதவித் திட்டங்களை அறிவித்துப் பார்த்தார்கள்.

மத்தள விமான நிலையத்தில் சர்வதேச விமானங்கள் வந்து இறங்கிச் சென்றால் விமானக் கையாளுகைக்கான விமான நிலையக் கட்டணத்தில் விசேட கழிவுகள், சலுகைகள் என்றும் கூட பிரகடனப்படுத்திப் பார்த்தார்கள். அதுவும் பயன்தரவில்லை.

மாகம்புரவுக்கு கப்பல்களும் வரவில்லை, மத்தளவுக்கு விமானங்களும் வரவில்லை.

அவற்றுக்கெல்லாம் செலவிட்ட எண்ணுக்கணக்கற்ற நிதி 'விழலுக்கு இறைத்த நீராகி' விட்டதுதான் மிச்சம்.

இவ்வாறு நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத்தையே அதள பாதாளத்துக்குள் தள்ளக் கூடிய பெரும் பின்னடைவைத் தரும் நிலைமை இத் திட்டங்களால் உருவானமைக்குப் பிரதான காரணி உரிய இலக்கும் திட்டமிடலும் இல்லாமல் அபிவிருத்தி என்ற பெயரில் கண்மூடித்தனமாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் விட்டேத்தித்தனமான நடவடிக்கைகள்தான்.

சர்வதேசக் கப்பல்போக்குவரத்து மார்க்கத்தில் இலங்கையின் தென்முனை ஒரு முக்கிய புள்ளி. அந்த வகையில் அம்பாந்தோட்டை துறைமுகம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. அப்படியிருந்தும் சர்வதேச கப்பல்களின் வருகைக்கான கவர்ச்சியை அது ஏன் இழந்தது?

இங்குதான் திட்டமிடலும் தூரநோக்கும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. அவற்றில் ஏற்பட்ட பின்னடைவுதான் இந்தப் பரிதாப நிலைமைக்குப் பிரதான காரணம்.

சர்வதேசக் கடல் மார்க்கத்தில் முக்கிய முனையில் இருக்கும் அம்பாந்தோட்டை துறையை இலங்கைக்கான பொருள்கள் இறக்கும் துறைமுகமாக மட்டுமே மஹிந்த அரசு விருத்தி செய்தது. அதனால் இலங்கைக்கான பொருள்களை இறக்குவதற்காகக் கொழும்புக்கோ, திருகோணமலைக்கோ செல்ல வேண்டிய கப்பல்களைதான் அம்பாந்தோட்டை தன்பக்கம் திருப்ப முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

மாறாக, கப்பல் தரிப்பு சேவை, திருத்த வேலை, நீர் மற்றும் உணவுப் பொருள்கள் விநியோக சேவை, பழுது பார்க்கும் துறைமுக வசதி, எரிபொருள் விநியோக சேவை, கப்பல் இடைத்தங்கல் சேவை ஆகியவற்றுக்கு வசதி உள்ள ஒரு துறைமுகமாக அதனை விருத்தி செய்திருந்தால், நிச்சயமாக சர்வதேச கப்பல் போக்குவரத்து மார்க்கத்தில் ஒரு முக்கிய புள்ளியாக - திருப்பு முனையாக - அது மாறி யிருக்கும் என்பது திண்ணம்.

இவை எதுவுமே இல்லாமல் வெறுமனே கப்பல் பொருள்களை ஏற்றி இறக்கும் துறைமுகமாக மட்டுமே அதனை அமைத்ததன் விளைவு 'கருங்கல்லில் விழுந்த விதை'யாகிப் போய்விட்டது.

மேற்போந்த எல்லாவற்றையும் மஹிந்த ராஜபக்ஷ அரசு கோட்டை விட்டு விட்டதால், இப்போது அந்த மாகம்புர துறைமுகத்தை 'வெள்ளை யானை' என்று குறிப்பிட்டு, அதனை இனியும் கட்டியழமுடியாது என்ற கருத்தோடு, அந்தத் துறைமுகத்தை சீன நிறுவனம் ஒன்றிடம் 99 வருட கால குத்தகைக்கு ஒப்படைக்கப் போகின்றது மைத்திரி அரசு. அதுமட்டுமல்ல...

அந்த நிறுவனத்துக்கு துறைமுக சேவைக்காக அடுத்த பதினைந்து வருடங்களுக்கு அரசு வரி எதையும் விதிக்க முடியாது. அந்தப் பதினைந்து வருடங்களும் துறைமுக வருமானத்தில் ஒரு சதம் கூட இலங்கைக்கு கிடையாது. துறைமுக அதிகார சபை அந்தத் துறைமுகம் மீதான தனது முழுக் கட்டுப்பாட்டையும் இழந்துவிடும். துறைமுகப் பாதுகாப்பும் அந்தச் சீன - இலங்கை கூட்டு நிறுவனத்தின் கைகளில்தான் இருக்கும். இலங்கை கடற்படையும் அதன் அதிகாரத்தை துறைமுகத்துக்குள் நினைத்தபடி செலுத்தமுடியாது.

இவ்வாறு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இலங்கை அரசு இழக்கப்போகும் விடயங்களின் பட்டியல் மிக நீண்டது.

சரி, இந்தச் சீத்துவத்தில் இந்தத் துறைமுகத்தை பொறுப்பேற்கப் போகும் சீன - இலங்கைக் கூட்டு நிறுவனம் இந்த 'வெள்ளை யானை' யைக் கட்டிக் கொண்டு என்ன செய்யப் போகின்றது?

முதலாவதாக, இந்தக் கடல் மார்க்கத்தில் பயணிக்கும் சர்வதேச கப்பல்களுக்கு எரிபொருள், எரிவாயு போன்றவற்றைத் துறைமுகத்தில் வைத்தே விநியோகிக்கும் பணியை அது உடனடியாக ஆரம்பிக்கப் போகின்றதாம்.

பிறகென்ன? வெள்ளை யானையைச் சரிவரப் பயன்படுத்தி பிழைக்கும் வழி அதற்குத் தெரிந்துவிட்டது. ஜமாய்த்துக் கொள்ளும்.

எங்கள் நாடும், அரசும்தான் தூர நோக்கோடு செயற்படாமல் தவறி, 21 ஆயிரம் கோடி ரூபாவைக் கடன் வாங்கி, வாரி இறைத்து விட்டு, வட்டி கூடக் கட்டாமல் முழிக்கின்றது.

# இலங்கை அரசியலில் முன்னேற்றம்

## ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.18

இலங்கை அரசியலில் அண்மைக்காலமாக ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

இதனையே மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு சபையின் தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பால் நாடுகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தினுள் இலங்கை உள்வாங்கப்பட்டுள்ளமை குறித்து தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் சபையின் சந்திப்பில் இலங்கை, புர்கினோ ஃபசோ மற்றும் ரியூனியா ஆகிய நாடுகள், ஊக்குவிப்பு திட்டத்துக்கென தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

இலங்கை, மக்களுடனான அபிவிருத்திக்கு பெரிய உந்து சக்தியாகக் காணப்படுகின்றது. மேலும் பல வகையில் குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கியுள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அத்துல் கேஷப் தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்துக்குள் இலங்கை உள்வாங்கப்பட்டதன் அடிப்படையில் ஜனநாயக ஆட்சி, மக்களுக்கான முதலீடு மற்றும் பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பை இலங்கை உணர்வு பூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

மேலும் உலகத்தின் வறுமை ஒழிப்பு நாடுகள் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.- என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் கடற்படையின் ஒழுங்கு விதி மீறலை அம்பலமாக்கியது

## விக்கிரமபாகு கருணாரத்ன குற்றஞ்சாட்டு

கொழும்பு, டிசெ.18

அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மீது கடற்படைத் தளபதி தாக்குதல் நடத்தியதன் ஊடாக கடற்படையினருக்கு உரிய ஒழுங்கு விதிகளை அப்பட்டமாக மீறியிருக்கின்றனர்.

நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கப்பல்களுக்குள் யாராவது அத்துமீறி ஏறியிருந்தால் கடற்படையினருக்கு தாக்குதல் நடத்தும் உரிமை இருக்கிறது. அவ்வாறான நிலை ஏற்படாத சந்தர்ப்பத்தில் தரையில் போராட்டதில் ஈடுபட்டவர்களை தாக்குதவதற்கு எந்த உரிமையும் கிடையாது.

கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடந்த சனிக்கிழமை நடந்துகொண்ட விதத்தையும், அவர் அன்று அணிந்திருந்த உடையையும் நியாயப்படுத்த பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா முயன்றிருக்கிறார்.

எனினும்கடற்படைத் தளபதியின் நடவடிக்கைகள் தொடர்பில் எனக்குப் பெரியளவில் முரண்பாடுகள் இருக்கின்றன.

கடற்படைத் தளபதியே எதற்காக நேரில் பிரசன்னமாகியிருந்தார்? அமைச்சர் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் இவ்வாறு எத்தனை தடவைகள் நேரில் யுத்த களத்துக்குச் சென்றிருக்கின்றார்? -கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவே மகாகும்புர துறைமுகப் பிரச்சினை விடயத்தில் தலையிட்டமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

துறைமுகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சினையை மிகைப் படுத்தி காண்பிப்பதற்காகவா கடற்படைத் தளபதியே குறித்த போராட்டத்தை ஒடுக்கும் படைநடவடிக்கைக்குதலைமை தாங்கியிருந்தாரா என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

# ஓய்வு பெற்ற சுங்க அதிகாரிகளை சேவையில் இணைப்பது தவறு

## ஜனாதிபதியிடம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கொழும்பு, டிசெ.18

ஓய்வு பெற்ற சுங்க அதிகாரிகள் 15 பேரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நிதியமைச்சினூடாக அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற சுங்க அதிகாரிகளை இவ்வாறு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வது பிரச்சினைக்குரிய விடயம் என்று அகில இலங்கை சுங்க சங்கச் செயலாளர் ஜே.ஏ. குணதிலக்க கூறினார்.

இந்த நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் சுங்கத் திணைக் களத்தில் அமைதியற்ற நிலை ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்று அந்த சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.(ஐ)

## டெங்கு நோயை ஒழிக்க தேசிய கொள்கை தேவை

டெங்கு நோயை இல்லாதொழிப்பதற்குதேசிய கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது சுகாதார அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களால் சாதகமான முடிவுகள் கிடைக்கவில்லை.

மக்களுக்குத் தெளிவூட்டுவதால் மாத்திரம் டெங்கு நோய் பரவலை தடுக்க முடியாதென்று அது மேலும் கூறியுள்ளது.

## ஏழு கோரிக்கைகளை முன்வைத்து

# பிரதேச சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் ஐந்து நாள்களுக்கு வேலை நிறுத்தத்தில்

கொழும்பு, டிசெ.18

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நாடெங்குமுள்ள பிரதேச சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் நாளை முதல் தொடர்ந்து ஐந்து நாள்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை நிர்வாகத்தின்கீழ் 420 பிரதேச சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் பணிபுரிகிறார்கள்.

இவர்கள் நாடெங்குமுள்ள பிரதேசசெயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபைகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அனைவருமே பட்டதாரிகள். இந்த அதிகாரிகளில் பெரும்பாலானோர் விஞ்ஞானப் பட்டதாரிகளாவர்.

2006 ஆம் ஆண்டில் அரசு இதே தரத்திலுள்ள ஏனைய அரசதுறையினரின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தபோதும் தாங்கள் அன்று முதல் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் என்று பிரதேச சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அசங்க தர்மதாச தெரிவித்திருக்கிறார்.

தங்களுக்குரிய சரியான சம்பளம், உணவு, மருத்துவம் மற்றும் அனர்த்தங்களுக்கான நஷ்டஈடுகள் ஆகிய கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இவை உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் இறங்கவுள்ளனர் எனவும் அசங்க தர்மதாச மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

**நாளை**

19.12.2016
திங்கட்கிழமை
திதி : சஷ்டி முன்னிரவு 11.14 வரை
நட்சத்திரம்: மகம்
மாலை 6.24 வரை
சுபநேரம் : 12.23 – 1.53
இராகுகாலம் : 7.53 – 09.23

# அங்கவீனமான இராணுவத்துக்கு முக்கியத்துவம் வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதுவுமில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா கவலை தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.18

யுத்தத்தால் அங்கவீனமான இராணுவத்துக்கு அரசு விசேட நிதி ஒதுக்கீடுகளை, விசேட சலுகைகள், திட்டங்களை மேற்கொள்வது போன்று வடக்கில் யுத்தம் காரணமாக அங்கவீனமானவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாற்றுவலுள்ளோர் கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

2017 வரவு செலவுத் திட்டத்தில் யுத்தத்தில் அங்கவீனமான இராணுவத்துக்கு விசேட நிதி ஒதுக்கீடுகளும் விசேட சலுகைகளும் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் வடக்கில் யுத்தத்தால் அங்கவீனமானவர்களுக்கு அவ்வாறு எந்த விசேட திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எம்மை இன்றும் வேறுபாட்டுடன்தான் பார்க்கின்றார்கள். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நான் பல தடவைகள் பேசியிருக்கின்றேன். எங்கள் மாற்று வலுவுள்ள பிள்ளைகளை புலிகளாக தொடர்ந்தும் பார்க்க வேண்டாம். அவர்கள் புனர்வாழ்வுபெற்று இந்த சமூகத்தில் இணைந்து வாழ்பவர்கள்.

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற இந்த அரசு தெற்கில் உள்ளவர்களுக்கு வழங்கும் விசேட சலுகைள் போன்று எமது பிள்ளைகள் விடயத்திலும் விசேட சலுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் பற்றி, அவர்களின் உரிமைகள், நலன்கள் பற்றிக் கதைப்பவர்களாக மட்டும் நாம் இருந்து விடாது எங்கள் அடி மனங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்த மண்ணின் விடிவுக்காக - தமிழ் இனத்தின் விடுதலைக்காக - தம்மை அர்ப்பணித்த பலர் இன்று கையை இழந்து காலை இழந்து பல்வேறு பட்டப் பெயர்களுடன் கூனிக் குறுகி வாழ்கின்றனர். இவர்கள் தொடர்பான சமூகத்தின் மன நிலை மாறவேண்டும். அன்று அவர்களுக்கு எப்படி மதிப்புக் கொடுத்தோமோ அதனைவிட மேலான மதிப்பு கொடுக்க வேண்டும். - என்றார்.



மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் தலைவர் ஆ.நேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வி. தபேந்திரன், பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-70)

## புனர்வாழ்வு பெற்ற மூவர் விடுவிப்பு

வவுனியா, டிசெ.18

ஒரு வருட புனர்வாழ்வைப் பூர்த்தி செய்த மூவர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற முன்னாள் போராளிகளுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வின் போதே இவர்களை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புகளைப்பேணிய குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்ற உத்த ரவுக்கமைய ஒரு வருடபுனர்வாழ்வைப் பூர்த்தி செய்திருந்த மூன்று பேரே இவ்வாறு கையளிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லப்பா சிவநாதன் (வயது - 43), அம்பாறையைச் சேர்ந்த தியாகராசா முரளிதரன் (வயது - 31) மற்றும் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமரசிங்கம் (வயது- 38) ஆகியோரே இவ்வாறு புனர்வாழ்வு இணைப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்காவால் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர். (ஐ-100)

## தொலைந்த ஏ.ரி.எம். அட்டையால் ரூ.ஒரு லட்சத்து 51 ஆயிரம் இழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

ஏ.ரி.எம். அட்டையைத் தவறவிட்ட ஓட்டோ சாரதி ஒருவரின் வங்கி கணக்கில் இருந்து ஒரு லட்சத்து 51 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

உரிமையாளர் தனது ஓட்டோவைத் திருத்துவதற்காக யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் விட்டுச் சென்றுள்ளார். இந்த நிலையில் ஓட்டோவில் ஏ.ரி எம்.அட்டையைத் தவறவிட்டு சென்றுள்ளார்.

வங்கி அட்டையைக்காணாத நிலையில் மேற்படி உரிமையாளர் இது தொடர்பில் வங்கியில் முறைப்பாடு செய்திருந்தார். இதன் போது கணக்கில் இருந்த ஒரு லட்சத்து 51 ஆயிரம் ரூபா பணம் முழுவதும் திருட்டு போனமை தெரியவந்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதியும் 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் மூலம் குறித்த ஏ.ரி.எம். அட்டையைப் பயன்படுத்திப் பணம் எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கண்காணிப்புக் கமராவின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-9)

## மண்டைதீவு வீதி கடலோரத்தில் சதுப்பு நிலத் தாவரங்கள் நடுகை


மண்டைதீவு, டிசெ.18

மண்டைதீவு பிரதான வீதி கடலோரத்தில் கடல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

மண்டைதீவு வீதி, மண்டைதீவு சந்திக்குத் திரும்புவதற்கு முன்னான பகுதியின் சிறிய ஓடையின் வீதியின் இருபுறங்களிலும் ஒரு முழு இடைவெளியில் நேராக நிரைகளில் சதுப்பு நில தாவரங்கள் நடப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு சிறிய ஊன்று தடிகளும்ஆதாரமாக நடப்பட்டுள்ளன. இந்தத் தாவரச் செடிகள் தடிகளுடன் கட்டப்பட்டும் உள்ளன. (இ-20)

## மூவின பெண்களின் ஆற்றுப்படுத்தல் தலைவியாக வவுனியா பெண் தெரிவு





கொழும்பு, டிசெ.18

அகில இலங்கை ரீதியாக போருக்கு பின்னர் மூவின பெண்களையும் ஆற்றுப்படுத்தல் தலைவியாக வவுனியாவைச் சேர்ந்த திருமதி ச.கமலா தேவி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போருக்கு பின்னரான குணப்படுத்தல் என்னும்தேசிய மட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நோர்வே தூதுவர் மற்றும் அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரால் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, காணாமற்போனோரின் உறவுகளுடன் இணைந்து தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல் கொடுத்து வரும் ச.கமலாதேவியை தமிழ் விருட்சம் அமைப்பு நேற்று முன்தினம் கௌரவித்திருந்தது. அமைப்பின்வவுனியா அலுவலகத்தில் வைத்து, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் இந்தக் கௌரவிப்பை வழங்கினார்.

இதன்போது கனடா நந்தா உணவகம், வன்னி பட்டறை ஊடாக காணாமற் போன உறவுகளின் பிள்ளைகள், வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிள்ளைகள் என 30 பேரின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்த உதவிகளை வழங்கியது.

இது மாதாந்த உதவு தொகையாக தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கியது. இந்தத் தொகை மாதா மாதம் வழங்கப்படவுள்ளது. (ஐ-100)

## மன்னார் முதியோர் நலன் கருதி அலங்கார மீன்வளர்ப்பு திட்டம்

மன்னார், டிசெ.18

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வங்காலை கிராமத்தின் முதியோர் சங்கத்தினர் தமது சங்கத்திலுள்ள அங்கத்தவர்களது நலனுக்காக அலங்கார மீன்வளர்ப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்து தருமாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ் வரனிடம் கேட்டுள்ளனர்.



அதற்கு அமைவாக, அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் குறித்த அலங்கார மீன் வளர்ப்புத் திட்டத்துக்கு 5 லட்சம் ரூபாநிதியை ஒதுக்கித் தருவதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்துக்கான பொருத்தமான இடத்தையும் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், வங்காலை பங்குத் தந்தை, மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார், வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி பா.நிருபராஜ், வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மைக்கல் கொலின், முதியோர் சங்க நிர்வாகத்தினர், குறித்தபகுதி கிராமமட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ஐ)

பேராசிரியர்
ஜெயதேவ உயன்கொட



# நல்லாட்சி அரசாங்கத்தின் இன்றைய நிலை!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தங்களுடைய 'நல்லாட்சி' அரசாங்கத்தின் அரசியல் வாய்ப்புக்களில் எஞ்சியிருக்கக்கூடிய சொற்பமானவற்றையும் கூட பாழாக்கிக் கொண்டிருக்கின்றமை பெரும் கவலை தருகிறது. 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றியை இயலுமானதாக்கிய வாக்காளர்களுக்கு கொஞ்சமேனும் விசுவாசமில்லாத முறையில் ஜனாதிபதி சிறிசேன செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடிப்பதற்கு படாதபாடுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீதான தலைமைத்துவத்தை நிலை நிறுத்த முடியுமென்ற நினைப்பில் அவர் கானல் நீரின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறார். தனிப்பட்ட அகங்காரம், நிர்வாகத் திறமையின்மை, ஆட்சி முறையின் முக்கியமான பிரச்சினைகளை அற்பமாகக் கருதுகின்ற சிறுபிள்ளைத்தனமான போக்கு ஆகியவற்றை பிரதமர் விக்கிரமசிங்கவிடம் காணக்கூடியதாக இருக்கிறது.

அதே வேளை கடந்த வருடம் ஜனவரியில் ராஜபக்ஷ அரசாங்கத்தை இலங்கை வாக்காளர்கள் வீழ்த்தியபிறகு, இப்போது ஊழல்தனமும் எதேச்சதிகாரப் போக்கும் கொண்ட ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டின் அரசியல் பாதையையும் விவாதத்தின் போக்கையும் மீண்டும் நிர்ணயிக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் மெய்யானவையாக வந்து கொண்டிருக்கின்றன. அதனிடையே சுமார் இருவருடங்கள் பதவியில் இருக்கின்ற நல்லாட்சி அரசாங்கத்தின் இருண்ட பக்கம் படிப்படியாக அமைப்பு முறைக்கு உட்படுத்தப்படுவதையும் அதே வேளை, பெருமளவுக்கு அம்பலமாக்கப்பட்டு வருகின்றதையும் அவதானிக்க முடிகிறது. பெரும் மனச் சஞ்சலத்துடன் இலங்கையின் தற்போதைய அரசியலை நோக்க வேண்டியிருக்கிறது. கவலை தருகின்ற நான்கு போக்குகளை இந்த அரசியலில் நான் காண்கிறேன்.

முதலாவதாக -

அரசாங்கம் அதற்கு ஆதரவான வாக்காளர்களிடமிருந்து கட்டுப்படுத்த முடியாதவகையில் தனிமைப்பட்டுக் கொண்டு போகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நல்லாட்சிக்கான ஆணையை வாக்காளர்கள் இன்றைய அரசாங்கத்துக்கு வழங்கியிருந்தார்கள். அதன் இரு தலைவர்களும் அமைச்சர்களும் (இவர்களின் உண்மையான எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை) அந்த ஆணையை தொடர்ந்து அலட்சியம் செய்து கொண்டு போகின்றமையால் மக்களிடமிருந்து தனிமைப்படும் போக்கு துரிதப்படுத்தப்படுகின்றது. அதன் சொந்த வாக்குறுதிகள் மீதான அரசாங்கத்தின் பற்றுறுதியில் அடையாளம் காணப்படக் கூடியதாக இருக்கின்ற மெத்தனமான போக்கை இனி மேலும் மறைக்கமுடியாது.

இரண்டாவதாக-

அரசாங்கம் அரசியல் திசைமார்க்கம் இல்லாததாக இருக்கிறது. அரசியல் வழிகாட்டலை வழங்குவதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் தவறிவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இவர்கள் இருவரும் கிரமமாக நிகழ்த்துகின்ற உரைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஆட்சியதிகாரத்தில் தாங்கள் இழைக்கின்ற தவறுகளையும் அதன் விளைவான தோல்விகளையும் புரிந்து கொள்வதற்கான அரசியல் மற்றும் அறிவாற்றல் கூட இருப்பதாகத் தெரியவில்லை. சுய விமர்சனத்தைச் செய்வதில் தங்களுக்குள்ள இயலாமை குறித்து அவர்கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறார்கள் போலவும் தெரிகிறது.

மூன்றாவதாக-

கடந்த வருடம் நல்லாட்சி அரசாங்கம் பிரகடனம் செய்த முக்கியமான கொள்கைக் கடப்பாடுகளை மீள்வடிவமைப்பதிலும் மலினப்படுத்துவதிலும் பாதுகாப்புத்துறை பிரதான பாத்திரமொன்றைச் சந்தடியில்லாமல் வகிக்கின்ற போக்கு மீளத்தலைகாட்டியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கடந்த வருடம் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இலங்கையில் முன்னர் நிலவிய ஏறுமாறான சிவில் இராணுவ உறவுகளை ஜனநாயக அமைதி நிலைக்கு அனுகூலமான முறையில் மீளச் சீரமைத்தது என்று சொன்னால் இப்போது அந்த முக்கியமான நல்லாட்சிப் போக்கு ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலின் பேரில் பெருமளவுக்கு தடுக்கப்படுகிறது போலத் தோன்றுகிறது.

> “அரசாங்கத்தில் இருக்கின்ற இரு அதிகார மையங்களும் ஒன்றை மற்றது ராஜபக்ஷ முகாமுடன் பேரம்பேசும் அரசியலில் ஈடுபடுகிறது எனக் குற்றஞ்சாட்டுகின்றபோது உண்மை நிலைவரம் சுலபமாகவே தெரிகிறது. பேரம் பேசும் அரசியலில் ஈடுபடுகின்ற விடயத்தில் இரு அதிகார மையங்களுமே குற்றப் பொறுப்புடையனவாகும்.”

நான்காவதாக -

அரசுக்குள்ளும் சமுதாயத்திலும் மீள அணிதிரட்டப்படுகின்ற சிங்கள தேசியவாத சக்திகளின் ஆதரவுடன் ராஜபக்ஷ சகோதரர்கள் அரசாங்கத்தை ஒரு குழப்ப நிலைக்கும் முடக்க நிலைக்கும் தள்ளிவிடக்கூடிய சாத்தியம் அதிகரித்திருக்கின்றது. இந்த அச்சுறுத்தலை எதிர்த்து முறியடிப்பதற்கான எந்த வொரு திறமையோ ஏன் ஆர்வமோ கூட நல்லாட்சி அரசாங்கத் தலைமைத்துவத்தால் வெளிக்காட்டப்படுவதாக இல்லை.

இத்தகையதொரு பின்புலத்தில் இலங்கையில் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்ற அரசியல் நெருக்கடியை பகுப்பாய்வுக்குட்படுத்தி அதற்கு பதில் தேட உதவக்கூடிய ஒரு ஆய்வுப்பொருள் குறித்து சுருக்கமாக ஆராய விரும்புகின்றன.

## வழமை நிலையாக்கல்

இலங்கையின் சமகால அரசியல் மாற்றத்தின் மிகவும் முக்கியமான ஒரு தறுவாயிலிலேயே 2015 ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் இலங்கையின் எதேச்சதிகார அரசியலை புதியதொரு கட்டத்துக்கு அதாவது மென்மையான ஏதேச்சதிகாரத்துக்கு எடுத்துச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்த தருணம் அது. பலவீனப்பட்டதொரு ஜனநாயகக் கட்டமைப்புக்குள் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படுவதையே மென்மையான எதேச்சதிகாரம் என்கிறோம். அது அரசின் ஜனநாயக அத்திபாரங்களைத் தூக்கியெறியாமல் அரசாங்கத் தலைவர்களினாலும் அதிகாரிகளினாலும் முன்னெடுக்கப்படுகின்ற எதேச்சதிகார நடத்தையுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால் அதை அரசாங்க எதேச்சதிகாரம் என்று அழைக்கலாம்.

ஆனால், அதற்கு முற்றிலும் மாறானதாக வன்மையான எதேச்சதிகாரம் அமைந்திருக்கிறது. அரசின் எதேச்சதிகார உருமாறுபாட்டுடனேயே அது நிகழ்கிறது. மென்மையான எதேச்சதிகார அரசாங்கங்களை ஜனநாயக ரீதியாகத் தேர்தல் வழிமுறைகளின் ஊடாக அதிகாரத்திலிருந்து தூக்கியெறிய முடியும். வன்மையான எதேச்சதிகார அரசை மாற்றுவதற்குப் பெரும் அரசியல் விலையைச் செலுத்த வேண்டியிருக்கும். இதை வன்முறையின் ஊடாகவே செய்ய வேண்டியிருக்கும். பெரும் இரத்தக் களரியும் சிலவேளைகளில் அரசியல் புரட்சியும் இடம்பெறக்கூடும். எமது நாட்டில் வன்மையான எதேச்சதிகாரத்தை நோக்கிய விதிவசமான அரசியல் உருமாறுதலைத் தடுத்து நிறுத்தியமைக்காக சகல ஜனநாயக சக்திகளையும் அரசியல் முதிர்ச்சி கொண்ட இலங்கை வாக்காளர்களையும் பாராட்டியேயாக வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது பதவிக் காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பாரேயானால் அவர் இலங்கையை தெற்காசியாவின் துருக்கியாகவும் தன்னை இன்னொரு தாஜிப் எர்டோகானாகவும் (தற்போதைய துருக்கி ஜனாதிபதி ) மாற்றியிருப்பார். அத்தகையதோர் ஆட்சியாளரின் கீழான அரசாங்கத்தை தேர்தல்களால் அல்ல நீண்ட வன்முறைப் போராட்டத்தாலேயே மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

கடந்த வருடம் ஜனவரிக்குப் பிறகு நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்களின் முன்னாலிருந்து வந்த பணி அவர்களை அதிகாரத்துக்குக் கொண்டுவந்து மென்மையானதோ அல்லது வன்மையானதோ எந்தவிதமான எதேச்சதிகாரமும் மீண்டும் ஏற்படாமல் தடுத்து நிறுத்தி அரசியல் மாற்றத்தை நிறுவனமயப்படுத்த வேண்டியதாகவே இருந்தது. இதுவிடயத்தில் சிறிசேன, விக்கிரமசிங்க தலைமைத்துவம் படுமோசமாகத் தோல்வி கண்டிருக்கிறது என்பதே எனது ஆய்வின் முடிவாக இருக்கிறது. தயக்கத்துடன் என்றாலும் தங்களது தோல்விகளை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் அவர்கள் இப்போது ராஜபக்ஷ சக்திகளுடன் நேர்மையற்ற கூட்டணிகளைச் செய்து கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள் போலத் தெரிகிறது. படுமோசமான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளையும் நீதித்துறைச் செயன்முறைகளையும் மலினப்படுத்தும் வகையில் அரசாங்கத் தலைவர்கள் மேற்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர, வேறு நம்பகமான விளக்கம் ஏதும் இதற்குக் கிடையாது. அரசாங்கத்தில் இருக்கின்ற இரு அதிகார மையங்களும் ஒன்றை மற்றது ராஜபக்ஷ முகாமுடன் பேரம் பேசும் அரசியலில் ஈடுபடுகிறது எனக் குற்றஞ்சாட்டுகின்றபோது உண்மை நிலைவரம் சுலபமாகவே தெரிகிறது. பேரம் பேசும் அரசியலில் ஈடுபடுகின்ற விடயத்தில் இரு அதிகார மையங்களுமே குற்றப் பொறுப்புடையனவாகும்.

மிகவும் அண்மைய உதாரணமாக, பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட விவகாரமொன்றைக் கூறமுடியும். ராஜபக்ஷ முகாமுடன் தொடர்புடைய ஒருவர் ஊழல் குற்றச் சாட்டுக்குள்ளாகியிருக்கிறார். அவர் கைது செய்யப்படமாட்டார் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சருக்கு ஊடகங்களின் தொலைக்காட்சி கமராக்களுக்கு முன்பாக நின்றுகொண்டு பொலிஸ் மா அதிபர் உறுதிமொழி வழங்கினார். அவரின் கோமாளித்தனத்தையும் அறவே ஏற்றுக்கொள்ள முடியாத அமைச்சரின் நடத்தையையும் காண்பிக்கும் வீடியோ பதிவுகள் சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவிக்கொண்டிருந்தன. நல்லாட்சி அரசாங்கம் எந்தளவு தூரத்துக்கு அரசியல் தார்மீக மற்றும் நிறுவன ரீதியான சீரழிவுக்குள்ளாகியிருக்கிறது என்பதை இது பிரகாசமாக அம்பலப்படுத்தியிருக்கிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதென்னவென்றால் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் பிரதமர் விக்கிரம சிங்கவுக்கு மிகவும் வேண்டியவர். பிரதமரின் உள்வட்டத்தின் ஓர்உறுப்பினர். இந்த அமைச்சரைப் பொறுத்தவரை நல்லாட்சியை விடவும் ராஜபக்ஷ முகாமுடன் தொடர்புடையவர்கள் கூடுதல் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள் போலும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# மனிதத்துவம்

06





## சாத்தர் பற்றிய ஓர் அறிமுகம்

உண்மையைத் தேடும் தத்துவார்த்த விசாரணைகள் அனைத்தும் மனிதனிடமிருந்தே தொடங்க வேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. ஏனெனில், மனிதனே வாழ்வியக்கத்தின் மையமாக நிற்கிறான். அவனே இருப்பின் மெய்ப் பொருளாகவும் இருக்கிறான். அவனிடமிருந்தே வாழ்வின் அர்த்தங்கள் அவிழ்கின்றன. அவனே அறிவியக்கத்துக்கும் ஆதாரமாக நிற்கிறான். அவனே தன்னையும் படைத்து, வரலாற்றையும் படைக்கிறான். அவனே தன்னையும் தேடி, சத்தியத்தையும் தேடுகிறான். இந்த அபூர்வமான மனிதனை, அவனது முழுமையில் தரிசித்துக் கொள்வது சாத்தியமா? அக நிலையிலும் புறநிலையிலும் உருவாக்கம் பெறும் மனிதனை முழு மனிதனாகக் கண்டுகொள்வது எப்படி? சாத்தரை உறுத்தி வந்த கேள்வி இது.

பிரெஞ்சு இருப்பியத்தின் பிரதம குருவாகவும் நவ மாக்ஸியத்தின் தத்துவ வித்தகராகவும், ஒரே சமயத்தில் இருவேறுபட்ட கருத்து நிலைகளில் கால் ஊன்றி நின்றபடி, மனிதனை அவனது ஆழத்தில் தரிசிக்க விழைந்தார் சாத்தர்.

இருப்பியம் மனிதனை ஒரு பரிணாமத்தில் விசாரணை செய்கிறது. இந்தத் தத்துவம் மனிதனை தனிமனிதனாகக் காண்கிறது. தனிமனிதனின் வாழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தனி மனிதனின் அகவய வாழ்வை, அவனது உலகத்தை ஆழமாகப் பார்க்கிறது. எனவே, இருப்பியம் காணும் மனிதன் அகமனிதன். இந்த அக மனிதன் முக்கியமானவன். ஆனால், அவன் முழு மனிதன் அல்லன்.

மனித வாழ்வின் சமூகப் பரிமாணத்தை இருப்பியம் செம்மையாகப் பார்க்கவில்லை. சமூக உலகத்தில், அதன் அசைவியக்கத்தில் மனிதனை நிலைநிறுத்திப் பார்க்கவில்லை. இதனால் சமூகத்தைப் படைக்கும் வரலாற்று மனிதனை இருப்பியம் கண்டுகொள்ளவில்லை. இதுதான் இருப்பிய தத்துவத்தின் பிரதான குறைபாடு. இந்தக் குறைபாட்டை மாக்ஸியம் நிவர்த்தி செய்து விடுகிறது. இந்த வகையில், மாக்ஸியம் ஒரு புதுமையான சமூக – வரலாற்றியல் நோக்கு என்பது சாத்தரின் கருத்து.

மாக்ஸியம் சமூக உலகத்தின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. சமூக வாழ்வுக்கும், சமூக உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதனைத் தனி மனிதனாகக் காணாமல், சமூக உறவுகளைச் சுமந்து நிற்கும் சமூகப் பிறவியாகக் காண்கிறது. எனவே, மாக்ஸியம் காணும் மனிதன் சமூக மனிதன். மனிதனைச் சமூக மனிதனாகக் கண்டு, அவனை சமூக உற்பத்தி உறவுகளில் நிலைநிறுத்தி, அந்த உறவுகளை வர்க்க உறவுகளாகப் பார்த்து, அந்த வர்க்க உறவுகளால் எழும் முரணியப் போராட்டத்தை வரலாற்றின் அசைவியக்கமாக விளக்கி, மனிதனை வரலாற்றுப் படைப்பாளியாகச் சித்திரிக்கின்றது மாக்ஸியம். எனினும், மாக்ஸியம் புலப்படுத்திக் காட்டும் சமூக மனிதனும் முழு மனிதன் அல்லன் என்பது சாத்தரின் வாதம்.

மாக்ஸிய மனிதனுக்கு சமூக முகம் இருக்கிறது; வரலாற்று முகம் இருக்கின்றது; ஆனால், மனித முகம் இருக்கவில்லை என்பது சாத்தரின் கருத்து. சாத்தரின் பார்வையில் இந்த மனித முகம் என்பது மனிதத்தைக் குறிக்கிறது; மனிதாசாரத்தைக் குறிக்கிறது. இந்த மனிதாசாரம் என்பது மானிடத்தின் பொதுவுடைமை அல்ல. அது மனிதர்களின் தனிவுடைமை. ஒவ்வொரு தனிமனிதனும் தனது வாழ்வனுபவத்திலிருந்து சுயமாகத் தேடிக் கொள்ளும் தனி இயல்பு அகவயமான அனுபவத்திலிருந்து பெறப்படும் இந்தத் தனிமனிதத்துவத்தை மாக்ஸியம் மறுதலிக்கிறது என்பது சாத்தரின் நிலைப்பாடு. மனிதனானவன் தனது தேர்வுகள், தீர்மானங்கள், செயற்பாடுகளில் இருந்து, ஒட்டுமொத்தத்தில் தனது உலகானுபவத்திலிருந்து உருவாக்கிக் கொள்ளும் தனி மனிதத்துவத்தை நிராகரிப்பதால், மாக்ஸியம் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை என்பது அவரது வாதம்.

இருப்பியம் மனிதனை ஒரு பரிணாமத்தில் விசாரணை செய்கிறது. இந்தத் தத்துவம் மனிதனை தனிமனிதனாகக் காண்கிறது. தனி மனிதனின் வாழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனிதனின் அகவய வாழ்வை, அவனது உல கத்தை ஆழமாகப் பார்க்கிறது. எனவே, இருப்பியம் காணும் மனிதன் அகமனிதன். இந்த அக மனிதன் முக்கியமானவன். ஆனால், அவன் முழு மனிதன் அல்லன். மனித வாழ்வின் சமூகப் பரிமாணத்தை இருப்பியம் செம்மையாகப் பார்க்கவில்லை. சமூக உலகத்தில், அதன் அசைவியக்கத்தில் மனிதனை நிலைநிறுத்திப் பார்க்கவில்லை. இதனால் சமூகத்தைப் படைக்கும் வரலாற்று மனிதனை இருப்பியம் கண்டு கொள்ளவில்லை. இதுதான் இருப்பிய தத்துவத்தின் பிரதான குறைபாடு. இந்தக் குறைபாட்டை மாக்ஸியம் நிவர்த்தி செய்து விடுகிறது. இந்த வகையில், மாக்ஸியம் ஒரு புதுமையான சமூக – வரலாற்றியல் நோக்கு

பொருளுற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட பொருளிய வாழ்வுக்கு மாக்ஸியம் முதன்மை கொடுக்கிறது. பொருளியல் புற நிலைகளின் நிர்ணயத் தன்மையை வலியுறுத்துகின்றது. பொருளிய வாழ்வும் வரலாற்றுச் சூழலும் சமூகத்தின் கருத்துலகை நிச்சயித்து விடுவனவாகக் கூறுகிறது. மனித மனமானது வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல; பொருளிய வாழ்வே மனித மனத்தை நிர்ணயித்து விடுகின்றது என்ற கருத்தை முன்வைக்கிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில், அகநிலையை நிர்ணயிப்பது புறநிலைகள்; மன உலகத்தை நிர்ணயிப்பது பொருளுலகம்; தனி மனிதத்தை நிர்ணயிப்பது சமூகம்; இவ்விதம் காலம், இடம், சமூக சூழல் என்ற ரீதியில் புற உலக நிர்ணய சக்திகளின் ஆதிக்க அழுத்தத்துக்கு உட்பட்டதாக மனித மனம் வரையறுக்கப்படுகிறது. மாக்ஸியத்தின் இந்தப் பார்வையை 'பொருளிய நிர்ணய தத்துவம்' என விமர்சிக்கின்றார் சாத்தர். இது முற்று முழுதாக மனித மனத்தையும், மனிதனின் அக வாழ்வையும், புறநிலை நிர்ப்பந்தங்களுக்குள் சிறைப்படுத்தி விடுகிறது; மனித பிரக்ஞையின் சுயாதீனத்தையும் சிருஷ்டித் தன்மையையும் இது மறுதலிக்கின்றது என்பது சாத்தரின் குற்றச்சாட்டு.

காலம்,இடம், சூழல் என்ற ரீதியில் புறநிலைகள் மனிதனின் அகநிலையில் பாதிப்புக்களை விழுத்துகின்றன என்பதை சாத்தர் மறுக்கவில்லை. சமூகப் பொருளிய வாழ்வும், சமூக உறவுகளும் மனிதனின் சிந்தனை உலகை நிச்சயித்து, நெறிப்படுத்தி விடுகின்றன என்பதையும் அவர் மறுக்கவில்லை. ஆயினும், மன உலக வாழ்வை – தனி மனித இயல்பை – முற்றுமுழுதாகப் புற உலக நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படுத்த முனைவது தவறு என்கிறார் சாத்தர். மனித மனமானது புற உலக நிர்ப்பந்தங்களுக்கு அப்பால் – நிர்ணய அழுத்தங்களுக்கு அப்பால் – விஞ்சி எழும் விழிப்புத் தன்மை கொண்டது; சிருஷ்டித்தன்மை கொண்டது; சுயாதீனமுடையது என்பது சாத்தரின் வாதம்.

மனித மன இயக்கத்தை முற்றுமுழுதாகப் பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் முடக்கிவிடமுடியாது. மனவுலகத்தைப் பொருளுலகம் முற்றுமுழுதாக நிர்ணயிப்பதாயின் இந்த உலகத்தில் புரட்சிகரமான மாற்றம் எதுவும் நிகழ்வது சாத்தியமில்லை என்கிறார் சாத்தர். ஆனால், உலகம் சதா மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. இந்த மாற்றமும் முன்னேற்றமும் நிகழ்வது எப்படி? சிந்தனை வளர்ச்சியும், சிருஷ்டி ஆற்றலும் இல்லாமல் மனித நாகரீகங்கள் தோன்றுவது எப்படி? மனித சிந்தனைக்கு சிறகுகள் இருக்கின்றன. அதனைப் பொருளுலகச் சிறைக்குள் பூட்டி வைக்க முடியாது. பொருளுலக நிர்ப்பந்த விலங்குகளை உடைத்துக்கொண்டு வெளியில் வரும் ஆற்றல் மனித பிரக்ஞைக்கு இருக்கிறது என்கிறார் சாத்தர்.

மனித மனமானது ஆழமான விழிப்புணர்வைப் பெறும் அபாரமான தன்மையைக்கொண்டது. விழிப்புணர்வுகொள்ளும் மனதில் வெளிச்சம் பிறக்கிறது.. அந்த வெளிச்சத்தால் புற உலக நிர்ப்பந்தங்கள் பிரக்ஞைக்குப் புலனாகிறது. இந்த புரிந்துணர்வால் நிர்ணயத்தின் பிடியில் இருந்து மனமானது விடுதலைபெற்றுக் கொள்கிறது. இவ்விதம் விடுதலைபெறும் மனம் தான் புரட்சிகர மனம். இந்த புரட்சிகர பிரக்ஞைதான் புரட்சிகரமாகச் சிந்திக்கும்; செயற்படும்; புரட்சியையும் செய்யும்.

அகவாழ்வும் புறவாழ்வும் புணர்ந்து பிரவேசிப்பதுதான் முழு மனிதத்துவம். இருப்பியம் மனிதனின் அகவாழ்வையும் மாக்ஸியம் மனிதனின் புறவாழ்வையும் ஆழமாகத் தரிசித்து நிற்கும் தத்துவங்கள். எனவே, இருப்பியமும் மாக்ஸியமும் இணைந்து கொண்டால் முழு மனிதனைக் கண்டுகொள்வது சாத்தியம் என சாத்தர் எண்ணினார். 1960 இல் அவர் எழுதிய (Critique of Dialectical Reason) என்ற தத்துவார்த்த நூல் மாக்ஸியத்தையும் இருப்பியத்தையும் இணைக்க முனைகிறது.

'மாக்ஸின் வரலாற்றுப் பொருளியமானது மனித சமூகங்களின் வரலாற்றுக்கு விளக்கத்தைக் கொடுக்கிறது. அதே சமயம் இருப்பியம் தனிமனித வாழ்வின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. இந்த இரு பார்வைகளையும் கோட்பாட்டு ரீதியாக ஒன்றிணைப்பதன் மூலம் சமூக வரலாற்று இயக்கத்தில் தனித மனிதனின் இருப்பை நிறுவி விடுவதே இந்த ஆய்வு நூலின் நோக்கம்' என்கிறார் சாத்தர்.

(தொடரும்...)

# இலங்கையில் பாரதி



## 05

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

''கே.சி.தங்கராஜா, கே.சி.சண்முகரத்தினம் ஆகிய இரு சகோதரர்களின் உள்ளத்தில் முகிழ்த்த பிராந்தியப் பத்திரிகை ஒன்றின் உருவாக்கத்துக்கான சிந்தனை 1958 இல் யாழ்ப்பாணத்தில், கலாநிலையம் என்ற பதிப்பகமாக வித்தூன்றப்பட்டு, 1959 பெப்ரவரியில் முளைவிட்டு வாரம் இருமுறையாக ஈழநாடு என்ற பெயரில் வெளிவரத் தொடங்கி, நாளும் பொழுதும் உரம் பெற்று வளர்ந்து, ஈற்றில் 1961இல் முதலாவது பிராந்தியத் தமிழ்த் தினசரியாக சிலிர்த்து நிமிர்ந்தது. அன்று தொட்டு இறுதியில் யாழ் மண்ணில் தன் மூச்சை நிறுத்திக்கொள்ளும் வரை அதன் இயங்கலுக்கான போராட்டம் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் பின்னிப் பிணைந்ததாகவே நகர்ந்து வந்துள்ளது. ஜூன் 1981இல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தையும், பூபாலசிங்கம் புத்தகசாலையையும் கொளுத்திய பேரினவாதத்தின் கண்களுக்கு ஈழநாடு காரியாலயமும் தப்பிவிடவில்லை. அதன் பின்னர் ஈழப் போராளிகளின் குண்டுத் தாக்குதலுக்கும் இலக்காகி, 1988 பெப்ரவரியில் தன்னைக் காயப்படுத்திக் கொண்டது. பின்னர் தொடர்ச்சியான பத்திரிகைச் செய்தித் தணிக்கைகள், அச்சுறுத்தல்கள், பொருளாதார நெருக்கடிகள் என்று சுற்றிச் சூழ்ந்த நிலையில் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.''





- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் ஈழகேசரியின் மறைவிற்குப் பின்னர் உதயமாகிய ஈழநாடு பத்திரிகையின் தோற்றத்தையும் அஸ்தமனத்தையும் லண்டனில் வதியும் நூலகர் நடராஜா செல்வராஜா ''ஈழநாடு என்றதோர் ஆலமரம்'' என்னும் கட்டுரையில் உணர்வுபூர்வமாகவும் அறிவார்ந்த தளத்திலும் பதிவுசெய்துள்ளார்.

ஈழநாடு ஸ்தாபகர் கே.சி. தங்கராசா கிழக்கிலங்கை காகித ஆலைக்கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் சிறந்த பணியாற்றி நாடாளுமன்றில் முன்னாள் நிதியமைச்சர் கலாநிதி என்.எம்.பெரேராவால் பாராட்டப்பட்டவர்.

இவருடைய கொழும்பு இல்லமே ஈழநாடு பத்திரிகையின் தென்னிலங்கை அலுவலகமாக இயங்கியது.

சமீபத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 1981 இல் யாழ்ப்பாணம் பொது நூலகம் தங்கள் பதவிக்காலத்தில் எரியூட்டப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரியிருந்தார்.

ஆனால், அக்காலத்தில் அதே அரசின் கூலிகளினால் ஈழநாடு என்ற ஆலமரமும் எரிக்கப்பட்டது என்பதை ஏனோ சொல்வதற்கு மறந்துவிட்டார். அதனை நினைவுபடுத்துவதற்கும் அங்கிருந்த தமிழ்த் தலைவர்கள் ஏனோ மறந்து விட்டனர்.



கே.பி ஹரன்

ஈழத்தமிழர்களின் குரலாக ஒலித்த ஈழநாடு முதல் இதழ் 1958 இல் வெளியானதும் நேரே கொழும்புத்துறையிலிருந்த யோகர்சாமிகளிடம்தான் ஆசிபெறுவதற்கு சென்றார்களாம். அவர் அந்த இதழைப் பார்த்துவிட்டு, ''ஏசுவார்கள், எரிப்பார்கள். துணிவுடன் தொடர்ந்து நடத்துங்கள்'' என்றுதான் ஆசி கூறினாராம்.

அவரது தீர்க்கதரிசனம் பலித்தது.

பாரதி இந்தியாவில் ஆசிரியராக இருந்த அனைத்துப் பத்திரிகைகளும் சுதந்திரவேட்கையையே வலியுறுத்தி வந்திருக்கின்றன. அவர் நடத்திய பத்திரிகைகளுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில் தடைவந்திருக்கிறது. அவரும் நண்பர்களும் புதுவைக்கு தலைமறைவாக தப்பியோடியிருக்கிறார்கள்.

வெள்ளிவிழாக் கண்ட யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையும் சோதனைகள் - தடைகள் பலவற்றையும் கடந்துதான் பயணித்து ஓய்வுற்றது.

ஈழகேசரி 1958 இல் நிறுத்தப்பட்டதும் அங்கிருந்த ஆசிரியர் இராஜ அரியரத்தினம் ஈழநாடுவில் இணைந்தார். கே.பி. ஹரன் ஆசிரியரானார்.

அ.செ.முருகானந்தன், எஸ்.எம்.கோபாலரத்தினம், பெருமாள், சசிபாரதி, எஸ். எஸ். குகநாதன், காசிலிங்கம், சபாரத்தினம், மகாதேவா, அனந்த பாலகிட்ணர், ஈ.கே. ராஜகோபால், கே.வி.ஜே. திருலோகமூர்த்தி, ஐயா சச்சிதானந்தம், கே.கே. ஐயாத்துரை, எஸ்.திருச்செல்வம், ஏ.பி. சூரியகாந்தன், கா.யோகநாதன், எஸ். ஜெகதீசன், ஏ.என்.எஸ் திருச்செல்வம், பார்வதி நாதசிவம், கந்தசாமி, இப்படிப் பலர் பணியாற்றிய பத்திரிகை ஈழநாடு.

இவர்களில் சிலர் மறைந்து நினைவுகளாகிவிட்டனர். சிலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். சென்றவிடத்திலும் விட்ட குறை தொட்ட குறையாக பத்திரிகைகளை நடத்தினர். சிலர் ஈழநாடு பத்திரிகை வாழ்க்கை குறித்த நினைவுகளை நூல்களாக வெளியிட்டனர்.

சிலர் ஈழநாடு பத்திரிகையில் பெற்ற அனுபவத்திலிருந்து கொழும்பில் வெளியான - வெளிவரும் பத்திரிகைகளில் இணைந்தனர். சிலர் தாம் பெற்ற ஈழநாடு அனுபவத்திலிருந்து ஊடகத்துறையின் வேறு துறைகளான வானொலி, தொலைக்காட்சி சேவைகளுக்கும் சென்றனர்.

நூலகர் செல்வராஜா குறிப்பிடுவதுபோன்று ஈழநாடு ஆலமரம்தான். இந்த விருட்சத்தின் நிழலில் வாழ்ந்தவர்கள் அன்றைய வாசகர்கள். அதில் கூடுகட்டி வாழ்ந்தவர்கள் மேற்சொன்ன பத்திரிகையாளர்கள்.

1981 இல் தீக்குளிக்கப்பட்ட சீதையாக ஈழநாடு மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவரத்தொடங்கிய காலத்தில் இதன் ஆசிரியராக பணியாற்றிய ந. சபாரத்தினம் அவர்களின் ஆசிரியத் தலையங்கங்கள் எளிமையும் கருத்துச் செறிவும் மிக்கதாக விளங்கின.

பத்திரிகையாளரான பாரதியும் எழுத்திலே எளிமையைக் கையாண்டவர்.



உருத்திரபுரம் பிள்ளையார் கோவில்

*''எளிய பதங்களைக் கொண்டு எளிய நடையில் காவியம் செய்து தருவோன் தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். தமிழா தெய்வத்தை நம்பு, பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதர்களாக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார்'' என எழுதியிருக்கிறார்.*

யாழ்ப்பாணம் ஈழநாடு அன்றைய தமிழ் சமுதாயத்திற்கு பாரதியின் இக்கருத்துக்கு இசைவாகவே செய்திகளை வழங்கியது. வாழ்ந்தது.

கொழும்பு பத்திரிகைகள் அங்கிருந்து முதல்நாள் இரவு தபால் ரயிலில் புறப்பட்டு வடபுலத்திற்கு மறுநாள் காலையில் வந்து சேர்வதற்கு முன்னர், ஈழநாடு சுடச்சுட செய்திகளுடன் மக்களிடம் சென்றுவிடும்.

மக்களின் நாடித் துடிப்பறிந்து பத்திரிகை வெளியிட்டவர் பாரதியார். பத்திரிகையில் உரைநடை எவ்வாறு அமையவேண்டும் என்று தமது அனுபவத்தில் அவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

*''தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்து, பலவருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக்காட்டிலும், தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது எனது கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.*

*சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல், நடை நேராகச்செல்ல வேண்டும். உள்ளத்திலே நேர்மையும் தைர்யமும் இருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வசன நடை கம்பர் கவிதைக்குச்சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்கவேண்டும்.''*

ஈழநாடு பத்திரிகை யாழ் மண்ணில் தோன்றியது முதல் அஸ்தமிக்கும் வரையில் பாரதியின் இச்சிந்தனையின் தாக்கத்துடன் வெளிவந்தமைக்கு அங்கிருந்த சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகளும் முக்கியமானவை.

இலங்கை அரசியலில் தமிழ்த் தலைவர்களினால் யாழ்ப்பாணத்தில் 1961 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

சமூகத்திற்காக பேசுவதும் சமூகத்தை பேசவைப்பதுமே ஒரு பத்திரிகையாளனதும் படைப்பாளியினதும் கடமை. அக்கடமையை யாழ்ப்பாணம் ஈழநாடும் அதில் பணியாற்றியவர்களும் வெளியிலிருந்து அதில் எழுதிய எழுத்தாளர்களும் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

குறிப்பிட்ட சத்தியாக்கிரகம் தொடர்பான செய்திகளை மக்களிடத்தில் உடனுக்குடன் எடுத்துச் சென்றதனாலும் ஈழநாடு விற்பனை அதிகரித்ததாக அக்கால வாசகர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அத்துடன் ஈழநாடு விற்பனை அதிகரிப்பதற்கு ஒரு முக்கியமான கொலைவழக்கும் காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

அதுதான் கோகிலாம்பாள் வழக்கு. 1963 இல் இலங்கையில் தமிழர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்ட கிளிநொச்சி உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயர் கொலை வழக்கு. அந்த ஐயரின் மனைவி குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் அமைந்திருந்த அசைஸ் நீதி மன்றத்தில் சுமார் மூன்று மாதங்கள் நடைபெற்ற பொழுது, ஈழநாடு பத்திரிகையில் பக்கம் பக்கமாகச் செய்தி வெளியானது. தினமும் 20 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியிருக்கிறது என்னும் தகவலை குறிப்பிட்ட வழக்குச் செய்திகளை தொடர்ந்து ஈழநாடுவில் எழுதிய நிருபர் கா.யோகநாதன் தமது கட்டுரை ஒன்றில் பதிவுசெய்துள்ளார். ( பத்திரிகையாளன் - ஈழநாடு வெள்ளிவிழா சிறப்பிதழ் - 1984)

ஈழநாடு இலங்கைத்தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தமைக்கு பாரதியின் அஞ்சாமை தாரக மந்திரமாக திகழ்ந்தது எனலாம். ஈழநாடுவில் ஆசிரியர் ந. சபாரத்தினம் எழுதிய ஆசிரியத்தலையங்கங்கள் சிலவற்றின் தொகுப்பு 'நூல் ஊரடங்கு வாழ்வு' 1985 இல் தமிழியல் பதிப்பகத்தினால் வெளியானது.

இதனை வெளியிட ஆக்கபூர்வமாக உழைத்தவர்கள் தற்பொழுது லண்டனில் வதியும் பத்மநாப ஐயர் மற்றும் அலை யேசுராசா ஆகியோர் என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

இலங்கையில் இவ்வாறு




'ஊரடங்கு வாழ்வு' நூல்

பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் தனித்தனி நூல்களாக தொகுக்கப்பட்டு பின்னாளில் வெளிவந்தமைக்கு ந. சபாரத்தினம் அவர்களின் 'ஊரடங்கு வாழ்வு' முன்னுதாரணமாகும்.

*(20 ஆம் பக்கம் பார்க்க..)*

# தொழில்நுட்பக்கதிர்

## நாசா வடிவமைத்துள்ள 20% ஒளி வேகத்தில் பயணம் செய்யும்




அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்படும் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா விண்வெளி தொடர்பான பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றது.


விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையத்தையும் நிறுவியுள்ள நாசா, விண்வெளி போக்குவரத்தை விரைவுபடுத்தும் மார்க்கங்களை கண்டறியும் முயற்சியிலும் மும்முரமாக செயற்பட்டு வருகின்றது.

இம் முயற்சியின் பயனாக 'நனோ ஸ்டார்ஷிப்' எனும் விண்வெளி ஓடத்தை வடிவமைத்து வருகின்றது.

இவ் விண்கலமானது ஒளியின் வேகத்தின் 20 சதவீத வேகத்தில் பயணம்செய்யக்கூடியவகையில்இருக்கும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் பயணிக்கும் வீரர்களுக்கு உண்டாகும் கதிர்ப்பு தாக்கத்தைக் குறைக்கும் வகையில் இவ் விண்வெளி ஓடம் சிலிக்கன் டை ஒக்சைட் கொண்ட நனோ தொழில்நுட்பத்தினால் வடிவமைக் கப்படுகின்றது.

## அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள முகம் பார்க்கும் ஸ்மார்ட் கண்ணாடி




ஸ்மார்ட்போனை ஆக்கிரமித்து வந்த அப்பிள் நிறுவனம் தற்போது ஸ்மார்ட் கண்ணாடிகள் எனும் தொழில்நுட்ப கண்ணாடியைச் செய்துள்ளது.

அப்படி என்ன தொழில்நுட்பம் இந்த ஸ்மார்ட் கண்ணாடியில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பார்க்கும் போது இக் கண்ணாடியிலும் அண்ட்ராய்ட் தான் இதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கண்ணாடியை நம் முகம் பார்க்க பயன்படுத்துவது வழக்கம். ஆனால் இந்த ஸ்மார்ட் கண்ணாடி நேரம், வானிலை போன்ற அனைத்து நிகழ்வுகளையும் அறியும் வகையில் மினி கணினியாகச் செயல்படுகிறது.

நம் கணினியில் இருப்பது போலவே இக் கண்ணாடியில் ஐகான்கள் காணப்படுகின்றன.

இதில் ஐ.ஒ.எஸ், அண்ட்ராய்ட் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் தொடுத்திரையின் மூலம் இதனைப் பயன்படுத்த முடிகிறது.

அப்பிள் ஐ.ஒ.எஸ் 10 இல் பயன்படுத்தப்பட்ட மென்பொருள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

தொலைபேசி லொக் ஆவதை போன்று இந்த ஸ்மார்ட் கண்ணாடியும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்பு லொக் ஆகி விடும். லாக் ஆகி விட்டால் ஸ்மார்ட் கண்ணாடி சாதாரண கண்ணாடி போல மாறிவிடும்.

## இரு மடங்கு வேகம், 4 மடங்கு தூரம்: உருவாக்கப்பட்டுள்ளது Bluetooth 5



Bluetooth™

வயர்லெஸ் மூலமாக தரவுகளை ஊடுகடத்தல் தொழில்நுட்பத்தில் Bluetooth ஆனது பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருந்தமை அறிந்ததே.

தற்போதுவரை தொலைபேசி சாதனங்கள் உட்பட, மடிக்கணினி களிலும் இந்த தொழில்நுட்பம் பயன்ப டுத்தப்பட்டு வருகின்றது.

புதிய பரிமாணங்களைக் கண்டு வரும் இத் தொழில்நுட்பத்தில் தற்போது மற்று மொரு புரட்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது Bluetooth 5 உருவாக்கப்பட் டுள்ளது.

இத் தொழில்நுட்பமானது முன்னைய Bluetooth 4 இனை விடவும் இரண்டு மடங்கு வேகம் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் நான்கு மடங்கு தூரத் திற்கு தரவுகளைப் பரிமாற்றம் செய்யும் ஆற்றலையும் கொண் டுள்ளது.

இந்த தகவலை Bluetooth Special Interest குழு உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இப் புதிய Bluetooth 5 தொழில் நுட்பமானது எதிர்வரும் சில மாதங்களில் பயன்பாட்டுக்கு வரும் எனவும் அவர்கள் கூறியுள்ளார்கள்.



## கணினிக்கு நிகரான வேகம் கொண்ட ஸ்மார்ட் போன் விரைவில்

அடுத்த ஆண்டு வெளியாக இருக்கும் மைக்ரோசொஃப்ட் 'சர்ஃபேஸ் ப்ரோ' ஸ்மார்ட்போன்கள் கணினிக்கு நிகரான வேகத்தில் இயங்கும் எனக் கூறப்படுகிறது.

மைக்ரோசொஃப்ட் சர்ஃபேஸ் ப்ரோ போனின் சிறப்பம்சங்கள் சார்ந்த தகவல்கள் வெளியாக தொடங்கியுள்ளன. ஆனால் குறித்த மொபைல் போன் தொடர்பான விவரங்கள் முழுமையாக வெளி யிடப்படவில்லை.

தற்சமயம் வெளியாகியிருக்கும் தகவல்களில் இது சர்ஃபேஸ் போன் தான் என்றும், இது ஒரு ஹைப்ரிட் போனாக இருக்கும் என்பது தெரியவந்திருக்கிறது.

உலகம் அறிந்த முன்னணி பதிப்பாகக் காணப்படும் மைக்ரோ சொஃப்ட் தான் தயாரித்து வரும் உயர் ரக ஸ்மார்ட்போன் ஆப்பிள் ஐ போனை விடவும் பெறுமதியானது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மைக்ரோசொஃப்ட் சர்ஃபேஸ் போன் குவால்காம் நிறுவ னத்தின் அடுத்த தலைமுறைக்கான வழிகாட்டியாக இருக்கும் என்றும் இது வாடிக்கையாளர்களின் மொபைல் போன் பயன்பாட்டை அடியோடு மாற்றிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஸ்மார்ட்போன் அதிக சக்தி வாய்ந்ததாக இருப்பதோடு அதிநவீன வடிவமைப்பையும் கொண்டிருக்கும் என்றும் கூறப்படு கின்றது.

இப் போன் விண்டோஸ் 10 இயங்குதளத்தில் இயங்கும் என் றும் கூறப்படுகின்றது. ஆகவே, இந்த ஸ்மார்ட்போனினை கணி னியாகவும் பாவிக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது.

குறித்த ஸ்மார்ட் போன் அடுத்த ஆண்டு முதல் பாவனைக்கு வரலாம் எனக் கூறப்படுகின்றது.

## இன்ராகிராமில் நேரடி ஒளிபரப்பு செய்யும் வசதி




புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவி லான வீடியோ கோப்புக்களை பகிர்ந்து மகிழும் வசதியைத் தரும் இன்ஸ்டாகிராம் ஆனது பல மில்லியன் கணக்கான பயனர் களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போது நேரடி ஒளிபரப்புக்களை செய்யும் வசதியையும் அறிமுகம் செய்துள்ளது.

முதன் முறையாக இவ் வசதி அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

இவ்வாறு ஒளிபரப்பப்படும் நேரடி வீடியோக்களை குறித்த நபரை இன்ஸ்டாகிராம் கணக்கில் பின்தொடர்பவர்கள் அனைவரும் பார்க்க முடி யும்.

இதேவேளை தனது தாய் நிறுவனமான பேஸ்புக்கில் தரப்படும் வசதிக ளில் இருந்து சற்று வித்தியாசமாகவே இவ் வசதி அறிமுகம் செய்யப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வார ராசி பலன்கள்

18.12.2016 முதல் – 24.12.2016 வரை

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**மேஷம்** :அச்சுவினி, பரணி, கிருத்திகை முதலாம் பாதம்



செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

சுக்கிரன் பலத்தால் செய்யும் தொழிலில் ஏற்றம் உண்டாகும். வெளிநாடு செல்லும் எண்ணம் பலருக்கு நிறைவேறும். சுபநிகழ்ச்சிகள் முதலில் தடைகள் ஏற்பட்டு பின்னர் நடைபெறும். அஷ்டமசனியால் எதிர்பார்க்காத பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். சிந்தித்து நடப்பது புத்திசாலித்தனமாகும். சனிக்கிழமைகளில் சனி பகவானை வணங்கினால் தீமை விலகிச் செல்லும்.

**ரிஷபம்** :கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்கள்



சுக்கிரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

இராசிநாதன் 9இல் வருவதால் இதுவரை இருந்த தடைகள் விலகும். குரு பலம் இருப்பதால் வேலை தேடுபவர்களுக்கு நல்லபணி கிடைக்கும். திருமணம் நடக்காதவர்களுக்கு விரும்பிய வரன் தேடிவரும். கண்டகச் சனி தொடர்வதால் கணவன், மனைவி இருவரும் அனுசரித்துச் செல்லவேண்டும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். வெள்ளிக்கிழமைகளில் பராசக்தியை வணங்கினால் நன்மைதொடரும்.

**மிதுனம்** :மிருகசீரிடம் 3,4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்



புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

இராசிநாதன் 7இல் இருப்பதால் தேவைகள் யாவும் கிடைக்கும். குடும்பத்தில் இருந்துவந்த சிக்கல் விலகும். எதிலும் பொறுப்புடன் நடந்து பல நல்லசெயல்களை முடிப்பீர்கள். குரு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் உடல் நலம் சீராகும். செலவுகள் குறையும். சனி ராகு பலத்தால் செய்யும் தொழிலில் பாராட்டு புகழும் கிடைக்கும். மனதில் இருந்த சஞ்சலம் நீங்கும். புதன்கிழமைகளில் பெருமாளை வணங்கினால் நினைத்தது நடக்கும்.

**கடகம்** : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்



சந்திரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

சுக்கிரன் இராசியைப் பார்ப்பதால் சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். குரு 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் தந்தைவழியில் ஆதரவு கிடைக்கும். ராகு 2 இல் கேது 8 இல் இருப்பதால் யாருக்கும் முன் நின்றுபணம் வாங்கிக் கொடுக்க வேண்டாம். பேசும் போது எதைப் பேசவேண்டுமோ? அவசரப்பட்டு யாருக்கும் வாக்குக் கொடுக்கவேண்டாம். பொறுமை அவசியம் தேவை. திங்கட்கிழமைகளில் சிவனை வணங்கினால் நற்பலன் நடக்கும்.

**சிம்மம்** : மகம், பூரம், உத்திரம் முதலாம் பாதம்



சூரியபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

குரு 2 இல் புதன் 5 இல் இருப்பதால் நல்ல முடிவு எடுத்து எண்ணற்ற சாதனைகள் செய்வீர்கள். மற்றவர்கள் புகழும்படி நடந்து கொள்வீர்கள். சனி 4 இல் இருப்பதால் வாகனங்களில் செல்லும் போது கவனமாக இருக்கவும். குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் வந்தாலும் அதனைச் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். ஞாயிற்றுக் கிழமைகளில் கதிரவனை வணங்கினால் முயற்சி வெற்றியாகும்.

**கன்னி** : உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்



புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

தொழில் செய்யும் இடத்தில் பலருக்கு விரும்பிய இடத்தில்பணி மாற்றம் கிடைக்கும். குரு இராசியில் இருப்பதால் ஆன்மீகபணிக்கு முடிந்த உதவி செய்வீர்கள். ராகு-கேதுபலத்தால் எதிரிகள் தானாக விலகிச் செல்வார்கள். உறவினர்கள் உங்களுக்கு பலவிதத்தில் உதவியாய் இருப்பார்கள். சுபநிகழ்ச்சிகள் கூடுதல் முயற்சி செய்தால் நடைபெற வாய்ப்பு உண்டாகும். புதன்கிழமைகளில் ஆஞ்சநேயரை வணங்கினால் அனுகூலம் ஏற்படும்.

**துலாம்** : சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்



சுக்கிரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

புதன் 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் செய்யும் தொழிலில் ஆற்றல் அதிகமாகும். வெளியூர்ப் பயணங்களால் நன்மை இருக்கும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். சனி 2 இல் குரு 12 இல் இருப்பதால் சுபநிகழ்ச்சிகள் தள்ளிப் போகும். பேச்சில் நிதானம் தேவை. அவசரமுடிவுகள் வேண்டாம். வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமியை வணங்கினால் மன நிறைவு ஏற்படும்.

**விருச்சிகம்** : விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை



செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

புதன் 2 இல் இருப்பதால் பேச்சுத்திறமையால் எதையும் சாதிப்பீர்கள். குரு பலம் இருப்பதால் குடும்பத்தில் நடக்க வேண்டிய நல்ல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும். தடைகள் தானாய் விலகும். பலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். இராசியில் சனிகேது 4 இல் இருப்பதால் வீண் அலைச்சல் உண்டாகும். எதிர்பார்க்காத செலவுகள் உண்டாகும். மனதில் நிம்மதி இருக்காது. செவ்வாய்க்கிழமைகளில் முருகனை வணங்கினால் உயர்வு உண்டாகும்.

**தனுசு** : மூலம், பூராடம், உத்திராடம் முதலாம் பாதம்



குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

இராசிநாதன் 2ஆம் வீட்டைப் பார்ப்பதால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த தொல்லைகள் விலகும். இராசியில் புதன் இருப்பதால் உங்கள் திறமையைக் கண்டுபலரும் பாராட்டுவார்கள். ஏழரைச்சனி நடப்பதால் எதிர்பாத்த நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற தாமதம் ஏற்படும். பணி செய்யுமிடத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை வணங்கினால் பொன், பொருள் சேரும்.

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்



சனிபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

இராசிநாதன் குரு இருவரின் பலத்தால் செய்யும் தொழிலில் முன்னேற்றம் வாழ்வில் நல்லமாற்றங்கள் ஏற்படும். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். கடன்கள் குறைந்து சேமிப்பு அதிகமாகும். பிரச்சினைகள் இருந்தால் மெல்ல விலகிடும். ராகு-கேதுவால் குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். மற்றவர்கள் பேசுவதை அறிந்து அதற்கு ஏற்ப பேசவும். சனிக்கிழமைகளில் சனி பகவானை வணங்கினால் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

**கும்பம்** : அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்



சனிபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

சூரியன், புதன் இருவரின் பலத்தால் உழைப்பால் பெருமை கிடைக்கும். செவ்வாய் பார்வை பலத்தால் சிலருக்கு புதிய சொத்து உண்டாகும். இராசியில் கேது குரு 8 இல் இருப்பதால் சிலநேரம் தடைகள் ஏற்படும். வீண் அலைச்சலைக் குறைக்கவும். யாரிடமும் பகை காட்டவேண்டாம். முன்கோபத்தைக் குறைத்து அமைதியாக இருக்கவேண்டும். சனிக்கிழமைகளில் விநாயகரை வணங்கினால் மேன்மை கிடைக்கும்.

**மீனம்** : பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி



குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

இராசிநாதன் சுக்கிரன் பலத்தால் வெற்றிபல வழிகளில் உண்டாகும். செய்யும் தொழிலில் வருவாய்கூடும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். சோதனைகள் வந்தாலும் தானாக விலகிச் செல்லும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு உண்டாகும். திருமணம் நடக்காத பெண்களுக்கு தகுந்தவரன் அமையும். வழக்குகள் இருந்தால் உங்கள் பக்கம் வெற்றியாகும். வியாழக்கிழமைகளில் ஐயப்பனை வணங்கினால் அனுகூலம் ஏற்படும்.

# பூமி வெப்பமடைந்து வருகிறது! காரணம் பருவநிலை மாற்றமே!!


உலக நாடுகள் எல்லாம் உற்று நோக்கும் தற்போதைய முக்கிய பிரச்சினை பூமி வெப்பமடைந்து வருவுதுதான். இதற்கு முக்கிய காரணமாக பருவநிலை மாற்றம் என்று சொல்லப்படுகிறது.

பருவநிலை மாற காரணம் என்ன? மனிதர்களின் விஞ்ஞான வளர்ச்சியாலும், பொறுப்பற்ற செயலாலும் தான் இந்த பருவநிலை மாற்றம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க வானிலை ஆராய்ச்சி மையம் ஒன்று இந்தியா, அமெரிக்கா, கனடா மற்றும் ஆபிரிக்கா ஆகிய கண்டங்களைச் சேர்ந்த 18 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

பூமியில் நிலப்பரப்பு, கடல்பரப்பு, வளிமண்டல இரசாயன மாறுதல், சுற்றுச் சூழல், உயிரியல் என எல்லாவற்றையும் மனிதன் மாறுதலுக்கு உட்படுத்தி விட்டான்.

பூமியின் அரணாக விளங்கும் மலைகளை உடைத்தும், மரங்களை அழித்தும், நதிகளின் பாதைகளைத் திருப்பியும், நகரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.



உலகின் அரைப் பகுதிக்கு மேற்பட்ட மக்கள் நகர்ப் பகுதிகளில் வசிக்கிறார்கள். 75 சதவீத நிலப்பரப்பு மனிதனால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக தான் 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி, அதிகமான வெள்ளப் பெருக்கு, காடுகள் தீக்கிரையாவது, பனிப் பாறைகள் உருகுவது போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது.

2015 இல் சென்னையில் ஏற்பட்ட கடுமையான மழை, வெள்ளப்பெருக்கு, நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி போன்ற நிகழ்வுகள் ஏற்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் வகையில் உலகநாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து சுற்றுச் சூழல் பாதுகாப்புத நலத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

உலகம் அழிவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில் உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

# சிறந்த அம்மாவாக இருக்க வேண்டுமா?

★ தாயாக இருப்பது சில நேரங்களில் சற்று சவாலானதாகவே இருக்கும். அதனால் எப்போதும் அமைதியாகவும் மற்றும் பொறுமையாகவும் இருக்க முயற்சி செய்யுங்கள்.

★ உங்கள் குழந்தைகளின் விருப்பங்களில் கவனம் செலுத்துங்கள்.

★குழந்தை கோபமாக இருந்தால், அப்போது அவர்களிடம் மனம் விட்டு பேசி, அவர்களுக்கு ஒரு நல்ல தோழனாக இருக்க வேண்டும்.

★பணவிடயத்தில் மிகவும் இறுக்கமாக இருக்க வேண்டாம். எப்போதும் பணத்தை சேமிப்பது பற்றிய அறிவுரைகளைச் சொல்லி, எந்த ஒரு பொருளையும் வாங்கிக் கொடுக்காமல் இருந்தால், பின் அவர்கள் மனதில் உங்கள் மீது இருக்கும் அன்பு குறைய நேரிடும்.

எனவே அவ்வப்போது ஏதேனும் விருப்பமானதை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

★ உங்களை எப்பொழுதும் அவர்களுடன் பேசுவதற்கு ஏற்ற நபராகவும், புரிந்துகொள்ளக் கூடியவராகவும் மற்றும் அவர்கள் பேசுவதை செவிகொடுத்து கேட்பவராகவும் இருப்பதற்கு,



உங்களால் முடிந்தவரை கடினமான முயற்சிகளை எடுங்கள்.

★தங்களிடம் பேசுவதற்கு யாரும் இல்லாமலிருந்தால், பின் குழந்தைகள் தனிமையிலேயே இருப்பார்கள். எனவே அவ்வப்போது அவர்களிடம் பேசும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

★குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். கோபப்பட வேண்டாம். உங்கள் குழந்தையின் எண்ணம் உங்களுடையதிலிருந்து மாறுபடுவதை ஏற்றுக் கொள்ளுங்கள். குழந்தைகளை எப்போதுமே குழந்தையாக எண்ணாமல், அவர்களின் வயதுக்கு ஏற்றவாறு மாறுங்கள்.

★தவறுசெய்தால் அதனைஏற்றுக்கொள்ளுங்கள் மற்றும் மன்னிப்பு கேட்க பயப்படாதீர்கள். குழந்தைகளுக்கு மன்னிப்புக் கேட்பதன் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொடுங்கள்.

★குழந்தை தனது தந்தையை நேசிப்பதற்கு மதிப்பளித்திடுங்கள். உங்கள் குழந்தை, அவர்களது தந்தையை அளவுக்கு அதிகமாக நேசிப்பதைப் பார்த்து நீங்கள் பொறாமைப்படக் கூடாது.

★இறுதியாக, மற்ற எல்லாவற்யையும் விட உங்கள் குழந்தைகளை அதிகமாக நேசியுங்கள். அவர்களை நேசிக்காமல், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது.

★ எந்த நேரத்திலும் குழந்தைகளை நேசித்தால், அவர்களது மனதில் எக்காலத்திலும் பெற்றோர்களை மறக்காமல் நேசிப்பார்கள்.

# பொட்டு வைத்த முகமே அழகு



## சதுர வடிவ முகம்

இவர்கள் நீளமான பொட்டுக்களை வைக்கக் கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுக்களை வைத்துக் கொள்ளலாம். உருண்டை மற்றும் முட்டை வடிவப் பொட்டுக்கள் இவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும்.



## உருண்டை வடிவ முகம்

இவர்கள் நீளமான பொட்டுக்களை வைத்துக் கொள்ளலாம். நீளமானபொட்டுக்கள் உருண்டை முகத்தைச் சற்று நீளமாகக் காட்டி அழகைத் தரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்க வேண்டும்.



## இதய வடிவ முகம்

இவர்களுக்கு நீண்ட பொட்டுக்கள் நன்றாக இருக்கும்.

முகத்தின் வடிவம் மட்டுமன்றி உடை சரும நிறம் போன்றவைகளும் பொட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவைதான். ஆகவே பொருத்தமான பொட்டுக்களை வைத்து உங்கள் அழகை இன்னும் மெருகூட்டுங்கள்.



## முக்கோண வடிவ முகம்

இவர்களுக்கு அநேகமாக எல்லா வகைப் பொட்டுக்களும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால் புருவத்தில் இருந்து ஒரு சென்ரி மீற்றருக்கு மேல் பொட்டு வைக்க வேண்டும்.



# அலுவலகம் செல்லும் பெண்களா நீங்கள்?

★ அணியும் ஆடைகள் எதிரில் இருப்பவரின் உணர்வுகளைத் தூண்டாமல் இருப்பது நல்லது. நவீன முறையில் உடுத்தினாலும் கூட நேர்த்தியாக உடுத்துங்கள்.

★முக்கியமாக உடன் வேலை செய்யும் ஆணிடம் உங்கள் சொந்த இரகசியங்களைப் பங்கு போடாதீர்கள்.

★உங்கள் குடும்ப விடயங்களுக்கு உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் அறிவுரைகளைக் கேட்காதீர்கள். தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ள முன் வருவார்கள்.

★உங்கள் தொலைபேசி நம்பர்களைக் கெடுக்காதீர்கள். (நம்பிக்கைக்குரிய நபரைத் தவிர)

★ஆண் நண்பர்களிடம் கைலாகு கொடுப்பது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கை லாகு கொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது.

★உங்கள் பொருளாதார நிலை பற்றி உடன் பணிபுரியும் ஆண்களிடம் கூறாதீர்கள்.

★காரணம் இல்லாமல் எல்லாவற்றுக்கும் ஆண்களைப் பார்த்துப் புன்னகைக்காதீர்கள்.

★இரவு நேரத்தில் உடன் வேலை செய்யும் ஆணுடன் வாகனத்தில் செல்லாதீர்கள்.

★தேவையில்லாமல் வெட்கப்படுவதைத் தவிருங்கள்.

★பேசும் போது கண்ணைப் பார்த்துப் பேசுங்கள்.

★எதற்காகவும் எந்தப் பிரச்சினைக்காகவும் அழாதீர்கள். அழும் பெண்களை ஆண்கள் வேகமாகத் திசை திருப்பிவிடுவார்கள்.

★பொதுவாக ஆண்கள் சமூகம் என்பது பெண்களை வித்தியாசமான அங்க அவயவங்கள் கொண்ட சதைப் பிண்டம் என்றே நினைக்கின்றது. ஓர் ஆண் தன்னுடன் வேலை செய்யும் பெண்களைத் தங்களுடன் வேலை செய்யும் மற்றப் பணியாளர்கள் போல் எப்போது நினைக்கிறானோ அப்போது தான் பெண்கள் பணி இடங்களில் பாதுகாப்பாக இருப்பார்கள்.

# சோதனைகளை சாதனை ஆக்குங்கள்!



நாம் அன்றாடம் பல பணிகளில் ஈடுபட்டு கொண்டிருந்தாலும், நமது மனம் என்பது பலவிதமான சிந்தனைகளை உருவாக்கிதனது பணியை செவ்வனே செய்கிறது. அதிகளவில் பெண்களே அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் பலவித மன சிந்தனைகளுடன் ஒருவித பதற்றத்துடன் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அவ்வாறு இல்லாமல் மனச் சிந்தனையைச் சீராக, சிறப்புடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்களும் தங்கள் சிறு வயதிலிருந்து பல வகையான சோதனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். நிகழ்காலத்தில் ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் அதற்கான வழிமுறைகளும் தெரியாமல் வாழ்கிறார்கள்.

நேர்மறை எண்ணங்களை மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான சிந்தனைகள் அமைதியை ஏற்படுத்தும் மற்றும் சிறந்த சிந்தனைகளையும் உருவாக்கும்.

நாம் அறிந்தோ, அறியாமலோ நம் மனதில் தோன்றும் எதிர்மறை எண்ணங்கள் தான் வாழ்வை அமைதியற்றதாக மாற்றிவிடுகிறது. ஒருவர் மனதில் தோன்றும் பயம்தான் அவரது பணிகள், வியாபாரம், கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய அனைத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நேர்மறை எண்ணங்கள் மனதில் சிந்தனையாய் உருவாகும்போது வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கிறது.

நமது வாழ்க்கை அதுவும் பெண்ககளின் வாழ்க்கை என்பது சோதனைகள் நிறைந்தது. அதனை புரிந்து கொண்டு சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிட வேண்டும். வாழ்க்கை என்பதே துணிவை சோதித்து பார்ப்பது தான். சோதனைகள் நிறைந்தது தான் நம் வாழ்க்கை என்பதைப் புரிந்து செயற்பட்டால் பயத்தை எதிர்கொள்ளத் தேவையான துணிவு மனதில் தோன்றி, சிக்கல்கள் தீர்வதற்கான வழிமுறை, சூழ்நிலை தோற்றமளித்து சிந்தனையை அமைதிப்படுத்தி, தைரியமான சிந்தனை கொண்ட மனநிலை தோன்றுகின்றது.

இத்தருணத்தில் உருவாகும் தீர்வுக ள் எதிர்மறை சிந்தனைகளை மாற்றி, தற்போது எடுக்க வேண்டிய பொருத்தமான முடிவுகளை எடுக்க உதவும்.

நமது ஒவ்வொரு செயலைச் செய்யத் தொடங்கும் முன் அவற்றின் எதிர்மறை பாதிப்புகள் என்ன என்பதைச் சிந்தித்து அதற்கான தீர்வுகளை ஏற்படுத்தி அதனை நீக்கிவிட்டு நேர்மறையான சிந்தனைகளை சரியான பணிகளைச் செய்யத் தொடங்க வேண்டும்.

புதிய சிந்தனைகள் தான் நமது புதிய முயற்சிகளுக்கு வெற்றியை அளித்து மனதை அமைதி நிலைக்கு அழைத்துச் செல்லும். எனவே, சிறப்பான சிந்தனை மாற்றத்துக்கு நம் மனதைப் பழக்கிக் கொள்ள வேண்டும். சிந்தனை மாற்றமே சிறப்பான எதிர்கால முன்னேற்றத்தைத் தரும்.




# 'அரசியல் பி… அறம் கூற்…

● கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

★உருப்படுமா தமிழ்நாடு எனும் உள்ளக் கொதிப்போடு இக்கட்டுரையை எழுதத் தொடங்குகிறேன்.

"வீரமிலா நாய்கள், விலங்காம்இளவரசன்தன்னைமிதித்து தராதரத்தில் போக்கியே பொன்னை அந்தப்புரத்தினில் சேர்க்காமல், நெட்டை மரங்களென நின்று புலம்புகிறார். பெட்டைப்புலம்பல்பிறர்க்குத் துணையாமோ" எனும் பாரதியின் கொதிப்பை தமிழகத்தில் நடக்கும் சம்பவங்கள் உருவாக்க நெஞ்சம் கொதித்துச் சுருண்டு போகிறது.

★அறம் உரைத்த ஆயிரம் பெரியவர்கள்வாழ்ந்த மண்ணில் அநியாயம் கேட்பாரின்றித் தலைவிரித்து ஆடுகிறது. விவரம் உரைக்காமல் என் கொதிப்பை வெளிப்படுத்துவது தவறென்று தெரிவதால் இனி விவரத்தை விரிவாய்ச் சொல்கிறேன்.

★தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சிலநாள்களின் முன் திடீரென மறைந்துபோனார். அவர் மறைவு ஏற்படுத்திய அதிர்வைவிட அம்மறைவில் மறைந்து கிடக்கும் ரகசியங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளும், அவர் மறைவின்பின் அவர் கட்சியில் நடக்கும் கூத்துக்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளும் மிகமிக அதிகமாய் இருக்கின்றன.

★வாழும் காலத்தில் ஒரு மர்ம மனுசியாய் இருந்த ஜெயலலிதா இப்போது தனது மறைவிலும் மர்மங்களைநிலைநாட்டிப் போயிருக்கிறார். அவர் மரணம் சார்ந்த சம்பவங்களே என் கொதிப்பின் காரணங்கள்.

★நடிகையாய் அறிமுகமாகி, புகழின் உச்சம் தொட்டு பின் திடீரெனச் சில காலம் தலைமறைவாகிப் போனஜெயலலிதா, 1981 இல் மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டார்.

★அந்த அறிமுகத்தின் பின்னர், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் போன்ற பதவிகளை அடுத்தடுத்துப் பெற்று அரசியலில் தன்னை அசைக்க முடியாத ஒரு சக்தியாக உறுதிப்படுத்திக் கொண்டார் அவர்.

★எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையிலான உறவு நெருக்கம் பரகசியமானது. எம்.ஜி. ஆரை வளைத்துப் போட்டுக் கொண்ட துணிவில் கட்சியின் மூத்த உறுப்பினர்களை எல்லாம் உதாசீனம் செய்து, பலரினதும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார் ஜெயலலிதா.

★1987 இல் எம்.ஜி.ஆர். மறைந்தபோது ராஜாஜி மண்டபத்தில் - இன்று ஜெயலலிதாவின் உடல் கிடந்த அதே இடத்தில் - எம்.ஜி.ஆரின் உடல் கிடத்தப்பட்டு இருந்தது. இன்று ஜெயலலிதாவின்உடலின்தலைமாட்டில் சசிகலா நின்றமை போலவே அன்று எம்.ஜி.ஆர். உடலின் தலைமாட்டில் ஜெயலலிதா நின்றிருந்தார்.

★ஒரேயொரு வித்தியாசம். ஜெயலலிதாநோய்வாய்ப்பட்டுக் கிடந்த 72 நாள்களில் யாரும் அறியாமல் நிலத்தின் கீழ் பரவும் கறையான் போல அதிகாரத்தைத் தனக்காக்கி, அனைவரையும் தன்கீழ் கொணர்ந்து, எதிர்ப்பாரின்றி ஏதேச்சதிகாரமாய் ஜெயலலிதாவின்தலைமாட்டில்நின்றிருந்தார் சசிகலா. இது இன்று நடந்தது.

★"எம்.ஜி.ஆர் போய்விட்டார் இனி இவளை ஒதுக்கியே தீருவோம்" எனும் வன்மத்தோடு எதிரிகள் சூழ்ந்து நிற்க அத்தனை பேரையும் எதிர்த்து நின்று தனி ஒரு மனுசியாய் எம்.ஜி.ஆரின் தலைமாட்டில் துணிவோடு வலிந்து இடம்பிடித்து நின்றார் ஜெயலலிதா. இது அன்று நடந்தது.

★குண்டூசிகளால் குத்தப்பட்டும், சவ ஊர்வல வண்டியிலிருந்து தள்ளப்பட்டும், எதிரிகள் செய்த ஆயிரம் பழிவாங்கல்களையும்தாங்கிநின்றஅன்றைய ஜெயலலிதாவின் இருப்பில் ஓர் தலைவிக்கு இருக்கவேண்டிய முனைப்பையும், நிமிர்வையும் காணமுடிந்தது.

★இன்று அடிமைகளை ஆண்டு நின்ற சசிகலாவின் இருப்பில்சூழ்ச்சியும், வஞ்சகமும் மட்டுமே வெளிப்பட்டு நின்றன.

★அன்று அடிமையாய் எதிர்த்து நின்றார் ஜெயலலிதா. இன்று அடிமைகளைவளைத்து நின்றார் சசிகலா.

அன்றைக்கும் இன்றைக்குமான வித்தியாசங்கள் இவையே.

★ஆட்சிக்கு வந்தபிறகு, ஜெயலலிதாவின் செயற்பாடுகள் இருளும் ஒளியுமாய் வெளிப்பட்டு உலகின் பார்வையை அவர்மேல் திருப்ப வைத்தன.

★ஒருகாலத்தில் தனது இயலாமையைப் பயன்படுத்தி தன்னைப் பந்தாடிய அனைவரையும் தான் பந்தாடி மகிழ்ந்தது அவரின் இருள் பக்கம். அந்த இருள் பக்கத்தில் வஞ்சகமும், வக்கிரமும், பழி உணர்ச்சியும் பரவிக்கிடந்தன.

★ஒரு பெண்ணாய், நடிகையாய், தன்னைக் கீழ்மை செய்த ஆண்கள் அனைவரையும் அடக்கி அடிமைகளாக்கி, முடிந்த அளவு இழிவு செய்தார் ஜெயலலிதா. அச்செயல்கள் அவருக்குப் பெரும் எதிர்ப்பைத் தேடித் தந்திருக்க வேண்டும்.

★ஆனால், தம்தேவைகளுக்காக மானம் சிறிதுமின்றி கைகட்டி, வாய்பொத்தி வணங்கி நின்ற தலைவர்களின் இழிநிலை ஜெயலலிதாவின்மேல் வந்திருக்க வேண்டிய வெறுப்பை அத் தலைவர்கள் மேல் ஆக்கி, மக்கள் மனதில் அவரை ஓர் அல்லிராணியாய்ப் பதிவு செய்தன.

★மற்றொரு புறம் 'நான் இருக்கப் பயமேன்?' என்று மக்களுக்குத் தெம்பு கொடுத்து, மக்களின் உணர்வும், தேவையும் அறிந்து இலவசங்களால் ஏழைகளை மகிழ்வித்து, எவருக்கும் அஞ்சாமல் மத்திய ஆட்சியாளர்களையும் தன்னைத் தேடிவரச் செய்த, அவரது ஆட்சியிலிருந்த ஆண்மையும், விலைபோகாத்தன்மையும், நிர்வாகத்திறமையும் ஜெயலலிதாவின் ஒளிப்பக்கங்கள்.

★மத்தியிலோ, மாநிலங்களிலோ ஆட்சியாளர்களுக்கு அஞ்சாது தன் கொள்கையில் உறுதிபட நின்ற அவரது அசையாத் தன்மையில் ஆணவம் மிகைப்படத்தொனித்தாலும் தன் தேவைகளுக்காகத் தமிழர்களதும், தமிழ்நாட்டினதும் தன் மானத்தை இவர் விட்டுக் கொடுக்க மாட்டார் எனத் தமிழ் மக்களை நினைக்கவைத்து.

மாபெரும் ராஜதந்திரியான கலைஞரின் நுட்பமான சுழிப்புக்களை எல்லாம் உடைத்தெறிந்து ஓரங்கட்டி, தமிழ்நாட்டு ஆட்சியைத் தனித்துப் பலதரம் கைப்பற்றினார் அவர்.

★அமைச்சர்களைக் காலில் விழவைப்பது. அருகிருக்க அனுமதியாதது காரணம் உரைக்காமலே அடிக்கடி அவர்களை மாற்றியது, சட்டமன்றத்தைத் தனது பாராட்டு வைபவ மேடையாக்கியது, அளவுக்கதிகமாகச் சொத்துக் குவித்து அதிகாரம் செய்தது போன்ற ஜெயலலிதாவின்செயல்களில் இருந்த, ஜனநாயகத்தை மதியாத அசுரத்தனம் பலரையும் முகம் சுழிக்க வைத்தது உண்மையிலும் உண்மை.

★ஆனாலும் மக்களின் மனம் அறிந்து அந்தக் கசப்பையெல்லாம் சில விடயங்களின் மூலம் அதிநுட்பமாய்த்துடைத்தெறிந்து மக்கள்செல்வாக்கைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டார் அவர்.

★ஆரம்பத்தில் வளர்ப்பு மகனின் ஆடம்பரத் திருமணமும், அத்திருமணத்தில் அலங்கார பூஷிதையாய் தன் தோழியோடு வந்து அடித்த கூத்துக்களும் என தன் தனிப்பலவீனங்களால் சமநிலையற்றுத்தடுமாறிய ஜெயலலிதா தன் ஆணவப் போக்கை மாற்றாமலே நிர்வாகத்தில் நிலைகொண்டது ஓர் அதிசயம்.

★கடைசித் தேர்தலில் கூட கூட்டுச்சேர நினைத்த பெருங்கட்சிகளைப் புறந்தள்ளி, தனித்து நிற்கும் தற்துணிவோடு வெற்றியைத் தனதாக்கி வீறு கொண்டு எழுந்தார்.

★பலதரமாய் காங்கிரஸ், பாரதீய ஜனதா ஆட்சியாளர்களின் கண்களில் விரல்விட்டு ஆட்டினார். தன்னைச் சரிவர மதிக்கவில்லை என்று காரணம் காட்டி மத்திய ஆட்சியாளர் நடத்திய கூட்டங்களிலிருந்து வெளிநடப்புச் செய்தார், உலகத் தலைவர்களின் சந்திப்பில் கூனிக் குறுகி நின்ற முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் போல் அல்லாமல், தன்கம்பீரம்சிறிதும்குன்றாது உலகத் தலைவர்களை சமநிலைப்பட்டுச்சந்தித்தார். இவை அவர் ஆட்சியில் அனுப்பப்பட்டதற்கான சான்றுகள்.

★இத்தனைஅனுபவங்களின் பின்னரும் கூட கடைசிவரை மாறாதிருந்த ஜெயலலிதாவின் ஆணவச் செயல்களால், நடுநிலையுள்ள பலரும் அவர்மேல் வெறுப்புக் கொண்டிருந்தமை நிஜம்.

★ஆட்சியில்முதிர்ச்சி அடைந்தாற்போல தனது பலவீனமாய் இருந்த தற்புகழ்ச்சியையும், தன் முனைப்பையும் தாண்டியும் வெளிவருவார் அவர் என எதிர்பார்த்த அனைவரும் மாற்றமில்லா அவரது ஆணவ நடவடிக்கைகள் கண்டு பெரும் அதிருப்தியுற்றனர்.

★அத்தகையோர் நோயுற்று ஜெயலலிதா அப்பலோவில் அனுமதிக்கப்பட்டார் எனும் செய்தி கேட்டபோது, பெருமளவில் கலங்காதது உண்மையே.

★ஆனால் வைத்தியசாலையில் அவர் இருந்த 72 நாள்களிலும் அடுத்தடுத்து விழுந்த மர்மமுடிச்சுக்கள் அவர்மீதான அனுதாப அலையை வானுயரக் கிளப்பி அவர் மறைவின்போது வெறுத்தோரையும் விம்மி அழ வைத்துவிட்டன. அவர்வாழ்வில் இருந்த இருளை மரணம் துடைத்து மாண்பு தந்தது.

★இங்குதான் என் மனக் கொதிப்பின்காரணங்கள் ஆரம்பமாகின்றன. வெறும் காய்ச்சல் என்று அப்பலோவில் அனுமதிக்கப்பட்டு, 'இன்று வருகிறார், நாளை வருகிறார்' என்ற மாறி மாறிப் பொய்களை அடுக்கி அவர் உடல்நிலை பற்றிய உண்மை அறியமுடியாமல் ஒன்றரைக்கோடி தொண்டர்களையும் அலைக்கழித்த போது தான் மக்கள் மத்தியில் அவர் மீதான அனுதாப அலைகள் ஓங்கி எழும்பத் தொடங்கின.

★அரைவாசி நாள்கள் கடந்த பின்புதான் முதல்வர் உயிராபத்தில் இருக்கிறார் எனும் உண்மையேதொண்டர்களுக்குத் தெரியவந்தது. தலைவர்களுக்கும்தான்.

★யார் இப்பொய்யை உருவாக்கி வளர்த்தார்கள் எனும் ரகசியம் இன்றுவரை தெளிவாய் வெளிப்படவில்லை என்பது அதிசயமே. இப்பொய் வளர்ப்பில் புகழ்பெற்ற அப்பலோ நிர்வாகமும் இணைந்து கொண்டமை கொடுமையிலும் கொடுமை.

★கடைசி நான்குநாள்களிலும் கூட துடிதுடித்துக்கதறிக் கொண்டிருந்த தொண்டர்களுக்கு பொய்யின் மேல் பொய்யாய் உரைத்த பின்னர்தான் இறுதியில் முதல்வரின் இறப்புச்செய்தி வெளியிடப்பட்டது.

★ஜெயலலிதா வைத்தியசாலையில் இருந்த அந்த 72 நாள்களிலும் எவராலும் அவரை அணுகக்கூட முடியவில்லை.

★கவர்னர், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் என ஜெயலலிதாவைக் காண ஓடோடி வந்த பலரும் வெறும் வைத்தியசாலைக் கட்டடத்தை மட்டும் கண்டு கவன்று திரும்பினர்.

ஆனாலும், அவர்கள் அனைவரும் தவறாமல் 'முதல்வர் நலமாய் இருக்கிறார்' என்ற ஒரே

# ழைத்தோர்க்கு றாகும்!'

செய்தியைக் கிளிப்பிள்ளை போல்திரும்பத்திரும்பச் சொன்ன போது யாரினதோதூண்டுதலின் பேரில்தான் இவர்கள் அறிக்கை விடுகிறார்கள் என்பதை உணர முடிந்தது.

★கேள்விகள் இங்குதான் ஆரம்பமாகின்றன.

● கவர்னர், மத்திய அமைச்சர்கள் என எவராலும் அணுகமுடியாத வகையில் முதல்வரைச் சுற்றி இரும்புக்கோட்டை அமைத்திருந்தவர்கள் யார்?

● சசிகலா குழுவினர் என்பதே இக்கேள்விக்கான பதில் என அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், இக்காரியத்தை இயற்ற அவர்களால் எப்படி முடிந்தது என்பது இன்றுவரை பரம ரகசியமாகவே இருக்கிறது.

● கட்சியில் எந்த அதிகாரமும் இல்லாமலிருந்தும் அதிகாரம் உள்ள அமைச்சர்களைக் கூட ஆட்டிப்படைக்க இவர்களால் முடிவது எப்படி?

● அக்காலத்தில் எம்.ஜி.ஆர் மரணித்ததும் அதுவரை ஜெயலலிதாவுக்குப் பயந்திருந்த அனைவரும் அவரை ஓரம் கட்டுவதில் வெளிப்பட முனைப்புக் காட்டினர். ஆனால், ஜெயலலிதா மறைந்ததும் சசிகலாவை ஓரம்கட்ட அங்ஙனம் எவரும் முனைந்தார்கள் எனத் தெரியவில்லை. அதற்கான காரணம் என்ன?

● வைத்தியசாலையில் முதலமைச்சர் இருந்தகாலத்தில் அரச இயந்திரத்தை இயக்கியவர்கள் யாவர்?

● ஒரு மாநில முதலமைச்சர் யார் பொறுப்பில் இருக்கிறார் என்பது கூடத் தெரியாத நிலையில் மத்திய அரசு தலையிட்டு முதலமைச்சர் பற்றிய செய்தியை அறிந்து வெளிப்படுத்தாதமை ஏன்?

● நோயுற்ற முதலமைச்சரை கவர்னர் கூட கட்டாயம் பண்ணி காண நினையாதமை எதனால்?

● மாநில அரசுக்குப் பொறுப்பாயிருந்த கவர்னர் யாரை நம்பி அக்காலத்தில் அரசின் இயக்கங்களை அனுமதித்தார்?

● யாரின் தூண்டுதலில் மருத்துவமனை வட்டாரம் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருந்தது?

● நோயுற்றிருந்த முதலமைச்சர் நலமுற்றார் என்று அறிவித்தபோதும் அவரது ஒரு புகைப்படம்தானும் வெளியிடப்படாதமை எதனால்?

● தனக்கு அடுத்து தலைமை எவரிடம் செல்லவேண்டுமென ஒருவேளை ஜெயலலிதா அறிவித்து விடலாம் எனும் காரணத்தினால்தான் எவரையும் சந்திக்கவிடாமல் அவர் தடுக்கப்பட்டாரா?

● எங்கெல்லாமோ நுழைந்து உண்மைகளைக்கண்டுபிடிக்கும் தமிழ்நாட்டின் புலனாய்வுப் பத்திரிகைகள், ஆதாரத்தோடு (மகல்வர் பற்றிய ஏர் உண்மைச் செய்தியைத்தானும் வெளியிடமுடியாமற் போனது ஏன்?

● முதல்வரின் இறுதிச்சடங்கில் அதிகாரபூர்வமாய்க் கலந்து கொண்ட பிரதமர் எங்ஙனம் தற்காலிக முதலமைச்சரைத் தாண்டி கட்சியிலோ நிர்வாகத்திலோ பங்கேற்காத ஒரு பெண்ணுக்கு முதன்மை கொடுத்து அவரைச் சந்தித்தார்?

● இறுதிக்கிரியைகளையும் நிர்வாகத்தையும் திட்டமிடும் உரிமையை சசிகலாவுக்கு வழங்கியவர் யாவர்?

● ஜெயலலிதாவாலேயே வெறுத்துத் துரத்தப்பட்ட சசிகலாவின் உறவினர்கள் ஜெயலலிதா வீழ்ந்த மறுகணமே அவரைச் சூழ்ந்துகொண்டமை எப்படி?

★இவைதவிர ஜெயலலிதாவின் சடலத்தின் கன்னத்தில் இருந்த புள்ளிகள்பற்றியும் சடலத்தில் கால்கள் இருந்தனவா என்பது பற்றியும் 72 நாள்கள் கடும் நோயுற்றிருந்த பின்பும் முதல்வரின் உடல் முன்பு போலவே இருந்த ரகசியம் பற்றியும், இணையத்தளங்களிலும், முகநூல்களிலும் ஆயிரமாய்க் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

★எந்தக் கேள்விக்கும் இன்றுவரை சரியான விடைகளில்லை. இருட்டறையில் கறுப்புப் பூனையைத் தேடிய குருட்டு மனிதன் போல மறைந்து கிடக்கும் உண்மைகளைத் தேடித்தேடி விடைகாணாது விம்மி நிற்கிறது தொண்டர் கூட்டம்.

★உண்மை வெளிவராத நிலையில் தொண்டர்களின் உயிரை நடுங்கவைக்கும் கற்பனைகள் புற்றீசல் போலக் கதை கதையாய்க் கிளம்புகின்றன.

● நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்,

● மூன்று மாதங்களின் முன்னரே இறந்து போனார்,

● தன் உண்மை நிலையை உரைக்க இடம்கொடாது சிறை வைக்கப்பட்டார்,

● சொத்துக்களைத் தமதாக்க தனித்து வைக்கப்பட்டு சிலரால் மிரட்டப்பட்டார்,

● அதுவரை அடக்கி ஆளப்பட்டவர்களால் அவர் அடக்கி ஆளப்பட்டார்,

★இப்படியாய் ஆயிரம் வதந்திகள் உலா வந்தபடி இருக்கின்றன.

★உண்மைகள் ஏதுமே வெளிப்படாமையால்ஐயங்களை உண்மையாய் நம்பவேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் புழுவாய்த் துடித்து நிற்கிறான் உண்மைத் தொண்டன்.

★இறந்து சில நாள்கள் கூட ஆகாத நிலையில் ஜெயலலிதாவையும், எம்.ஜி.ஆரையும், அண்ணாவையும் பின்தள்ளி சசிகலாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போஸ்ரர்கள் தமிழ்நாடெங்கும் முளைக்கத் தொடங்கியிருக்கின்றன.

★அகிகாரம் மிக்க கட்சியின் பொதுச்செயலாளர் பதவி அடுத்து சசிகலாவுக்குத்தான் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. ஓரிரு நாள்கள் முரண்பட்டு நின்ற முக்கிய மூத்த அமைச்சர்கள் கூட கட்சியைக் காக்க சசிகலாவின் வரவு அவசியம் என உரைத்து கைகட்டி கண்ணீரோடு நிற்கும் காட்சி அனைத்துத் தொலைக்காட்சிகளிலும்வந்துகொண்டிருக்கிறது.

★ஜெயலலிதா ஜெயிலில் வைக்கப்பட்டபோது, பன்னீர்ச் செல்வம், வளர்மதி உள்ளிட்ட பல அமைச்சர்கள், சத்தியப் பிரமாணத்தைக் கூட சரியாய் உரைக்கமுடியாது விம்மி வெதும்பி அரற்றியபடி அழுதழுது பதவியேற்ற காட்சியை சிலகாலத்தின் முன் தொலைக்காட்சியில் பார்க்க முடிந்தது.

★அப்போது சில குறும்புக்கார இளைஞர்கள் இவ்வாண்டின் சிறந்த நகைச்சுவை நிகழ்ச்சியெனத் தலைப்பிட்டு இணையத்தில் இக்காட்சியைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தனர்.

★இப்பொய் அமைச்சர்களுக்கு நடிப்பைக்கூடச்சரியாய்ச் செய்யத் தெரியவில்லை. சில காலப் பிரிவையே தாங்க முடியாமல் அப்போது கதறியவர்கள் ஜெயலலிதாவின் நிரந்தரப் பிரிவுபற்றி எதுவித கவலையுமில்லாமல் பதவியேற்ற காட்சி பலரையும் முகஞ்சுழிக்க வைத்தது. அவை பற்றி சிறிதும் நாணமில்லாமல் இன்னும் இடையில் உடையோடு நிற்கிறார்கள் இவர்கள்.

*'சீச்சீ இவையும் சிலவோ.'*

★சிங்கம் மறைய சிறு நரிகளுக்குப் பெருங்கொண்டாட்டம். தம் தலைவிக்கு என்ன நடந்தது என்று தெரியாத கொதிப்பில் தொண்டர்கள்; இருக்க, அடுத்ததலைமை, அடுத்த பதவி என தலைவர்கள் அலையத் தொடங்கிவிட்டார்கள். மக்கள் பற்றி கவலைப்பட அவர்களுக்கு எங்கே நேரமிருக்கிறது? இது தான் மக்களாட்சியாம்.

★எவரையும்விலைக்குவாங்கி விடலாம் என்பதே இந்திய அரசியலின் இன்றைய சூத்திரம் என்றாகிவிட்டது.

வெட்கக்கேட்டின் உச்சம் இது.

★'எற்றுக்குரிய கயவர் ஒன்றுற்கால விற்றற்குரியர் விரைந்து' என்று கீழோரை அடையாளப்படுத்தினான் வள்ளுவப்பாட்டன்.

★அஃதறிந்தும் கீழோராய்த் தம்மைப் பிரகடனப்படுத்தக் காத்திருக்கிறது ஒருபெருங் கூட்டம். இந்தியாவின் தன்மானத்தை எழுச்சியடையச் செய்யும் என எதிர்பார்த்த, இன்றைய மத்திய அரசின் பாதையும் இதுவேயாதல் கண்டு நல்லோர் நாணி நிற்கின்றனர்.

★மத்திய அரசு என்றில்லாமல் மாநில அரசுகளும் தமிழ்நாட்டை ஏற்கனவே ஒதுக்கத்தலைப்படும் இன்றைய சூழ்நிலையில் தம் பதவிகளுக்காய் மக்களையும், மாநிலத்தையும் விலைபேசக் கூடிய ஒரு கூட்டம் தமிழ் மக்களின் தலைமையை கையிலெடுக்கத் தயாராயிருக்கிறது.

★காவிரி நீரைத் தரமுடியாது என்று கர்ச்சிக்கிறது கர்நாடகம். கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்று தமிழ்மண்ணை இழிவு செய்கிறது மத்திய அரசு.

★ஓர் ஆளுமையுள்ள ஆட்சியாளர் பதவியில் இருக்கையிலேயே நடந்த கொடுமைகள் இவை. எதையும்விற்கத்துணிந்த இழிவுத் தலைமைகளின் நிர்வாகத்தில் இனி என்னென்ன நடக்குமோ?

★பலர் பேசி என்ன பயன்? அனுபவங்களிலிருந்து பாடம் கற்காதோர் அழிவது உறுதி. நடந்து முடிந்திருக்கும் சம்பவங்களில் பலரின் உண்மை சொரூபம்வெளிப்பட்டிருக்கிறது. அவர் தமக்குச் சில சொல்ல வேண்டியிருக்கிறது.

★அரசியலில் அடக்கியாளுதல் எனும் பிழையான புது வழி திறந்து மகிழ்ந்திருந்தார் ஜெயலலிதா. இன்று அவர் வளர்த்த பிழைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர் வழியிலேயே அவரை ஓரங்கட்டியிருக்கின்றன.

★பிழையால் சரியை அடைய முடியாது என்பதற்கு மீண்டும் ஒரு நிரூபணம் கிடைத்திருக்கிறது. அந்த அனுபவத்திலிருந்து பாடம் கற்பதற்குப் பதிலாக அதே பாதையில் செல்லத் துணிவோர் ஒன்றை உணர்தல் அவசியம். தன் முனைப்புள்ள ஜெயலலிதாவுக்கே இந்தக்கதி என்றால் இவர்கள் கதி என்னாகுமோ? சிந்திப்பார்களாக...

★ஜெயலலிதாவின் மரணத்தில் பயன்பெறத் துடித்து நிற்கும் கட்சித் தலைவர்களுக்கு ஒரு செய்தி. ஆணவத்தால் மற்றவரை அடக்கியாண்டு வென்றுவிடலாம் என்று நினைத்த ஜெயலலிதாவின்; கேட்பாரற்றுப் போன கதியைக் கண்டபிறகும் அதே பாதையில் அதிகாரத்தை அனுபவிக்கத் துடிக்கின்றனர் சிலர். அவர்வழி பற்றி எழுதற்காய் நடிக்கின்றனர் சிலர். பிழைக்குப் பிழைதான் பரிசிலாகும் எனும் முன்னுதாரணத்தைக் கண் முன்னால் கண்ட பின்பும் பிழையான வழியில் சென்று சரியை அனுபவிக்கத் துடிக்கும் இம் மூடர்தம் மதியை என்சொல்ல?

★ஏதோ ஒரு சக்தியின் மித்திரபேத உத்தியால் ஜெயலலிதா கேட்பாரற்று அநாதையானார். இனி இவ்உத்தி அச்சக்தியால் தம் ஒவ்வொருவர் மேலும் பாய்ச்சப்படுமெனும் உண்மையை உணரத்தவறின், தம்மை மட்டுமல்ல தம்மை நம்பிய மக்களையும், மாநிலத்தையும் கொஞ்சம் கொஞ்சமாய் இவர்கள் இழக்கப்போவது நிச்சயம். வருமுன் காப்பார்களா?

★அடுத்து மதிமயங்கி நிற்கும் மக்களுக்கான செய்தி. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பார்கள். அந்த மக்களையே விலைக்கு வாங்கிவிடலாம் எனும் துணிவில் இருக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள்.

★தி.மு.க.வால் அறிமுகப்படுத்தப்பட்டு, அ.தி.மு.க.வால் பலப்படுத்தப்பட்ட கொள்கை அது. மக்கள், தலைவர்களுக்கு லஞ்சம் கொடுத்து காரியம் சாதித்தது அக்காலச் செய்தி. தலைவர்கள், மக்களுக்கு லஞ்சம் கொடுத்து காரியம் சாதிப்பது இக்காலச் செய்தி.

★பெரியார், காமராஜர், அண்ணா போன்ற பெரியவர்கள் வாழ்ந்த தமிழ்நாட்டுக்கா இந்தக்கதி? நினைக்க உடுக்கை இழந்தவன் கைபோல் உள்ளம் துடிக்கிறது.

★தம் தலைவிக்காகக் கதறிக் கண்ணீர் விடும் கட்சித்தொண்டர்கள் இனியேனும் ஒன்றை உணரவேண்டும். என்று வாக்குகளுக்காக நீங்கள் கை நீட்டி பணம் வாங்கிவிட்டீர்களோ அன்றே, தலைவர்களைத் தட்டிக்கேட்கும் உரிமையை இழந்துவிட்டீர்கள். மனைவியை விற்பதற்கு ஒப்பான துரோகம் வாக்கை விற்பது. அதனால் தான் மக்கள் கருத்துக்கு மருந்தளவேனும் இடமில்லாமல் போய்விட்டது.

★அந்தத் துணிவில் தான் கேட்க ஆளில்லை என்று துள்ளி நிற்கிறது ஒரு கூட்டம். மானமுள்ள தமிழ்நாட்டு மக்கள் நடந்து முடிந்த அவலத்தின் பின்னேனும் உணர்ச்சிகொள்வார்களா? நீங்கள் வாங்கிய ஐயாயிரமோ, பத்தாயிரமோ பணத்தால், இன்று உங்கள் அபிமானத்திற்குரிய தலைவியின் அவல மரணத்திற்கான காரணம் அறியும் அதிகாரம் தானும் இல்லாத நிலையில் நீங்கள். மீண்டும் சொல்கிறேன். ஒருக்காலும் பிழையான பாதையில் சென்று சரியை அடையமுடியாது என்பதை இனியேனும் உணர முனையுங்கள்.

★அடுத்த செய்தி ஊடகவியலாளர்களுக்கானது. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக ஊடகத்துறையை உரைப்பது வழக்கம். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் போல ஜனநாயகத்தைக் காக்கும் பொறுப்பு, ஊடகங்களுக்கு இருப்பதால் தான் இங்ஙனம் பேசப்பட்டது.

★இன்று ஊடகங்களும் விலைபோன நிலையில் அல்லது வலிமையிழந்த நிலையில். நடுநிலையாய் வலிமை காட்டுவது, அவ்வலிமையால் மக்கள் மனதை ஈர்ப்பது, மக்கள் ஆதரவால் ஊடகத்தின் பெருமையை உயர்த்துவது, பின்னர் அதிக பணம் தருவோரைச் சார்ந்து ஊடக தர்மத்தை விற்பது- இதுவே இன்றைய ஊடகங்களின் பொதுப் பாதை ஆயிற்று. விபசார வெற்றி. வெட்கக்கேடு.

★உயிருக்குப் போராடி மருத்துவமனையில் முதல்வர் கிடந்த 72 நாள்களில் உள் நுழைந்து என்ன நடக்கிறது என்று காணும் சக்தியை இழந்து நின்ற தமிழக சஞ்சிகைகள் அனைத்தும் தலைகுனிய வேண்டும்.

★உண்மையை அறியும் உரிமை எமக்குண்டு என்று காவல்துறையினருடன் கூட மோதி நிற்கும் இவர்தமக்கு தம் மாநிலத்தலைவியின் நிலையை அவரது மரணம் வரையிலும் போராடி அறியமுடியாதமை வெட்கக்கேட்டின் உச்சம்.

★உண்மை அறிய எந்த ஊடகமும் முனைந்து போராடிய தாய்க் கூடத் தெரியவில்லை. பிரச்சினைகளை பேசி தம் ஊடக விற்பனையை உயர்த்தவே அவை முனைந்து கொண்டிருந்தன.

★இதிலிருந்து இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. ஊடகங்கள் தம் வலிமையை இழந்துவிட்டன என்பது ஒன்று. வலிமையுள்ள ஊடகங்கள் விலைபோய்விட்டன என்பது மற்றொன்று. இரண்டுமே வெட்கக் கேடான செயல்கள்தான்.

★எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு எதிராகத் தான் வெளியிட்ட கார்டூனுக்காக மன்னிப்புக்கோர முடியாது என்று உறுதிகாட்டி மறியல் சென்றார் அன்றைய ஆனந்த விகடன் ஆசிரியர். இனி அத்தகையோரைக் காணமுடியுமா?

(23 அம் பக்கம் பார்க்க..)





யாழில். பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதில் மாணவர்களின் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் ஒரு காட்சியையும் யாழ்.பிரதிப்பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

இந்த நிகழ்வில், யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பொ.தயானந்தன் மற்றும் பொது மக்கள் சிவில் அமைப்புக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையும், நல்லூர் பிரதேச கலாசார அதிகாரசபையும், நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்லுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பண்பாட்டுப் பெருவிழா அரியாலை பிரம்பங்குளம் மகாமாரி அம்மன்கல்யாணமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு நல்லூர் பிரதேச செயலாளர் கலாசார அதிகாரசபை மற்றும் கலாசாரப் பேரவையின் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம் பெற்றது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக நல்லூர் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.நிசாந்தன் கலந்து கொண்டார்.

இதன்போது கலைச்சுடர் நூல் வெளியீடும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-10)









மனித உரிமைகள் தினம் கொழும்பு 7 சுதந்திர சதுக்க மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி மனித உரிமைகள் அமைப்பால் கொண்டாடப்பட்டது.

இதன் போது யாழ். மாவட்ட ரீதியில் ஊடகவியலாளரான ச.சசிகரன் மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர் வைத்தியர் என்.எம்.எம்.ஹசீமால் சான்றிதழும் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-58)



ஆசிய நாட்டு இளைஞர்களுக்கான விஞ்ஞான விரிவாக்க செயற்றிட்டத்தினூடாக (Asian High School Students Japan- Asia Youth Exchange Programme in Science) ஜப்பான் அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அழைப்பின் பேரில் 2016 இல் புலமைப்பரிசில் பெற்று இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஒரே ஒரு தமிழ் மாணவன் நிமலன் பிருந்தாபன் ( தரம் 12 உயிரியல் பிரிவு) ஜப்பான் பயணமாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 11 இல் முதன்மை மாணவனாகிய இவர், க.பொ.த(சா/த) தரப்பிரிவில் 2015 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## சாரதிய அனுமதி பெறப் புதுவிதி அதனால் பெண்களுக்கு அவதி...!

கச்சான் போட்டுக் கொடுக்கும் காகிதப் பையொன்றில் அச்சிடப் பட்டிருந்ததை வாசித்துக் கொண்டிருந்தாள் செல்லாச்சி.வாத்தியாரும் ஏரம்பரும் வந்தமையைக்கூட அவள் கவனிக்கவில்லை.

''அப்பிடி என்னத்தைத்தான் இப்படி வாசிக்கிறாய் கிழவி?'' என்று கேட்டபடி சந்தியடியில் அமர்ந்தார் ஏரம்பர்.

''வாங்கோ,இது பழைய சஞ்சிகையிலை ஒட்டின பை.அதிலை காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சுவாமி பல வருசங்களுக்கு முந்திச் சொன்னதைப் போட்டிருக்கினம், வாசிக்கிறன்,கேளுங்கோ'' என்று சொல்லி விட்டுச் சத்தமாக வாசிக்கத் தொடங்கினாள் செல்லாச்சி.

''வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்ற பிறகு, சமூகத்திலை ஒவ்வொரு பெரும்பான்மையினரும் குழு ஒன்றைத் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்காகப் போராடுவதாகச் சொல்லி, மற்றொரு சிறுபான்மையினருடன் விரோதிகளாக்கி, மோத விட்டு வாக்குச் சேகரிப்பதுதான் இன்றைய அரசியல் என்று இதில் போட்டிருக்கு'' என்று முடித்தாள் செல்லாச்சி.

வாத்தியாருக்குப் புரிந்ததால் ''காஞ்சிச் சங்கராச்சாரியார் எப்பவோ சொன்னது,இன்றைக்கும் பொருந்துது.'' என்றபடி ஏரம்பரைப் பார்த்தார்.

ஏரம்பரோ எதுவும் புரியாமல் வாத்தியாரைப் பார்த்தார்.நண்பருக்குப் புரியவைக்க வாத்தியார் சொல்லத் தொடங்கினார்.

''பெரும்பான்மைப் சிறுபான்மை என்றவுடன் வெறும் சிங்களவர், தமிழர் என்று மட்டும் நினைக்கக் கூடாது.இது சிங்களவருக்குள்ளையும் நடக்கும், தமிழருக்குள்ளையும் நடக்கும். இப்ப உதாரணத்துக்கு, தமிழருக்குள்ளேயே அதிகமானோர் அடங்கக் கூடிய குழு ஒன்றை, அரசியல்வாதி தனது வசதிப்படி உருவாக்கி விடுவார். அது பிரதேச,சமய,சாதி அடிப்படையிலோ,ஒரே பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலோ இருக்கும்.அவர்களுக்காகப் போராடுவதாக அரசியல்வாதி வாய் வீரம் காட்டுவார்.அதோடை அந்தக் குழுவின் பிரச்சினைக்கு, இன்னொரு குழு தான் காரணம் என்று காட்டி,அந்தக் குழுவுடன் மோத விடுவார்.இதேமாதிரி எதிர்க் குழுவின் தலைவர் இந்தக் குழுவை ஏசுவார். இப்படி மாறி மாறி கொழுவி விட்டு,வாக்குகளை வாங்கி தங்கடை பிழைப்பை அரசியல்வாதிகள் பார்ப்பினம்.வாக்குப் போட்ட குழுக்கள் தங்களுக்குள்ளை அடிபட்டுக் கொண்டே இருக்கும்.இதைத்தான் சங்கராச்சாரியார் எப்பவோ சொல்லியிருக்கிறார்''என்று விளக்கி விட்டு ,பெருமூச்சு விட்டார் வாத்தியார்.

''அப்ப அந்தப் பிரச்சினைகளை எப்பவுமே தீர்க்க மாட்டினம் அல்லது தீர்க்கிற மாதிரி நடிச்சு, பிரச்சினை தொடர்ந்து இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ளுவினம் என்று சொல்லுறியல்'' என்றார் விசயம் புரிந்த ஏரம்பர்.

''ஓர் அரசியல்வாதியிடம் 'ஏழு தலைமுறைக்குச் சொத்துச் சேர்த்திட்டீங்கள். இன்னும் ஏன் அரசியலில் இருக்கிறீங்கள்?' என்று ஒருவர் கேட்க, அரசியல்வாதி சொன்னாராம் ''எட்டாவது தலை முறையைக் கஷ்டப்பட விடக்கூடாதெல்லே என்று''... சஞ்சிகையில் வாசித்த பகிடியைச் சொன்னாள் செல்லாச்சி. சந்தியடியில் மெல்லிய சிரிப்புப் பரவியது.

அந்த நேரம் ஜீவனும் ரூபனும் வந்தமர்ந்தனர்.

அப்போது ஜீவன் ''சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதென்றால்,இனிமேல் பொம்பிளைகளும், ஆம்பிளைகள் மாதிரி பெரிய மோட்டார் சைக்கிளில்தானாம் ஓடிப்பழக வேணும்.''என்று புதுக் கதை தொடங்கினான்.

''அதெப்படி,எங்கடை பொம்பிளைகள் பாவாடை, சேலை என்று உடுத்துறவை.அவைக்கு கஷ்டமாக இருக்குமெல்லே?'' என்றார் ஏகாம்பரம்.

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது.அடுத்த வருசத்திலை இருந்து 'கியர்' இருக்கிற மோட்டார் சைக்கிளிலைதானாம் சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்க, எட்டுப்போட்டுக்காட்ட வேணும். என்று பயிற்சி கொடுக்கிறவை சொல்லுகினம்'' என்றான் ஜீவன்.

''என்றாலும், அலுவலகத்தாலை பின்னேரம் போய் மோட்டார் சைக்கிள் ஓடிப் பழகிப் போட்டு, வீட்டை போற ஆக்கள் இருக்கினம். அலுவலகத்துக்குச் சேலை தானே கட்ட வேணும். அவைக்கெல்லாம் சிக்கலெல்லோ?'' என்று விடாமல் கேட்டார் ஏரம்பர்.

அதற்கு ஜீவன் ''ஒன்று, அலுவலகத்துக்கு சுடிதார் அல்லது ஜீன்ஸ் போட வேணும்.அல்லது சேலையை சண்டிக்கட்டுக் கட்டிப் பழக வேணும்.'' என்று கூறிவிட்டு கைபேசிக்குள் மூழ்கினான் ஜீவன்

''எப்பிடியாவது எங்கடை பெண்களை காற்சட்டை போட வைக்கிறதென்று முடிவெடுத்திட்டாங்கள் போல இருக்கு.'' என்று சலித்துக் கொண்டாள் செல்லாச்சி.

அப்போது ரூபன் ''வாத்தியார், அரசமைப்பை மாத்துவது பற்றி ஆராய்கிற குழுவிலை,எதிர்க்கட்சித் தலைவர்,பிரதமர், கூட்டமைப்புப் பிரதிநிதி ஆகியோரும் இடம்பெற்றி ருக்கினம் எல்லே?'' என்று கேட்டான்.

''ஓமோம், எங்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கு அவர்களும் பங்கெடுத்திருக்கினம்.''என்றார் வாத்தியார்.

''பிறகேன் கூட்டமைப்புக்காரர் தனியாகப் பிரதமரைச் சந்தித்து 'ஒற்றையாட்சிக்குள்ளை தீர்வு காண ஏலாது' என்று சொல்லுகினம். இதை எல்லாம் கதைச்சு எங்களுக்குத் தேவையானவைகளைப் பெற்றுத் தரத்தானே, இவை அந்தக் குழுவிலை இடம் பெற்றவை.இதுகளை அந்தக் குழுக்கூட்டம் நடக் கும் போது சொல்ல வேண்டியது தானே'' என்று மீண்டும் கேள்வி எழுப்பினான் ரூபன்.



வாத்தியார் சிரித்தபடி அமைதி காத்தார்.

அப்போது செல்லாச்சி ''அங்கே போய் அப்பம் சாப்பிட்டுப் போட்டு வருகினமோ? அல்லது எங்களை 'அப்பக்கோப்பை' ஆக்கிற வேலைதான் நடக்குதோ? யாருக்குத் தெரியும்?''என்றாள்.

''யார் குத்தியோ அரிசியானால் சரிதானே?'' என்று நிலைமையைச் சமாளித்தார் ஏரம்பர்.

கைபேசிக்குள் மூழ்கிக் கிடந்த ஜீவன் தலை நிமிர்த்தி ''யாழ். பல்கலைக் கழகத்திலை கண்டிய நடனத்தாலை சண்டை போட்ட சிங்கள,தமிழ் மாணவர்கள் ஒற்றுமையாகப் பிரச்சினையை முடிச்சிட்டினமாம்'' என்றான்.

''இளம்பெடியள் கோவப்பட்டு அடிபடுறதும்,பிறகு சமாதானம் ஆகிறதும் சகஜம்தானே.நீங்களும் அப்பிடித்தானே''என்று சொன்னார் வாத்தியார்.

''அது உண்மைதான் வாத்தியார். ஆனால்....'' என்று இழுத்தான் ரூபன்.

''என்ன இழுக்கிறீர்? தேரை இழுத்து தெருவிலை நிப்பாட்டப் போறீர் போலை இருக்கு'' என்று சிரித்தபடி கேட்டார் ஏரம்பர்.

''அந்தச் சண்டையிலை பல்கலைக் கழகத்தின் சொத்துகள் அடித்து நொறுக்கப்பட்டன .அதுக்கு யார் பதில் சொல்லுறது?'' என்று கேள்வி எழுப்பினான் ரூபன்.

''அதெல்லாம்பல்கலைக் கழகக் காசிலை செய்வினம்.நாங்கள் வெளி ஆக்கள் எப்பிடிக் கேட்கிறது?'' என்று கேள்வியையே பதிலாக்கினார் ஏரம்பர்.

'' உது நல்ல கதை ,பல்கலைக்கழகக் காசு என்பது அரசாங்கக் காசுதானே. பிச்சை எடுத்துச் சாப்பிடும் ஒருவர் கூட,அரசாங்கத்துக்கு ஏதோ ஒரு வகையில் வரி செலுத்துறார்.இப்படி மக்களுடைய பணம்தானே பல்கலைக்கழகத்துக்குப் போகுது.அப்ப அந்தச் சொத்துகள் சேதமானால், இலங்கைக் குடிமகன் யார் வேணுமென்றாலும் கேள்வி கேட்கலாம்தானே?'' என்று கொக்கி போட்டான் ரூபன்.

பிரச்சினையை முடிக்க, இடையில் குறுக்கிட்டார் வாத்தியார்...

''ரூபன் நீர் சொல்லுறது 'தியரிபடி' சரிதான்.ஆனால் 'பிரக்டிக்கலாக' நடக்கிறதில்லைத்தானே'' என்றார் வாத்தியார்.

ஆனால் சமாதானமடையாத ரூபன் ''இந்த விசயத்திலை மட்டுமில்லை.அரசாங்க வாகனங்களை சொந்தத் தேவைக்கு ஓடுறது இப்பெல்லாம் அலுவலக விதி மாதிரி ஆகிவிட்டது'' என்று பொருமினான்.

''அதை ஏற்கத்தான் வேணும்'' என்று ஆமோதித்த ஏரம்பர்'' விடைத்தாள் திருத்திற பாடசாலை ஒன்று இருக்கிற வழியாலை ஒருநாள் போனனான்.அன்றைய பணி முடிஞ்சு வெளியிலை வந்த மூன்று ஆசிரியைகளை திணைக்கள வாகனம் ஒன்று ஏத்திக் கொண்டு போனது. என்னோடை வந்தவர் தான்'ஒருத்தி உயரதிகாரியின் மனைவி;மற்ற இரண்டு பேரும் அவவின் சிநேகிதிகள்' என்று சொன்னார்.விதிகளை மீறி, சலுகைகளை அனுபவிக்கிறதுதான் பெரியமனுசத்தனம் என்ற நடைமுறை இங்கே வந்திட்டுது'' என்று சொன்னார்.

இதைக் கேட்ட ரூபன் ''ஓர் அலுவலகத்திலை அலுவலக உதவியாளரோ அல்லது ஆணானப்பட்ட அதிகாரியோ,யார் வேலை செய்தாலும்,சம்பளத்துக்கு- காசுத் தேவைக்குத்தான் - வேலை பார்க்கினம்.அந்த அலுவலகத்துக்கு அதிகாரி எந்தளவு அவசியமோ, அதேயளவுக்கு துப்புரவுப் பணியாளரும் அவசியம். பிறகு ஏன் உயரதிகாரிகளை 'அய்யா ,அம்மா, ஆட்டுக்குட்டி'என்று குறிப்பிடுற பழக்கத்தை நாங்கள் இன்னும் கட்டிபிடிச்சுத் தொங்குகிறோமோ தெரியவில்லை'' என்று எரிச்சலுடன் சொன்னான்.

''வெள்ளைக்காரன் எங்களை அடிமை செய்த போது வந்த பழக்கம்.அவன் போன பிறகு, அவனிட்டை கூழைக் கும்பிடு போட்டு புழைப்பு நடத்தினவை,அதுதான் நடைமுறை என்று மாற்றி விட்டிட்டினம்''என்று விளக்கினார் வாத்தியார்.

''எந்த ஓர் அரசு ஊழியரும்,அவருடைய பதவிப் பெயரால் அல்லது அவரது முழுப் பெயரால் அழைக்கப்படுவதை வழக்கமாக்குவதுதானே மனிதர்களை சுயகௌரவத்துடனும் சமமாகவும் மதிப்பதாக இருக்கும்'' என்று வாதிட்டான் ரூபன்.

''தம்பி,நர்ங்கள் ஓர் ஆளை - நீ - நீர் - நீங்கள் - என்று அழைப்பதிலையே மரியாதையைத் தரம் பிரிச்சு வைச்சிருக்கிறம். இதெல்லாம் மாறுவதென்றால் இளைய தலைமுறைதான் முன் வர வேண்டும்'' என்று வாத்தியார் சொல்லி முடித்தார்.

அப்போது சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் ''காலைக்கதிர் அலுவலகத்திலை இருந்து இந்த மின்னஞ்சல் கடிதங்களை தந்தவை''என்று ஒரு கத்தைத் தாள்களை வாத்தியார் கையில் கொடுத்தான்.

அந்தக் காகிதங்களை மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டே ,வாத்தியார் ''நாங்கள் கதைக்கிற ஊர்வம்பை காலைக்கதிர் பேப்பரிலை வெளியிடுகினம்.அதோடை மின்னஞ்சல் முகவரி ஒன்றும் போடுகினம்.அந்த முகவரிக்கு வந்த மின்னஞ்சல்கள்தான் இவை'' என்று விவரித்தார்.

அதில் ஒன்றை வாங்கி வாசித்த ஜீவன்

''இந்தியப் பல்கலைக் கழகங்களின் தொலைக் கல்வி கற்கைகளை முடித்த இலங்கை மாணவர்கள், சான்றிதழ் பெற்றுக் கொள்ள நாயா பேயா அலைய வேண்டியிருக்கு என்று ஒருத்தர் மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறார்....இதைப்பற்றியொருக்கா விசாரிக்க வேண்டும்.'' என்றபடி எழுந்தான்.

''இருட்டுப் பட்டிட்டுது,பனியும் பொழியத் தொடங்கி விட்டது. இதுகளைப் பிறகு வாசிப்பம்'' என்று கூறியபடி எழுந்தார் ஏரம்பர்.மற்றவர்களும் எழ,கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# நூறு மடங்கு பெரிதாகும் சூரியன்!



சூரியன் 5 பில்லியன் வருடங்களுக்கு ஒருமுறை 100 மடங்குகள் பெரிதாகுவதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

தொலைநோக்கியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பெல்ஜியம் வானிலை விஞ்ஞானி சிலர் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

எனினும் 5 பில்லியன் வருடங்களுக்கு ஒருமுறை சூரியன் நூறு மடங்கு பெரிதாகி அழிவடைகின்றது. இந்த நிலையில் சூரிய குடும்பத்தின் அனைத்து கோள்களில் உள்ள உயிரினங்களும் பாதிப்படைகின் றன என்று அவர்கள் சுட் டிக்காட்டியுள்ளனர்.

பூமியின் வரலாற்றில் பல முறை அந்த நிலை ஏற்பட்டுள்ளதற்கான தடயங்கள் காணப்படுகின்றன என்று அவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

சூரியன் நாளுக்கு நாள் பெரிதாகின் றமையால் அதன் வெளிச்சமும் அதிகரித்துள் ளதாகத் தெரியவந்துள்ளது என்று விஞ்ஞா னிகள் கூறுகின்றனர்.

அதற்கமைய பூமியின் எதிர்காலம் நிலை யற்ற நிலைமைக்குள்ளாகும் என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஆஸியில் காட்சிக்கு வைத்த 1,468 களிமண் இதயங்கள்



போர்ச் சூழல் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களை நிம்மதியாக வாழவிட வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்தும் நோக்கில் களிமண்ணால் ஆயிரத்து 468 இதயங்கள் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத் தப்பட்டன.

ஆஸ்திரேலியாவில் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட் டது.

இந்த நிகழ்வுக்கான திட்டமிடல் ஆரம்பிக்கும் போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 468 அகதிகள் தடுப்பு முகாம்களில் சிறை வைக் கப்பட்டிருந்தனர். அதனை நினைவுபடுத்தும் முக மாகவே ஆயிரத்து 468 களிமண் இதயங்களை உருவாக்கியதாக கலைஞர் பென்னி ரெயன் (Penny Ryan) கூறியுள்ளார்.

இதன்போது நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தான், எங்களுக்கும் சுதந்திரத்தைக் கொடுங்கள், இவ்வுலகில் மனித உரிமை என்பது போலியானது என்று தங்கள் மன வலிகளை துண் டுச்சீட்டுகளிலும் பிரதிபலித்துள்ளனர்.

டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரி மைகள் தினம். சொந்த நாட்டில் உள்ள போர்ச் சூழல் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு படகு வழியே சென்ற அகதிகள், மனுஸ் தீவு மற்றும் நவுருதீவில் உள்ள தடுப்பு முகாம்களில் மூன்றாண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அகதிகள் தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு கடுமையான கொள்கைகளை கொண்டிருக் கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



“ஒரு காலத்தில் இது பூமியின் முக்கிய உயிரினமாகத் திகழ்ந்தது. இவ்வளவு பெரிய உயிரினம் எப்படி அழிந்து போனது என்பது இன்றைக்கும் புதிராக உள்ளது.”

# விண்கற்களால் மட்டுமே டைனோசர்கள் அழியவில்லை!

உலகில் புரியாத புதிராக எத்தனையோ விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றுக்கு இன்னமும் விஞ்ஞானிகள் விடை தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் இன்று வரை விடை தேடிக் கொண்டிருக்கும் ஒரு விடயம் தான் டைனோசர் என்கிற உயிரினம் பற்றிய ஆய்வு. டைனோ சர்கள் பற்றிய செய்திகள் எப்போதுமே ஆர் வத்தை ஏற்படுத்துபவையாக இருக்கின்றன.

சாதாரண மக்களையும் 'டைனோசர்களைப் பற்றி அறிய வைத்ததிலும், அவற்றைப் பற்றி ஆர்வம் கொள்ள வைத்ததிலும் ஸ்பீல்பெர்க்கின் 'ஜுராசிக் பார்க்' படத்துக்கு ஒரு முக்கியப் பங் குண்டு.

இந்தத் திரைப்படத்துக்குப் பிறகு, உலகம் முழுவதும் டைனோ சர்கள் பற்றிய கதைகளே உலாவத் தொடங்கின. பூமியில் சுமார் ஆயிரத்து 300 வகையான 'ஊர்வன' இருக்கின்றன. அவற்றில் ஒன்று தான், டைனோசர்.

ஒரு காலத்தில் இது பூமியின் முக்கிய உயிரின மாகத் திகழ்ந்தது. இவ்வளவு பெரிய உயிரினம் எப்படி அழிந்து போனது என்பது இன்றைக்கும் புதிராக உள்ளது.

குறிப்பாக விஞ்ஞானிகள் விண்கற்கள் விழுந்தமையால்தான் டைனோசர்கள் அழிந்து போயின எனும் வாதத்தை இன்று வரை முன் வைத்து வருகின்றனர்.

கொடூர மிருகமாக வரலாற்றிலும், திரைப் படங்களிலும் சித்திரிக்கப்படும் டைனோசர் இனம் உண்மையில் விண்கற்களால் தான் அழிவடைந்ததா? அல்லது திட்டமிட்டே அழிக்கப்பட்டதா? என்கிற சந்தேகம் அண் மைக்காலமாக உலகளாவிய ரீதியில் எழத் தொடங்கியுள்ளது.

இதற்கான விடை எப்போது வெளிவரும்? என்று காத்திருக்க, இதற்கு விஞ்ஞானிகள் முழுமையான விடை தரவே இல்லை.

ஏறக்குறைய 650 லட்சம் ஆண்டு களுக்கு முன் பூமியில் உலவித் திரிந்திருக்கின்றன டைனோசர்கள். அப்போது இவைதான் பூமியின் மிகப் பெரிய உயிரினங்கள்.

மிக அதிகமான எடை, மாற்றம் பெற்ற



காலச்சூழலால் டைனோசர்கள் மடிந்திருக்கலாம் என்று ஒரு கருத்துக் கூறப்படுகிறது. ஆனால் 1980 இல் லூயிஸ் அல்வரேஸ் என்ற புவி ஆராய்ச்சியாளர் ஓர் ஆய்வு செய்தார். அதன்படி, 650 லட்சம் ஆண்டு க ளுக்கு முன் உரு வான நில அடுக்குகளில் 'இரிடியம்' என்ற தனிமம் அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது பூமியில் மிக அரிதாகக் காணப்படும் தனிமம். விண்கற் களில் இந்தத் தனிமம் அதிகமாக உள்ளது. எனவே, பூமியில் விழுந்த விண்கல்லில் இருந்து இரிடியம் வந்திருக்கக்கூடும், அந்த கனிமத்தின் தாக்கத்தினால்தான் டைனோசர் இனம் அழிவடைந் தன என்றும் கூறப்படுகின்றது.

அந்தக் குறிப் பிட்ட காலகட்டத்தில், பல மைல் அக லம் கொண்ட ஒரு ராட்சத விண்கல், பூமியில் மோதியிருக்கலாம், அந்த மோத லால் டைனோசர் கள் அழிவைச் சந்தித்திருக்கக் கூடும் என்றும் கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஆனால், இன்றைய பறவைகள், டைனோசர் களில் இருந்து பரிணமித்தவை தான். எனவே ஒரு விண்கல் மோதலால் மட்டும் டைனோசர்கள் முற் றிலுமாக அழிந்துபோயின என்பதை ஏற்க முடியாது.

எனவே, டைனோசர்களின் அழிவு குறித்த புதிர் முற்றிலுமாக விடுபடவில்லை என்பதே மிகப் பெரிய உண்மை. காலநிலை மாற்றங்களால் டைனோசர் மட்டும் எப்படி அழிவடைய முடியும்.

உலகின் ஆரம்ப காலம் தொட்டு வாழ்ந்து வரும் விசித்திர விலங்குகள் எவ்வாறு அழிந்தன என கூற முடிந்த விஞ்ஞானிகளால் டைனோசர் அழிவுக்கான காரணம் தெளிவுபடுத்தப்படாததற்கான காரணம் என்ன?

டைனோசர்கள் இனம் விண்கற்களால் மட்டும் அழிவடையவில்லை மாறாக மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தமை, உயிரினங்களின் வாழ்க்கைக் கோலம் என்பவற்றை கருத்திற் கொண்டு திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கான விடை வெளிச்சத்துக்கு வரும் முன்பு மீண்டும் டைனோசரை உயிர் பெற்றெழச் செய்யும் முயற்சிகளில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.



### கச்சதீவு அந்தோனியார் யாத்திரைத்தல திறப்பு விழா

டிசெம்பர் 7 ஆம் திகதி திறக்கப்படவிருந்து, பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மறைவையொட்டி ஒத்திவைக்கப்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தல திறப்பு விழா டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### செவித்திறன் அற்றவர்களுக்கு திருத்தந்தையின் கிறிஸ்மஸ் வாழ்த்து

2016ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா உங்களுக்கு புனிதமான ஒரு திருவிழாவாக அமையட்டும் என்று செவித்திறன் அற்றவர்களுக்கு ஒரு காணொலிச் செய்தியை திருத்தந்தை அனுப்பியுள்ளார்.

செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் அற்றோர் மீது திருத்தந்தை தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.

# தனிநாயகம் அடிகளாரின் தொலைநோக்கு அவரை தமிழ்மொழிக் காவலனாகவே அறிமுகம் செய்தது

***தனிநாயகம் அடிகளார் ஆய்வு மைய தொடக்க விழாவில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்***





தனிநாயகம் அடிகளாரின் தோற்றமும் வாழ்வியலும் சமயச் சூழலாக இருந்தபோதும் அவர் ஒரு தமிழ்த் தூதராகவே பலராலும் அறிமுகம் செய்யப்பட்டார். ஆனால் அவரது தொலைநோக்கு அவரை ஒரு தமிழ்மொழிக் காவலனாகவே அறிமுகம் செய்யவைத்தது.

தனிநாயகம் அடிகளார் ஆய்வு மைய தொடக்க விழாவில் உரையாற்றிய முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அவருடைய முதல் பணி நூலாக்கமாகும். 'தமிழ்த்தூது', 'ஒன்றே உலகம்' என்னும் நூல்களை அவரே அமைத்து வழிகாட்டினார். ஒப்பாய்வு தமிழிலே வளர்க்கப்படவேண்டியதாயிருந்தது. கிரேக்க, லத்தீன் மொழி நூற் கருத்துகளுடன் தமிழ்மொழி நூற் கருத்துகளை ஒப்பிடல். இவ்விடத்திலே அடிகளார் ஜப்பானிய மொழி இலக்கியத்தையும் சங்க இலக்கியத்தையும் ஒப்பிடும் ஒரு புதிய ஆய்வுத் தடத்தை இனங்கண்டு அடையாளப்படுத்தினார். அவர் அடையாளப்படுத்திய அந்த ஆய்வு 1983 முதல் இன்று வரை தொடரும் என்னுடைய வாழ்நாள் ஆய்வாக அமைந்துவிட்டது. மொழிபெயர்ப்பு

அவருடைய இன்னொரு பணி. பிறமொழி இலக்கிய மொழி பெயர்ப்பின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டினார். தமிழ்-போர்த்துக்கேய அகராதியை 1962இல் வெளியிட்டார். தன்னுடைய உரையாற்றும் பணியூடாக எடுத்துரைப்பு முறைமையையும் பன்மொழிப் புலமையினையும் வளர்க்க வழிகாட்டினார். ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்கு ஓர் அனைத்துலக ஆய்வு மன்றத்தை அமைக்க வழிகாட்டினார் ஆய்விதழ் ஒன்றைத் தொடங்கி ஆய்வாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார். - என்றார்.

## தமிழ் ஆய்வுத்துறையை செழுமைப்படுத்தி வளப்படுத்தியவர் தனிநாயகம் அடிகளார்

***இணைப்பாளர் ஜெயசேகரம் அடிகளார் பெருமிதம்***

தனிநாயக அடிகளார் அவர்கள் தமிழ் ஆய்வியலின் முக்கிய வரலாற்றுக் கட்டமொன்றில் வாழ்ந்தவர். அவ்வரலாற்றை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் அவர் அயராது செயற்பட்டு நின்றார். அகலப்படுத்தல் என்ற வகையில் குறிப்பாக தமிழகம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய புவியெல்லைகளுக்குள் கட்டுப்பட்டுக்கிடந்த தழிழாய்வைப் பரந்த உலகை நோக்கிக் கட்டவிழ்த்து வழிப்படுத்திய வகையில் அவரது சாதனை வரலாறு முக்கியத்துவமுடையது.

- இவ்வாறு குறிப்பிட்டார் ஆய்வு மையத்தின் இணைப்பாளர் ஜெயசேகரம் அடிகளார். ஆய்வு மையத் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு: -

அடிகள் வாழ்ந்த காலத்தில் ஆய்வுகள் பாரம்பரியம், தொன்மம், இலக்கணம், இலக்கியம், வரலாறு, கல்வெட்டு ஆகியவை குறித்தும் அத்துடன் இந்திய உப கண்டத்தில் மொழிக்கலப்புக்கள் - குறிப்பாக சமஸ்கிருத மொழி மையத்தில் ஆய்வுகள் இடம் பெற்றன. அதற்கு அப்பால் அதிகளவு ஆய்வுகள் நடத்தப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளின் பெரும் பகுதியினர் தமிழகம், ஈழம், ஓரளவு மலேசியா சிங்கப்பூர் புவிபரப்புகளுக்குள் தமது ஆய்வுப் பார்வைகளைக் குவிமையப்படுத்தி நின்றவர்களேயாவர். சிறிய தொகுதியினரே புவி வட்டத்துக்கு அப்பால் இயங்கினர். அவர்களுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டவர் அடிகளார். - என்றார்.

## உரோம் நகரில் மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்படும் கிறிஸ்மஸ் குடில் காட்சிகள்

உரோம் நகரின் வில்லரேஜியா பகுதியில் மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்படும் கிறிஸ்மஸ் குடில் காட்சிகள் பத்தாவது ஆண்டாக இவ்வாண்டும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வரை நடித்து காட்டப்படும் இந்தக் காட்சிகளில் 150க்கும் அதிகமான நடிகர்கள் பங்கேற்கின்றனர்.

உலகெங்கும் சிறு சிறு துண்டுகளாகத் திகழும் போர்களைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் கவலை வெளியிட்டுள்ளமையை முக்கியத்துவப்படுத்தி இவ்வாண்டு நிகழும் கிறிஸ்து பிறப்பு காட்சிகளில் உலகின் அமைதி என்பது மையக்கருத்தாக அமையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வில்லரேஜியா ஊர் சமுதாயம் மேற்கொண்டுள்ள இந்த முயற்சி, இத்தாலி நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் உருவாக்கப்படும் கிறிஸ்து பிறப்பு காட்சி என்றும், இம்முயற்சிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் வாழ்த்துக்களையும், ஆசீரையும் வழங்கியுள்ளார் என்றும் இவ்வூர் தலைவர்கள் கூறினர்.

## உண்மையின் எண்ணங்கள்

# தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் யாழ் நகரில் 125 யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள குடும்ப மருத்துவ நிறுவகத்தில் மேல் மாடியில் உதயமாகியுள்ளது.

கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் அன்ரன் பிலிப் சின்னராசா தனிநாயகம் அடிகள் மேலும் தமிழின் மேலும் கொண்ட தீராத பற்றால் தமது நீண்டகாலத் திட்டமாக இம்முயற்சியை முன்னெடுத்துள்ளார். தனது நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து மற்றவர்களின் உதவியையும் பெற்று தூரநோக்குடன் ஆற்றும் இப்பணிக்குக் கைகொடுக்க அனைவரும் முன்வர வேண்டும்.

தமிழ் மொழி - இலக்கியம் - பண்பாடு - ஆன்மிக வளங்களில் ஆய்வுப் புலமை அடைவதற்கு இம்மன்றம் வழி வகுக்கும் என்ற அழைப்பை சிறப்பாகப் பயன்படுத்தத் தகுதி வாய்ந்தவர்கள் முன்வர வேண்டும்.

அ.பி.ஜெயசேகரம் அடிகளாரை இணைப்பாளராகக் கொண்டு நடைபெறவுள்ள மேற்படி திட்டத்தின் கீழ் இப்பணியை திட்டமிட்டுத் தீர்மானித்து செயற்படும் அனைவரையும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பாராட்டுகிறது. பணி சிறக்க வாழ்த்துகிறது.

## மக்களுக்கு லெபனான் அரசு வழங்கக்கூடிய கிறிஸ்மஸ் பரிசில்

லெபனான் நாட்டின் அரசியல் கட்சிகள் இணைந்து ஓர் அரசை உருவாக்குவதுதான் அந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கக்கூடிய ஒரு கிறிஸ்மஸ் பரிசில் என மாரனைட் முதுபெரும் தந்தை கர்தினால் தெரிவித்துள்ளார்.

லெபனான் நாட்டின் அரசுத் தலைவராக மைக்கல் நியமனம் பெற்ற பின்னரும் அந்நாட்டில் நிலையான ஓர் அரசு உருவாவதில் மோதல்கள் நிலவி வருவதைக் குறித்து தன் கவலையை வெளியிட்ட முதுபெரும் தந்தை அவர்கள் கிறிஸ்மஸ் பெருவிழாவுக்கு முன்னர் ஓர் அரசியல் தீர்வு உருவானால்,மக்கள் மகிழ்வர் என்று எடுத்துரைத்தார்.

## வத்திக்கானில் கிறிஸ்மஸ் மரம்

வத்திக்கானில் கிறிஸ்து பிறப்பு காட்சியமைப்பும் கிறிஸ்மஸ் மரமும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி 2016 அன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

5 மீற்றர் உயரம் கொண்டு, 90 ஆண்டுகள் நிறைவுசெய்துள்ள கிறிஸ்மஸ் மரம், இத்தாலியின் திரிதெந்து பகுதியின் காடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்தாலியில், புற்றுநோய் உட்பட பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர் சிறுமியர் உருவாக்கியுள்ள பல்வேறு வடிவங்கள் இந்த கிறிஸ்மஸ் மரத்தை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

நோயுற்ற குழந்தைகளை படைப்பாற்றல் மிக்க செயல்களில் ஈடுபடுத்தும் மருத்துவ முறையை அறிமுகப்படுத்தியுள்ள அறக்கட்டளைக்கும் இந்த மரத்தை அலங்கரித்த குழந்தைகளுக்கும்,திருத்தந்தை பிரான்சிஸ் தனிப்பட்ட பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்தார்.


கிறிஸ்து பிறப்பு காட்சியை, மால்ட்டா உயர் மறைமாவட்டமும், மால்ட்டா அரசும் இணைந்து, வத்திக்கானுக்கு ஒரு கொடையாக வழங்கியுள்ளன என்றும், மால்ட்டாவில் கடந்த ஆண்டு நிகழ்ந்த ஒரு போட்டியில் வெற்றி பெற்ற கலைஞரின் படைப்பாக இந்த கிறிஸ்து பிறப்பு காட்சி அமைந்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குடில் மற்றும் கிறிஸ்மஸ் மரம் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி வரை மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

வொன்.வேணு கிருஷ்ணா




**உலகின் மிகவும் அபாயகரமான மற்றும் கொந்தளிப்பான வெடிப்பு புள்ளிகளில் ஒன்றுக்கு நெருப்பூட்டி, சீனாவுடனான மோதல் அபாயத்தை அதிகரிப்பாரா ட்ரம்ப்?**






அவர் நிர்வாகம், ''ஒரே சீனா'' கொள்கையைக் கைவிடச் செய்ய தாய்வானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தும் என்றும், சுட்டிக் காட்டியதன் மூலமாக, ட்ரம்ப் பொறுப்பற்ற விதத்தில் உலகின் மிகவும் அபாயகரமான மற்றும் கொந்தளிப்பான வெடிப்பு புள்ளிகளில் ஒன்றுக்கு நெருப்பூட்டி, சீனாவுடனான மோதல் அபாயத்தை எடுத்துள்ளார். தாய்வானை பிரிந்துபோகவிரும்பும் பிரதேசமாக கருதும் பெய்ஜிங், தாய்வான் அரசாங்கம் உத்தியோகபூர்வ சுதந்திரத்தை அறிவிப்பதைத் தடுக்க அது போருக்குள் இறங்கும் என்றும் அறிவித்துள்ளது.





**தாய்வானுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்கும் ரியன்ஸ் பிரைபஸ்**

பாதுகாப்புத்துறை தலைமை தளபதியாக ட்ரம்ப் பதவி வழங்கியுள்ள ரியன்ஸ் பிரைபஸ் (Reince Priebus) உட்பட ட்ரம்பின் இடைக்கால குழு மற்றும் வரவிருக்கும் நிர்வாகத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் தாய்வானுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்கின்றனர் என்று வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டது.




அவர் (ரியன்ஸ் பிரைபஸ்) குடியரசுக் கட்சி பிரதிநிதிகள் குழுவுடன் 2011 இல் மற்றும் மீண்டும் 2015 ஒக்ரோபரிலும் தாய்வானுக்கு விஜயம் செய்து, சாய் இந்தாண்டு தாய்வான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரே அவரைச் சந்தித்திருந்தனர் என்று செய்திகள் குறிப்பிடுகின்றன. தாய்வான் வெளியுறவு அமைச்சர் டேவிட் லீ, ரியன்ஸ் பிரைபஸ் ஐ ஒரு நண்பராகக் குறிப்பிட்டுள்ளதுடன்,




அவரது நியமனத்தை அத்தீவுக்கான ''நற்செய்தியாக'' விவரித்தார்.

ட்ரம்ப்பின் கூட்டாளிகள் குடியரசுக் கட்சி தேர்தல் செயற்றிட்டத்தில் தாய்வானுக்கு ஆதரவான ஒரு வகைமுறையை, அதாவது ஜனநாயகம், மனித உரிமைகள், சுதந்திர சந்தை பொருளாதாரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீதான மதிப்புகளை அதனுடன் தாய்வானுடன் நாம் பகிர்ந்து கொள்கிறோம், என்பதை, சேர்த்திருப்பதாகவும் போஸ்ட் குறிப்பிட்டது. வெளிப்படையாகவே பெய்ஜிங்குக்கு விரோதமாக உள்ள அந்த செயற்றிட்டம் சீனாவுடனான நமது எதிர்கால உறவுகள் குறித்த நமது கடந்த செயற்றிட்டத்தின் நம்பிக்கை தரும் வாசகங்களுடன் சீனாவின் நடவடிக்கை முரண்படுகிறது என்று அறிவித்தது.






**ட்ரம்ப் தாய்வானை அரவணைக்கிறார்**

ட்ரம்ப் தாய்வானை அரவணைப்பதன் மூலமாக, ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் மற்றும் வெளியுறவுத்துறை செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கர் நிலை நிறுத்திய ''ஒரே சீனா'' (One China) கொள்கையை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தி உள்ளார்.


நிக்ஸன் கால சீன-அமெரிக்க உறவு

1972 இல் பெய்ஜிங்குக்கான நிக்சனின் விஜயம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாற்று வீழ்ச்சியின் ஒரு தீர்க்கமான அறிகுறியுடன் பொருந்தி இருந்தது -இரண்டாம் உலக போருக்குப் பிந்தைய பொருளாதார ஒழுங்கமைப்பின் அச்சாணியாக இருந்த டாலர்-தங்கம் பரிவர்த்தனை, ஒகஸ்ட் 1971 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

பெய்ஜிங்கை அங்கீகரித்ததன் மூலமாக மற்றும் தைப்பேய் (Taipei) இற்கான ஆதரவைத் திரும்பப் பெற்றதன் மூலமாக, நிக்சன் நிர்வாகம் சோவியத் ஒன்றியத்தை பலவீனப்படுத்துவதற்கான வாஷிங்டனின் முயற்சிகளில் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியினது ஒத்துழைப்பைப் பெற்றது. வாஷிங்டன் உடனான சீனாவின் கூட்டணி, நடைமுறையில் 1991 சோவியத் ஒன்றிய பொறிவுக்குப் பின்னர் தீவிரமடைந்த முதலாளித்துவ மீட்சி நிகழ்முறைக்கு ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. இது மாபெரும் மலிவு உழைப்பின் அடிப்படையில் உலகின் மிகப் பெரிய உற்பத்தி மையமாக சீனாவை மாற்றுவதற்கான பாரிய ஏகாதிபத்திய முதலீட்டுக்கு இட்டுச் சென்றது.




**சோவியத் ஒன்றியத்தின் முடிவுக்குப் பின்னர் இருந்து அதிகரித்தளவில் இராணுவ வழிவகைகள் மீது அமெரிக்கா தங்கியுள்ளது**

சீனாவை உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக மாற்றியுள்ள அதன் விரிவாக்கமும், ஒப்பீட்டளவில் அமெரிக்காவின் வீழ்ச்சியும் அவற்றின் பங்காண்மையைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிந்துள்ளது. பொருளாதார வழிவகைகளைக் கொண்டு இனியும் அதன் மேலாதிக்கத்தைப் பேண முடியாமல் அமெரிக்கா, சோவியத் ஒன்றியத்தின் முடிவுக்குப் பின்னர் இருந்து அதிகரித்தளவில் இராணுவ வழிவகைகள் மீது தங்கியுள்ளது. அமெரிக்க தலைமையிலான ஒரு கால் நூற்றாண்டு போர்கள் இப்போது அணுஆயுதமேந்திய சீனா மற்றும் ரஷ்ய ஆட்சிகளுடனான மோதல்களாக ஒன்று திரண்டு வருகின்றன மற்றும் இது ட்ரம்பின் கீழ் தீவிரப்படுத்தப்படும்.

(ரஷ்யாவுடன் நல்லுறவுகளைக் கட்டியெழுப்ப ட்ரம்ப் விரும்பி தனிப்பட்ட நகர்வுகளை மேற்கொண்டாலும் அமெரிக்காவின் உளவுத்துறை நிபுணர்களும் அமெரிக்க ராஜதந்திரிகளும்- ட்ரம்ப்புக்கு விசயம் இப்பொழுது பெரிசா விளங்கவில்லை போகப் போக விளங்கும். என்றே கருதுவதாகத் தெரிகிறது.)

**ஒபாமா நிர்வாகத்தின் ஆக்ரோஷமான "ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பை"ட்ரம்ப் இரட்டிப்பாக்க விரும்புகிறார்.**

ஆசிய-பசுபிக்குக்கான பலமான தொலைநோக்கு பார்வை மூலமாக டொனால்ட் ட்ரம்பின் சமாதானம்'' என்று தலைப்பிட்டு நவம்பர் 7 அன்று Foreign Policy வலைத் தளத்தில் வெளியான ஒரு குறிப்பிடத்தக்க கருத்துரை, தாய்வான் சம்பந்தமாக மட்டுமல்ல, மாறாக அப்பிராந்தியம் முழுவதையும் சம்பந்தப்படுத்தி சீனாவை நோக்கிய ஒரு மோதல் கொள்கையை வரையறுக்கிறது. ட்ரம்ப் அவரது தனிமைப்படுத்திக் கொள்ளும் ஒரு நிலைப்பாட்டை ஏற்பதில் இருந்து விலகி, ஒபாமா நிர்வாகத்தின் ஆக்ரோஷமான ''ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பை''இரட்டிப்பாக்க விரும்புகிறார்.

''ட்ரம்பின் உயர்மட்ட பொருளாதார மற்றும் ஆசிய ஆலோசகர்களில் ஒருவராக'' போஸ்ட் ஆல் வர்ணிக்கப்படும் பீட்டர் நவார்ரோ மற்றும் அலெக்சாண்டர் கிரே ஆல் எழுதப்பட்ட கருத்துரை, நிறைய வாக்குறுதியளித்த ஆனால் செயலில் செய்யத் தவறிய ஒபாமாவின் '' ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பை'' சாடுகிறது. இந்த முன்னெடுப்பு ''உரக்க பேசினாலும், ஆனால் அதற்கு பின்னால் ஒன்றுமே இல்லாதவாறு அப்பிராந்தியத்தில் நிறைய பதற்றம் மற்றும் ஸ்திரமின்மைக்கு இட்டுச் சென்றுள்ள ஒரு புத்திசாலித்தனமற்ற விடயமாக மாறிவிட்டது,''என்று அது அறிவிக்கிறது.

(கேள்வி தொடரும்...)

# நட்டாற்றில் விடப்பட்ட பெண் தலைமை குடும்பங்கள்

நாட்டில் இடம்பெற்ற முப்பது வருட கால யுத்தம் உறவுகளை எம்மிடமிருந்து பறித்து விட்டது. ஆனாலும் தளராமல் தமது குடும்பங்களை நிர்வகிக்க வேண்டிய நிலையில், பெண்க்ள் தலைமை தாங்கும் குடும்பங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழியின்றியும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழியின்றியும் காலத்துடன் போராட வேண் டிய நிலைக்கு அந்தக் குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு இன்று வரை உறுதிப் படுத்தப்படவில்லை. அதிலும் வடக்கு, கிழக்கில் இன்று வரை போதிய வசிப்பிட வசதிகளின்றி போர் முடிந்த பின்னரும் மக்கள் அல்லலுகின்றனர். பாதுகாப்பு வலயங்களில் காணிகள் அகப்பட்டுள்ளமையால் வாழ்விட வசதிகளின்றி, பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளவும் வழியின்றி பல்வேறு குடும்பங்கள் தவிக்கின்றன.

தொகுப்பு- அ.றொக்ஷன்



## எச்.எச்.கருணாவதி
காலி மாவட்டம்

எங்களுடைய பிரதேசத்தில் கிடைக்கும் சுண்ணக் கற்கள், சிற்பி களை எடுத்து அதைச் சுட்டு சுண்ணாம்பாக்கி விற்பனை செய்து வருகின்றோம்.கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரழிவான சுனாமியின் போது எமது மாவட்டம் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. இதனால் இங்கு நடைபெற்று வந்த பல்வேறுபட்ட தொழில்கள் இல்லாமல் போய்விட்டன. சுனாமிக்கு முன்னர் கயிறுதிரித்தல் தொழில் நல்ல நிலையிலே இருந்தது. சுனாமிக்குப் பின்னர் அத் தொழில் இல்லாமல் போய்விட்டது.

எமது பிரதேசத்தில் உள்ள பெண்கள் சுய தொழில் செய்வதில் ஆர்வம் உள்ளவர்கள். ஆனால், பொருளாதாரப் பிரச்சினை காரணமாகக் கைத்தொழில்களை முன்னெடுத்துச் செல்வது கடினமாக உள்ளது.

தொழில் செய்வதற்கான வழிகளை ஏற்படுத்தினால் எமக்கு உதவியாக இருக்கும். எங்களது பிரதேசத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் பல பேர் சிரமம் அடைகின்றனர். எம்மைப் போல் வறுமையில் உள்ளோருக்கு அரசு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முன் வரவில்லை. அத்துடன், எமது சமுதாயத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், பெண் தலைமைத்துவமான குடும்பங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுத் தல் என்பவை அரசால் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எமது மாவட்டத்திலுள்ள பெண்தலைமைக் குடும்பங்களில் பல பேர் உடல், உளப் பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளனர். இவர்களை ஆற்றுப் படுத்தும் வகையிலான செயற்பாடுகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

பெண் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள இளைஞர்கள் சிலர் போதைப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களையும் அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். உரிய தொழில் வழிகாட்டலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எமது சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டும்.

'பெண்தலைமைத்துவக் குடும்பங்களை வலுப்படுத்தல்- நல்லிணக்க வழிமுறையின் முன்னேற்றப் பாதை' எனும் தொனிப் பொருளில் விழுது ஆற்றல் மேம்பாடு மையம் 'போக்கஸ்' நிறுவனத்துடன் இணைந்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தேசிய மாநாடு ஒன்றைக் கடந்த வியாழக்கிழமை ரில்கோ விடுதியில் நடத்தியது.

இதன்போது நாட்டில் யுத்தத்தாலும் மற்றும் பல காரணங்களாலும் பாதிப்புக்களுக்கு ஆளான பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்கள் தமது வாழ்வியலின் சோகங்களைப் பகிர்ந்துள்ளனர்.

வடமேல் மாகாண சுகாதார அமைச்சின்செயலாளர்டி.பி.விக்ரமசிங்க, வடமேல் மாகாண சுகாதார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ரவீந்திரா ரத்நாயக்க, வடமேல் மாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி அலுவலர் ஆர்.எம்.எஸ்.குலரத்ன, யாழ். மாவட்ட செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இராம சாமி ரமேஸ், யாழ். மாவட்ட செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.உதயினி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் என்.கீதாறோகினி, வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் பி.முகுந்தன் மற்றும் ஊடகவியலாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இளம் பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் பெண் தலைமைத்துவமான குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகுகின்றனர். பாதுகாப்பு என்பது மிகவும் கேள்விக்குறியாகவுள்ளது.

எங்களுக்குத் தரப்படும் வீட்டுத்திட்டங்களை முடிப்பதற்கு ஆண் உதவி இல்லை. வெளியிலிருந்து ஆண்களைப் பிடிக்க பணமும் தேவைப்படுகிறது. இதனால் ஜன்னல், கதவு இல்லாமல் அரை குறையாக வேலை முடிந்த வீடுகளிலேயே எம்மைப் போன்ற பலர் காலத்தை ஓட்டுகின்றனர்.

எமது பாதுகாப்பை உறுதிப் படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும். ஆனால், அவர்கள் எமக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதில்லை.

நாங்கள் எமது பிரச்சினை தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்போனால் முதலில் அந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வார்கள். பின்னர் அதுபற்றிக் கண்டு கொள்ள மாட்டார்கள். அதுமட்டு மன்றி, எமது பெண் பிள்ளைகள் மீது பாலியல் ரீதியான சேட்டை செய்கின்றனர். பாதுகாப்புத் தர வேண்டிய பொலிஸாரே இவ்வாறான முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது வேதனை தருகிறது.

பெண் பிள்ளைகளை மிரட்டி தொலைபேசி இலக்கங்களை வாங்குகின்றனர். இரவு நேரங்களில் அழைப்பை ஏற்படுத்தித் துன்புறுத்துகின்றனர்.

எமதுமாவட்டத்தில்ஆயிரத்து 800 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவர்களின் பாதுகாப்பு என்பது மிகவும் கேள்விக்குறியாக வுள்ளது.

நாங்கள் வெளியில் செல்லும் போது புலனாய்வுப் பிரிவினர் எம்மைத் தொடர்கின்றனர். அச்சத்தில் வாழ வேண்டியுள்ளது. எமது சொந்த மண்ணில் கூட நிம்மதியாக வாழ முடியவில்லை.

இவ்வாறான அச்சுறுத்தல் உள்ளமையால் எம்மால் தலை நிமிர்ந்து தன்னம் பிக்கையுடன் வாழ முடியாதுள்ளது. எமது பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படுத்த மட்டுமே முடியும். இரண்டாவது பட்சமாக எதுவும் மேற்கொள்ள முடியாது.

ஒரு பெண் வேலைக்குப் போகிறாள் என்றால் தினக் கூலியாக 300 ருபாவே கொடுக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம்? எமது மாவட்டத்தில் உள்ளோரில் கால்வாசிக்கு மேல் பெண்கள் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களாகவே உள்ளன. இவ்வாறான நிலைமைக்குப் போர் தான் காரணம்.

## திருமதி க.கதிர்ச்செல்வன்,
அமரா பெண்கள் ஒன்றியச் செயலாளர், முல்லைத்தீவு



முல்லைத்தீவில் வாழும் நாம் மிகவும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இங்கு இராணுவப் பிரசன்னம் அதிகமாகவே உள்ளது. அதுமட்டுமன்றி, இராணுவத்தின் அச்சுறுத்தல்களும் எமக்கு உள்ளன. இதனை வெளியே சொல்வதற்கு எமக்குப் பயமாக உள்ளது.

இங்கு வரும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட நாங்கள், பல்வேறுபட்ட வகையில் பாதிப்படைந்தவர்களாக உள்ளோம். நிரந்தர வீடு இல்லை. போதிய வருமானம் இல்லை. அதிகமான குடும்பச் சுமை. இவ்வாறு துயரம் தொடர்ந்து கொண்டே போகிறது.



## தவமணி தவராசா
அமரா பெண்கள் ஒன்றியத் தலைவர்

திருகோணமலை மாவட்டம்

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை எமது கிராமம் இராணுவ ஆக்கிரமிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டது. இந்தக் கிராமத்திலிருந்து பல தடவை இடம்பெயர்ந்துள்ளோம். இராணுவ ஆக்கிரமிப்பால் எமது உடைமைகளை விட்டு மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்தோம்.

இடம்பெயர்ந்து 5 வருடங்களின் பின்னர் மீள்குடியேறினோம். கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மீள் குடியேறினோம். எமது கிராமத்தில் 87 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவே உள்ளது.

இங்குள்ள சிறார்கள் போஷாக்குக் குறைபாடுகளுடன் வாழ்கின்றனர்.

சம்பூர் கிராமம் 10 வருடங்களுக்கு மேல் குடியேற்ற வசதியின்றி அப்படியே காணப்படுகின்றது. இங்கு குடியேறிய நாங்கள் இன்று வரை அப்படியே தான் உள்ளோம். வறுமையிலிருந்து மீளவில்லை. இப்பொழுது எமது கிராமத்தில் மரங்கள் கூட இல்லை. எல்லாமே அழிக்கப்பட்டு விட்டன.

இந்தியன் வீட்டுத் திட்டத்தின் போது தனியாள்களுக்கு வீடுகள் கொடுக்கப்படவில்லை. கணவனை இழந்து தனியாக வாழும் பெண்கள் அடிப்படை வசதிகள் இன்றி கொட்டில்களில் வாழ்கின்றனர்.

வங்கிக் கடன்கள் பெற்று வீடமைப்புப் பணிகள் மேற்கொள்வதாக இருந்தால் கடனை எவ்வாறு அடைப்பது என்பதே கேள்வி. அரசியல் கட்சிகள் கூட எமது நிலைப்பாட்டில் அக்கறை காட்டவில்லை. வறுமைக் கோட்டில் வாழ்வோருக்கு 5 பேர் கொண்ட குடும்பங்களுக்கு 350 ரூபாவும் தனி நபருக்கு 250 ரூபாவும் அரசால் கொடுக்கப்படுகிறது.

இப்பணத்தை வைத்துக் கொண்டு கல்வி, சுகாதாரம், போஷாக்கான உணவு என்று எதைச்செய்யலாம். ஒரு நேர உணவையாவது பூர்த்தி செய்ய முடியுமா என்று கவலை தெரிவித்தார்.

## அனுஜா ரோகினி திஸ நாயக்க
மொனராகல

எமது மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களே அதிகம் உள்ளனர். இந்த நிலையில் பெண் தலைமைக் குடும்பங்களின் நிலைமை கேள்விக்குறியே.

பிள்ளைகளின்கற்றல்செயற்பாடுகள் கூட கேள்விக்குறியாக இடைநடுவில் உள்ளன. துன்பநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பகுதி மக்களின்அடிப்படை வசதிகள்தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

முதல் கட்டமாகப் பொருளாதார ரீதியான அபிவிருத்தி அவசியம். இதனை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

வறுமையின் உச்சக்கட்டம் பெண்களை சமூகப் பிறழ்வுகளுக்குள் கொண்டு செல்கின்றது. ஒட்டுமொத்தமாகவே பெண் தலைமைக் குடும்பங்களில் நிலைமை, வாழ்வாதாரம், பாதுகாப்பு, பொருளாதாரம் என்பன கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த சமூகப் பிறழ்வு ஏற்படும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துகள் இல்லை.

# கிளாலி இந்து மயானத்துக்கு வீட்டில் இருந்து தண்ணீர்!

## கிணறு அமைத்துத் தருமாறு கோரிக்கை

சாவகச்சேரி, டிசெ.18

கிளாலி இந்து மயானத்தில் தண்ணீர் வசதி உட்பட அடிப்படை வசதிகள் இல்லாமையால் வீட்டில் இருந்து தண்ணீர் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கிளாலியிலுள்ள நருவில் இந்து மயானம் பல வருடங்களாக எந்தவித அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இக்கிராமத்திலுள்ள 350 குடும்பத்தவர் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இந்த மயானத்தில் அடிப்படை வசதிகளான கிணறு, எரிகொட்டகை, மடம் என்பன இல்லாமையால் தங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்கு மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள்.

உடல் தகனஞ் செய்யப்பட்ட பின்னர் அஸ்தி(சாம்பல்) எடுப்பதற்கு அங்கு தண்ணீர் வசதி இல்லாமையால் சம்பந்தப்பட்டவர்கள் வீட்டில் இருந்தே தண்ணீரைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இந்த அவல நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள மக்கள், மயானத்தில் ஒரு கிணற்றை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

(இ-59)

# பருத்தித்துறை ஐக்கிய வி.கவின் பொதுக் கூட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஆண்டிறுதிப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

விளையாட்டுத்துறை மற்றும் சமூகப் பணிகள் பல தரப்பட்ட விடயங்களில்கழகம்முன்னிலை பெறுவதற்கான செயற்றிட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (க-30)

## தினசரி ராசி பலன் 18.12.2016

சுபநேரம் : காலை : 6.00 – 7.00
மாலை : 3.15 – 4.15
ராகு காலம் : 4.30 – 6.00
குளிகன் : 3.00 – 4.30
எமகண்டம் : 12.00 – 1.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** ஆதாயம் -இன்று உறவினர்களாலும் அந்நியர்களாலும் ஆதாயம் கிடைக்கும்.

**ரிஷபம்:** சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சிநிறையும்

**மிதுனம்:** வரவு- இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நன்னாள்.

**கடகம்:** செலவு- இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும்.

**சிம்மம்** : பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் வரும்.

**கன்னி:** பயம் - எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும்.

**துலாம்:** முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களும் முன்னேற்றம் காணும் நன்னாள்.

**விருச்சிகம்:** தெளிவு - மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கி தெளிவுபெறும் நன்னாள்.

**தனுசு:** சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காணும் நாள்.

**மகரம்:** பக்தி- இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகள் முன்னேற்றம் காணும் நாள். சந்திராஷ்டமம்: உத்திரம் 2,3, 4 ஆம் பாதங்கள் திருவோணம்.

**கும்பம்:** உழைப்பு-அனைத்துக் காரியங்களிலும் முயற்சியுடன் செயற்படும் நாள்.

**மீனம்:** தாமதம் - எண்ணிய எண்ணங்கள் யாவும் தாமதமாகவே நிறைவேறும்.

# நல்லாட்சி அரசாங்கத்தின்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்துடன் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம் ஒன்று மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றத்தவறும் போது அது (ஆட்சி வழமை நிலையாக்கல்) என்று குறிப்பிடப்படுகின்ற ஒரு போக்கால் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தமாகும். சீர்திருத்த அரசாங்கமொன்று ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நெறிமுறையான ஆட்சியையும் தருவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகிச் சென்று முன்னைய ஆட்சியைப் போன்று மாறும் போது அது (வழமை நிலைக்கு) வருகிறது. முன்னைய ஆட்சிக்கும் புதிய ஆட்சிக்கும் இடையிலான பண்பு வேறுபாடு தேய்த்து அழிக்கப்படுகின்ற செயன்முறையே ஆட்சி வழமை நிலையாக்கல் எனப்படுகின்றது. ஏனென்றால் அரசியல் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் மனித உரிமை மீறல்களும் விதி விலக்கானவையாக அன்றி வழக்கமானவையாகிவிடுகின்றன. இலங்கை மாத்திரம் இத்தகைய இடர்பாட்டு நிலைக்குள்ளாகியிருக்கின்றது என்றில்லை. பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா என்று பல ஆசிய நாடுகளில் அண்மைய வருடங்களில் இது நடந்திருக்கிறது. இந்த (வழமை நிலையாக்கல்) பாதையில் பர்மாவும் மெதுமெதுவாகச் செல்லத் தொடங்கியிருக்கிறது என்றே தெரிகிறது. இந்தத் தோற்றப்பாடு குறித்து தத்துவ ரீதியான ஆழமான ஆய்வொன்றை இன்னொரு கட்டுரையில் தான் செய்ய முடியும்.

### ஜனநாயக பாதுகாப்பு அரண்கள்

கடந்த வருடம் நல்லாட்சி அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவந்த ஜனநாயக சீர்திருத்த சக்திகளுக்கும் அவற்றின் ஆதரவு வாக்காளர்களுக்கும் இருக்கக் கூடிய தெரிவுகள் எவை? இந்தக் கேள்விக்கான முதல் பதில் மிகவும் எளிதானது. இப்போது அதன் இருண்ட பக்கத்தை மாத்திரமே காட்டக் கூடியதாக இருக்கின்ற அரசாங்கமொன்று குறித்து நேர்மறையான எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பதில் அர்த்தமேதும் இல்லை. நல்லாட்சி அரசாங்கம் தொடர்ச்சியாகச் செய்து வந்திருக்கும் காரியங்களுக்காகவும் செய்யாதிருக்கும் காரியங்களுக்காகவும் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகியிருக்கிறது. அதனிடமிருந்து எந்தவிதமான பச்சாதாப உணர்வும் வெளிப்படுவதாகவும் இல்லை. இந்தியாவில் கூறப்படுவதைப் போன்று நல்லாட்சி அரசாங்கம் அதன் நெறிமுறை மற்றும் நியாயப்பாட்டைப் பொறுத்தவரை இப்போது இலக்கு மனக் கோட்டைத் தாண்டிவிட்டது. தன்னைச் சீர்திருத்திக் கொள்வதற்கான திறமையோ அல்லது துணிவாற்றலோ அல்லது அறிவுபூர்வமான நிலையோ அதனிடம் இல்லை. ஜனாதிபதியும் பிரதமரும் அடிக்கடி செய்கின்றமையைப் போன்று அரசாங்கத் தலைவர்கள் பொது விமர்சனங்களை அற்பமாகக் கருதி நிராகரிக்கிறார்கள். இது மிகவும் கவலைக்குரியதாகும். அதேவேளை தங்களது குறுகிய நோக்குடனான தனிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுகூலமாக அமையுமென்றால் சில விமர்சனங்களை அரசாங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனநாயாகத்தின் பின்னடைவே கிரமமானதும் திரும்பத் திரும்ப நிகழ்கின்றதுமான யதார்த்தநிலையாக அரசியலில் இருக்கிறதென்றால் நேர்மறையான அரசியல் மாற்றத்தில் நம்பிக்கையை வைப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? எனது பதில் ஆம் என்பதேயாகும். ஜனநாயகப் பாதுகாப்பு அரண்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் மீள வலுப்படுத்துவதற்குமான திறமையையும் துணிவாற்றலையும் எமது சமுதாயம் கொண்டிருக்கும் வரை நேர்மறையான அரசியல் மாற்றத்தில் நம்பிக்கை வைப்பதில் பயனுண்டு என்பதே எனது அபிப்பிராயம். இலங்கையில் தற்போது காணப்படக்கூடியதாக இருக்கின்ற விரக்தியான ஒரு மனநிலைக்கு மத்தியிலும் கூட மிகவும் சாதகமான சமிக்ஞை ஒன்றை நான் அவதானித்திருக்கின்றேன். அதாவது, அரசாங்கத்தின் தவறான நடத்தைகளுக்கு சமூகத்திடமிருந்து எதிர்ப்புக் கிளம்பிக்கொண்டேயிருக்கிறது. அந்த நடத்தைகள் இடையறாது அம்பலப்படுத்தப்படுகின்றன. நல்லாட்சி பரீட்சார்த்தத்தின் தோல்விகளை ராஜபக்ஷ முகாம் அதற்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்கக் கூடிய முறையில் சில சமூக ஊடகங்களும் மாற்றுப் பத்திரிகைகளும் தற்போதைய அரசாங்கம் மீதான விமர்சனங்களைத் தீவிரமாகப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. ஜனநாயாக சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் ஊடாக நல்லாட்சி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கான ஆற்றல் ராஜபக்ஷ முகாமிடம் இல்லை. இவ்வாறு இவர்கள் செய்யக் கூடிய சூழ்நிலை தோன்றக் கூடிய அறிகுறி எதையும் கூடக் காணமுடியவில்லை. இது ஒருவகையில் விசித்திரமான நல்ல பக்கமாகும். அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்கான தங்களது முயற்சியில் ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை பயன்படுத்துகிறார்கள் இல்லை. அவ்வாறு அவர்களால் செய்யவும் முடியாது.

இலங்கைச் சமூகத்தின் ஜனநாயாகப் பாதுகாப்பு அரண்களை மீளக் கட்டியெழுப்பி,மீள வலுப்படுத்தி நிலைபேறானதாக்க வேண்டும். இலங்கை அரசியலில் நல்லாட்சி அரசாங்கத்துக்குப் பின்னரான கட்டமொன்றில் நேர்மறையானதும் கூடுதலான அளவுக்கு ஆக்கப்பூர்வமானதுமான மாற்றங்களைக் காண்பதற்கு இதுவே எமக்கு இருக்கக்கூடிய மிகச் சிறந்த தந்திரோபாயமாகும். அரசாங்கங்கள் வரும் போது அவை நாம் பாடுபட்டுப் போராடிப் பெறக்கூடிய பெறுமதியுடைய அரசியல் இலக்குகளைப் பாதுகாப்பதற்காக ஜனநாயகப் பாதுகாப்பு அரண்கள் உறுதியானவையாகத் தொடர்ந்து இருக்க வேண்டும்.

# இலங்கையில் பாரதி...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் யாழ். ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய எஸ். எஸ். குகநாதன், பிரான்ஸுக்கு புலம்பெயர்ந்து சென்ற பின்னர், பாரிஸ் ஈழநாடு வார இதழை வெளியிட்டார். தற்பொழுது புதிய ஈழநாடு என்னும் இணைய இதழையும் நடத்துகின்றார்.

காசிலிங்கம், ராஜகோபால் ஆகியோர் இணைந்து லண்டனிலிருந்து 'தமிழன்' இதழையும் பின்னர், ராஜகோபால் 'லண்டன் ஈழகேசரி', 'புதினம்' ஆகியனவற்றையும் வெளியிட்டார்கள்.

எஸ்.திருச்செல்வம் கனடா சென்று 'தமிழர் தகவல்' என்னும் இதழை வெளியிடுகிறார்.

இவ்வாறு யாழ். ஈழநாடுவில் முன்னர் பணியாற்றியவர்கள் பாரதியின் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்''திடும் கனவை நனவாக்கி வருகின்றனர்.

இந்தப்பத்தியில், பாரதியின் அச்சமில்லாத தர்மிஷ்டர்கள் பெருகுகின்றனர் என்னும் ஒரு வரி தொடக்கத்தில் வருகிறது.

இலங்கையிலும் ஒரு தர்மிஷ்டர் ஜே.ஆர். ஜயவர்தனாவின் உருவத்தில் வந்தார். அவரது பதவிக் காலத்தில்தான் யாழ்ப்பாணம் ஈழநாடு எரிந்தது. சுமார் 35 வருடங்கள் கழித்து அவருடைய மருமகன் முறையானவர் நாடாளுமன்றத்தில் அதற்காக மன்னிப்புக் கோருகின்றார்.

''தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தருமம் ஒரு நாள் வெல்லும்.'' என்றார் பாரதியார். வடபுலத்தில் எத்தனையோ எரியூட்டல்கள், எறிகணை வீச்சுக்கள், குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்தாலும், ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் இளம் தலைமுறையினரும் அழிக்கப்பட்டாலும் வெட்ட வெட்ட தழைக்கும் வாழை மரம்போன்று, மீண்டும் மீண்டும் தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவந்தவண்ணமே இருக்கின்றன.

அவ்வாறு வெளிவரத்தொடங்கியிருக்கும் 'காலைக்கதிர்' ஊடாக இலங்கையில் பாரதி பற்றிய சிந்தனைகளின் தொடக்கத்தை இங்கு வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகளின் வாயிலாகவே வெளிக்கொணர்வதும் தவிர்க்க முடியாததே.

(தொடரும்)

# அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலாவை தேர்வு செய்ய தடை கோரிய மனுவுக்கு மறுப்பு



சென்னை, டிசெ.18

அ.தி.மு.க வின் பொதுச் செயலாளராகச் சசிகலாவை தேர்வு செய்வதற்குத் தடை விதிக்கக் கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

அ.தி.மு.க வின் முன்னாள் ராஜ்ய சபா எம்.பி. சசிகலா புஷ்பா இந்த அவசர வழக்கை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மறைவுக்கு பின்னர், அப்பதவிக்குப் புதிய நபர்களைத் தேர்வு செய்ய அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் முயற்சித்து வருகின்றனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பதவிக்கு சசிகலாவைத் தேர்வு செய்ய அவர்கள் முடிவு செய்துள்ளனர். கட்சியின் தொண்டர்களின் கருத்தைக் கேட்காமல், இவர்கள் சசிகலாவைத் தேர்வு செய்யவுள்ளனர்.

சசிகலாவை பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யத் தடை விதிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி கே.கல்யாணசுந்தரம் முன்பு நேற்று முன்தினம் பிற்பகலில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.க பொதுச் செயலாளர் பதவிக்குத் தேர்வு செய்யப்படும் நபர், அக்கட்சியில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

ஆனால், சசிகலா கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்தான் உறுப்பினராக உள்ளார்.

அ.தி.மு.க.வின் விதிகளின் படி, பொதுச் செயலாளர் தேர்வு செய்யப் பொதுக்குழுவை கூட்டுவதற்கு 21 நாள்களுக்கு முன்பு அனைவருக்கும் முறைப்படி தகவல் தெரிவிக்க வேண்டும். எனவே, சசிகலாவை பொதுச்செயலாளராகத் தேர்வு செய்ய தடை விதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

இதேவேளை, அ.தி.மு.க. சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தவை வருமாறு:-

'மனுதாரர் சசிகலா புஷ்பா இப்போது அ.தி.மு.கவில் அடிப்படை உறுப்பினர் கூட கிடையாது.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார். அதனால், இந்த வழக்கை தொடர அவருக்கு எந்த ஓர் அடிப்படை உரிமையும் தகுதியும் கிடையாது.

இந்தக் கட்சியில் 18 வயது பூர்த்தியானவர்கள் உறுப்பினர்களாகச் சேரலாம். மேலும் உள்கட்சி விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்துக்கு செல்லக் கூடாது என்று நிபந்தனையுடன்தான் அவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.

அதனால், உள்கட்சிப் பிரச்சினைக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தாலே, அவர்கள் தானாக உறுப்பினர் பதவியை இழந்து விடுவார்கள்.

அப்படிப் பார்க்கும்போது, உள்கட்சி விவகாரம் தொடர்பாக வழக்குத் தொடர்ந்துள்ள மனுதாரர்கள் இருவரும் தானாகவே உறுப்பினர்கள் பதவியை இழந்துவிடுகின்றனர்.

அப்படி இருக்கும் பட்சத்தில் உறுப்பினரே இல்லாத ஒருவர், ஒரு கட்சியின் மீது எப்படி வழக்குத் தொடர முடியும்? .- என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சசிகலா புஷ்பாவின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தவை வருமாறு:-

'சசிகலா புஷ்பாவை அ.தி.மு.க.வில் இருந்து நீக்கியமைக்காகச் சட்டப்பூர்வமான உத்தரவு எதுவும் இதுவரை வரவில்லை.

அவர் ராஜ்யசபா எம்.பி.யாக உள்ளார். இவரை கட்சியை விட்டு நீக்கியதாக ராஜ்யசபாவுக்கும் கடிதம் வரவில்லை.

எனவே, அவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டவர் என்று எப்படிக் கூற முடியும்?

இன்னமும் உறுப்பினராக உள்ளார் என்ற தகுதியின் கீழ் தான் தற்போது சசிகலா புஷ்பா வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மேலும், அ.தி.மு.க. என்பது ஓர் அமைப்பு கழகமாகும். அது கழகத்தின் சங்க விதிகளுக்கு உட்பட்டு தான் செயல்பட முடியும்.

எனவே, சசிகலாவை பொதுச் செயலாளராகத் தேர்வு செய்ய தடை விதிப்பதுடன், தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்று உத்தரவிட வேண்டும்' என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி தெரிவித்த தீர்ப்பு வருமாறு:-

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராகச் சசிகலாவை தேர்வு செய்யத் தடை விதிக்க முடியாது.

தற்போதைய நிலையே அக்கட்சியில் நிலவவேண்டும் என்றும் உத்தரவிட முடியாது. இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொள்கிறேன். இந்த மனுவுக்கு எதிர்மனுதாரர்களான அ.தி.மு.க., சசிகலா, இந்திய தேர்தல் ஆணையம் பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும்.

விசாரணையை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு தள்ளிவைக்கிறேன்.- என்று உத்தரவிட்டுள்ளார்.

## ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி காளையுடன் சென்று ஆர்ப்பாட்டம்



மதுரை, டிசெ.18

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மதுரையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. மதுரை உட்பட அனைத்து மாவட்டங்களில் மீண்டும் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்க வேண்டும்.

இதற்கான நடவடிக்கையை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்பாட்டக்காரர்கள் காளையையும் கொண்டு வந்திருந்தனர்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் காளையை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் ஒழுங்கமைப்பாளர் இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

ஜல்லிக்கட்டுப் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் தங்களது முறையான விவாதம், விளக்கத்தை எடுத்துரைக்க வேண்டும்.

ஜல்லிக்கட்டு தொடர்பில் முறையான அறிவிப்பு வராவிட்டால் எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி போராட்டம் நடத்துவோம்.- என்று தெரிவித்தார்.

## ரூ.2,900 கோடி கறுப்புப் பணம் பறிமுதல்!

டில்லி, டிசெ.18

ரூபாய் தாள்கள் வாபஸ் பெறப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் 586 இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் சுமார் 2 ஆயிரத்து 900 கோடி ரூபா கறுப்புப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக தமிழகத்தில் தொழிலதிபர் சேகர் ரெட்டிக்குச் சொந்தமான இடத்தில் நடத்தப்பட்ட சோதனையில் 140 கோடி ரூபாவுக்கும் அதிகமான புதிய ரூபாய் தாள்களைக் கைப்பற்றியுள்ளோம் என்று வருமான வரித் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிக மதிப்புடைய ரூபா தாள்களை வாபஸ் பெறப் போகிறார் என பிரதமர் மோடி அறிவித்தமையைத் தொடர்ந்து, ஆங்காங்கே கறுப்புப் பணத்தை மாற்றும் நடவடிக்கைகள் ரகசியமாக நடைபெற்று வருகின்றன என்று முறைப்பாடு எழுந்தது. இதைத் தவிர்க்க பல்வேறு கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தபோதிலும், வங்கி அதிகாரிகளின் துணையுடன் இந்த முறைகேடுகள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன என்று தெரிகிறது.

## சுவாசத்தைச் சீராக்க கருணாநிதிக்கு சிகிச்சை

சென்னை, டிசெ.18

சுவாசப் பிரச்சினையைச் சீர்படுத்துவதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சுவாசிப்பதில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை இரவு கருணாநிதி அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையின்4 ஆவது மாடியில் உள்ள சிறப்புப் பிரிவில் அவருக்குத் தொண்டை - நுரையீரலில் ஏற்பட்ட நோய்த் தொற்றுக்கான சிகிச்சையை மருத்துவக் குழுவினர் அளித்து வருகின்றனர்.

கருணாநிதிக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து காவேரி மருத்துவமனையின் செயல் இயக்குநர் வைத்தியர் எஸ். அரவிந்தன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-:

தொண்டை மற்றும் நுரையீரல் தொற்று காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு, காவேரி மருத்துவமனையில் வியாழக்கிழமை இரவு கருணாநிதி மீண்டும் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்குத் தொண்டைப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்து குழாய் பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீனவர்களுக்கு தடுப்புக் காவல் நீடிப்பு!

இராமநாதபுரம், டிசெ.18

சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களின் தடுப்புக் காவலைத் தமிழக நீதிமன்றம் நீடித்துள்ளது.


இராமேஸ்வரம் அரிச்சல் முனைக்கடற்கரைப் பகுதியில் வைத்துக் கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கை மீனவர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னாரைச் சேர்ந்த தேவநேசன், அருள் நேசன், மற்றும் வவுனியா கள்ளி குளம் ஓமந்தை பகுதியைச் சேர்ந்த விஜி என்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 3 பேரையும் கைது செய்த பொலிஸார் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தியமையையடுத்துச் சென்னை புழல் சிறையில் தடுத்து வைத்தனர்.

இந்நிலையிலேயே அவர்களின் தடுப்புக்காவல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்: பாகிஸ்தான் 142 ஓட்டங்களில் சுருண்டது



பிரிஸ்பேன், டிசெ.18

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 142 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துள்ளது.

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் (பகல்-இரவு) போட்டி பிரிஸ்பேனில் இடம்பெற்று வருகிறது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 429 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்து விளையாடிய பாகிஸ்தான் அணி விக்கெட்டுகளை இழந்து திணறியது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுக்கு 97 ஓட்டங்களை எடுத்தது.

சர்பிராஸ் அகமது 31 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இந்நிலையில், நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது.

நேற்றைய ஆட்டத்தில் சர்பிராஸ் அகமது அரை சதம் அடித்தார். முகமது அமீர் 21 ஓட்டங்களுடனும், ரகத்அலி 4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

பாகிஸ்தான் 55 ஓவர்களில் 142 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஆனால், பொலோ-ஒன் கொடுக்காமல் 287 ஓட்டங்கள் முன்னிலையுடன் ஆஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்ஸை விளையாடியது.

# சென்னை டெஸ்ட்டின் 2 ஆவது நாள்: இந்திய அணி சிறப்பான பந்துவீச்சு!

சென்னை, டிசெ.18


சென்னையில் இடம்பெற்றுவரும் 5 ஆவது டெஸ்ட்டின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளின் உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 119 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 352 ஓட்டங்களை எடுத்துள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்தப் போட்டியில், முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 90 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 284 ஓட்டங்களை எடுத்தது. மொயீன் அலி 120, பென் ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

2 ஆவது நாளான நேற்று முதல் ஓவரிலேயே ஸ்டோக்ஸின் விக்கெட்டை அஸ்வின் வீழ்த்தினார். இதனால், இந்திய ரசிகர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

இங்கிலாந்து நேற்று முன்தினம் ஆடிய விதம் இந்திய ரசிகர்களுக்கு அச்சத்தைத் ஏற்படுத்துவதாக இருந்தது. இங்கிலாந்து அணி 500, 600 ஓட்டங்களை எட்டிவிடுமோ என்று எண்ணத் தோன்றியது.



அடுத்த சில ஓவர்களில் 5 ஓட்டங்களில் ஆடிக் கொண்டிருந்த பட்லரின் விக்கெட்டை இஷாந்த் சர்மா வீழ்த்தினார்.

நேற்றைய தினம் மொயீன் அலிக்குத் தொடர்ந்து பவுன்சர்கள் வீசி இந்தியப் பந்து வீச்சாளர்கள் திணறடித்தார்கள். கடைசியில் உமேஷ் யாதவ் வீசிய பௌன்சரில் மொயீன் அலி வீழ்ந்தார். 146 ஓட்டங்களை எடுத்த அவருக்கு சென்னை ரசிகர்கள் கரகோஷம் எழுப்பிப் பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்.

இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 477 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி நேற்றைய நாள் ஆட்ட முடிவில் 20 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## இந்தியன் சூப்பர் லீக் உதைபந்து:

# இன்றைய இறுதிப் போட்டியில் கொல்கத்தா–கேரளா மோதல்

கொச்சி டிசெ.18

இந்தியன் சூப்பர் லீக் உதைபந்துக் கோப்பை யாருக்கு என நிர்ணயிக்கும் இறுதிப் போட்டி இன்று கொச்சியில் இடம்பெறவுள்ளது. இதில் கொல்கத்தா-கேரளா அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன.


3 ஆவது இந்தியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது.

இப்போட்டியின் அரை இறுதிக்கு மும்பை சிட்டி எப்.சி., கேரளா பிளாஸ்டர்ஸ், டில்லி டைனமோஸ், கொல்கத்தா ஆகிய அணிகள் தகுதிபெற்றன.

நடப்பு சம்பியனான சென்னை கவுகாத்தி, புனே, கோவா ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

அரை இறுதியில் மும்பையைக் கொல்கத்தா வீழ்த்தியது.

மற்றொரு அரை இறுதியில் டில்லியை வீழ்த்தி கேரளா இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.



கொல்கத்தாவும், கேரளாவும் 2 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளன. 2014 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் இவ்விரு அணிகளும் மோதியிருந்தன.

இதில் கொல்கத்தா 1-0 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்த இரு அணிகளும் மீண்டும் 2 ஆவது முறையாக இறுதிப் போட்டியில் சந்திக்கின்றன.

இந்தியன் சூப்பர் லீக் உதைபந்துக் கோப்பை யாருக்கு என நிர்ணயிக்கும் இறுதிப் போட்டி இன்று கொச்சியில் இடம்பெறவுள்ளது. இப் போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.


2014 ஆம் ஆண்டு சம்பியனான கொல்கத்தா 2 ஆவது முறையாகப் பட்டத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

கேரளாவும் முதல் முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் முனைப்பில் இருக்கிறது.

இந்த இரு அணிகளும் மோதிய முதல் லீக் ஆட்டத்தில் கொல்கத்தா 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. 2 ஆவது லீக் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

லீக் ஆட்டத்தில் கேரளாவை வீழ்த்தி உள்ளதால் கொல்கத்தா நம்பிக்கையுடன் களம் இறங்குகிறது. கேரளா அணி கடைசிக் கட்டத்தில் எழுச்சி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதனால், அந்த அணியும் நம்பிக்கையுடன் உள்ளது. சமபலம் வாய்ந்த இரு அணிகள் மோதுவதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## றொனால்டோவின் காதலை யாரும் நம்புவதில்லையாம்



லிஸ்பன், டிசெ.18

தான் உண்மையாக காதலித்தாலும், தன்னை யாரும் நம்புவது இல்லை என்று நட்சத்திர உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ வருத்தம் தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல் அணியின் தலைவரான கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு பல பெண் தோழிகள் உள்ளனர்.

தற்போது றொனால்டோ ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல மொடல் அழகி இரியானா ஷாயக்குடனும், இத்தாலியைச் சேர்ந்த எலிசா டி பனிசிஸ்டூடனும் நெருக்கமாக பழகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தவை வருமாறு:-

பெரும்பாலும் பெண்களின் இதயத்தை பார்த்தே நான் காதலிக்கிறேன். ஆனால், யாரும் என்னைப் புரிந்து கொள்வது இல்லை. நான் அவர்களுக்கு உண்மையாக இருந்தாலும் அவர்கள் என்னை நம்புவது இல்லை. எனது மகன் பிறந்தது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி. அவன் என்னைப் போலவே இருக்கிறான்.

வீட்டில் இருக்கும் சமயத்தில் எப்போதும் என் மார்பின் மீதுதான் உறங்குகிறான்.

உதைபந்தாட்டப் போட்டிக்காக அவனை விட்டு பிரிந்து செல்வது தான் எனக்கு கடினமான விடயமாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் பிழைத்தோர்க்கு...

(12-13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★தாம் சார்ந்த அணிக்காகப் போராடத் தயாராகவிருக்கும் ஊடகங்கள், தர்மத்துக்காக போராடத் தயாரில்லாத நிலையில் மக்களை எவர் காப்பார்? தூண்கள் இடியத் தொடங்க தொங்கிக்கிடக்கிறது ஜனநாயகம்.

★ஒரு மாபெரும் தலைவி மடிந்துகிடக்கிறாள். மக்கள் கதறி நிற்கின்றனர். மாநிலமே சோகத்தில் மூழ்கிக்கிடக்கிறது. இந்நிலையில் கூட சோககீதம் ஒலித்து அத்துன்பத்தில் பங்கு கொள்ளாமல் இறுதிக் கிரியைகள் நடந்த நாளில் கூட குத்தாட்டத்தால் கும்மாளம் போட்டுக்கிடந்த இவ் ஊடகங்களிடம் இனி தேசப்பற்றை எதிர்பார்ப்பதாவது... மண்ணாவது...

★ஆட்சியாளர்கள், என்றோ ஒருநாள் இவர்களின் கையை எடுத்துஇவர்கள் கண்ணையே குத்துவார்கள். அப்போது தெரியும் அறத்தின் வலிமை. 'பரந்து கெடுக.'

★அடுத்தசெய்திஇன்றைய பாரதத்தின் மத்திய ஆட்சியாளர்களுக்கானது. ஜெயலலிதாவின் மரண மர்மத்தில் மத்தியை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் பங்கு பற்றி பரவலாய்ப் பேசப் படுகிறது. திராவிடர் கழகங்களை மீறி தமிழ்நாட்டில் தம்மைப் பலப்படுத்துவது இயலாத காரியம் என்பதை அறிந்து வஞ்சகர்களை வயப்படுத்தி தம் நெஞ்சக் கருத்தை நிலைநிறுத்த முனைகிறது அக்கட்சி.

★ஜெயலலிதா மருத்துவமனையில் சிறையிருக்க அடிக்கடி வந்துபோன மத்திய அமைச்சர்கள் யாரோடு பேசினார்கள்? என்ன பேசினார்கள்? என்பதெல்லாம்இன்று மெல்ல மெல்ல ஊகச் செய்திகளாய்க் கசியத் தொடங்கியிருக்கின்றன.

★ மோடியின் மீது அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். இன்று கூட அந்நம்பிக்கை முற்றாய் மடியவில்லை. காங்கிரஸ்ஆட்சியால் இந்தியா வலியதேசங்களின் கைக்கு மாற்றப்பட்டு விடுமோ என்று பலரும் அஞ்சியிருந்த வேளை வில் மாற்றுச்சக்தியாய்க் கிளம்பி மக்களின் மனங் கவர்ந்தார் மோடி.

★இந்தியாவின் கலாசாரம், பண்பாடு, சமய நம்பிக்கை, அற உணர்வு எனும் அத்தனையையும், மண்ணின் வேரறிந்து மாண்புறச் செய்ய ஒருவர் வந்துவிட்டாரென பலரும் மகிழும்படி மோடியின் ஆட்சிப்பிரவேசம் நடந்தது.

★அந்த நம்பிக்கையின் வேர்கள்இன்று சற்று அசையத் தொடங்கியிருக்கின்றன. ஊழல் குற்றச்சாட்டில் உள்ளே சென்ற ஜெயலலிதா குழுவினரை மத்திய அமைச்சர் சந்தித்த பிறகுமேல்முறையீட்டில் பலரும் வியக்கும்படி நீதிக்குப் புறம்பான தீர்ப்பு வெளிவந்தது.

★உண்மை விலை பேசப் பட்டதாய் அப்போதே உலகம் அதிர்ந்தது.

★காவிரிப் பிரச்சினையில் கர்நாடகாவைக் கண்டித்து உச்சநீதிமன்றம்; தமிழகத்தைக் காக்க முனைய ஆட்சி அதிகாரம் பெற வாய்ப்பில்லாத தமிழக மண்ணை நீதிக்குப் புறம்பாய் நிராகரித்து தன் கைவயப்படக் கூடிய கர்நாடகாவை ஆதரித்து நீதிமன்ற தீர்ப்பையே பாரதீய ஜனதாவின்மத்திய ஆட்சி நிராகரிக்க, உண்மை உயரு மென எதிர்பார்த்த ஆட்சியில் பொய்ம்மை மதிப்புப்பெற்றது கண்டு பலரும் புழுவாய்த் துடித்தனர்.

★இன்று தமிழகத்தின் ஆட்சியை வஞ்சகர்களுடன் கைகோர்த்து வயப்படுத்த முனைந்து நிற்கும் மோடியின் முனைப்பைக்காண இவ்வளவு தானா இவர்தம் அறநம்பிக்கை எனச் சலிப்புண்டாகிறது. இந்துமதக் கொள்கையில் உறுதி பூண்டவர்கள் என நம்பப்பட்ட இவர்தம் அறமீறல்களைக் கண்டு அதிர்ச்சியுற்று நிற்கிறது உலகம்.

★நாத்திகத்தை வெல்ல வேறு வழியில்லை என் கின்றனர் சிலர். ஏற்கமுடியாத நியாயம். பிழைக்கு நியாயம் சொல்லப் புறப்பட்டால் எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யும். எங்ஙனம் அறம் மிஞ்சும்?

★தம்நோக்கம் நிறைவேற்ற இவர்களும் எதையும் செய்யத் துணிவார்கள்எனஎண்ணும்படி நிகழத்தொடங்கியி ருக்கும் மோடி ஆட்சியின் சம்பவங்கள் இலட்சியவாதிகளாய் நாம் நினைத்த இவர்களும், வெற்று அரசியல்வாதிகள் தான் என எண்ணத்தூண்டுகின்றன.

★அறத்தைக் காக்க செங்கோலைப் பயன்படுத்தலாம். செங்கோலைக் காக்க அறத்தைப் பயன்படுத்தலாமா?

★பிழையான பாதையில் சரியை அடைவது என்பது பாரதப் பண்பாடல்ல. 'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்றார் வள்ளுவர் கடவுள்.

★நல்லோரின்செயல்களில் தீய முன்னுதாரணங்கள் பதிவானால் தீயோர் மேலும் துணிவு பெறுவார்கள். தீமை தலைவிரித்து ஆடத் தொடங்கும். வெற்றிக்காய் அவசரப்பட்டு பிழைகளுக்கு இடங் கொடுப்பதைவிட சற்றுத் தாமதமானாலும் நேர்மையாய் வெற்றியைச் சந்திப்பதுதான் சிறந்தவழி. பா.ஜ.க.வினர் இதனை உணர்தல் வேண்டும்.

★நம் தமிழ்மண்ணில் சத்திரியத்துறவியாய் இருந்து காவியம் செய்த இளங்கோவடிகள், 'அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்' என அடித்துச் சொன்னார். இப்பேருண்மையைமோடிக்கு எடுத்துச் சொல்லப்போவது யார்?

★பிழைசரியானால் உலகம் உய்யும். சரி பிழையானால் உலகம் நைய்யும். பாரதம் உய்யுமா? நைய்யுமா? காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

# நான் தேர்தலில் தோல்வியடைய காரணம் ரஷ்ய ஜனாதிபதிதான்

## ஹிலாரி கிளிண்டன் அதிரடியாகத் தெரிவிப்பு

வொஷிங்டன்,டிசெ.18

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தான் தோல்வி அடைந்தற்கு விளாடிமிர் புடின்தான் காரணம் என்று ஹிலாரி கிளிண்டன் அதிரடியாக வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பேசிய ஹிலாரி கிளிண்டன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

புடினுக்கு என்னுடன் இருக்கும் தனிப்பட்ட பகைமை காரணமாகவே அவர்ஜனாதிபதித் தேர்தலில் தலையிட்டு எனக்கு எதிராகச் செயற்பட்டுள்ளார்.

என்னுடன் இருக்கும் பகைமை காரணமாக அவர் நம்நாட்டின்தேர்தல்முறைக்கும், ஜனநாயகத்துக்கும் எதிராக செயற்பட்டுள்ளார்.- என்றார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ரஷ்யாவில்நடந்தநாடாளுமன்றத் தேர்தல் ஒரு மோசடி என்று ஹிலாரி கிளிண்டன் குற்றஞ் சாட்டினார். இதனையடுத்து, ரஷ்யாவில் ஹிலாரிக்கு எதிராக தேசிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருந்தன.

இதற்கு ஜனாதிபதி புடினும் கடும் கண்டனங்களைத் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தை அடுத்தே இருவருக்கும் இடையில் பகைமை நிலவிவருகிறது என கூறப்படுகிறது.

ஒபாமா எச்சரிக்கை.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது, குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் வெற்றிக்கு உதவும் வகையில் இணையவழி மோசடிகளில் ரஷ்யா ஈடுபட்டதாகக் குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

இந்த நிலையில், அந்த நாட்டுக்கு எதிராக உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்த நாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்புக்கு உதவும் வகையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனின் மின்னஞ்சல்களில் ஊடுருவி தகவல்கள் திருடப்பட்டுள்ளன. இதில் ரஷ்ய உயரதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் நேர்மைத் தன்மையை சீர்குலைக்க எந்த வெளிநாட்டு அரசு முயன்றாலும், அந்த நாட்டுக்கு எதிராக நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதில் சந்தேகமில்லை.

தற்போது ரஷ்ய உயரதிகாரிகள் தொடர்புடைய இணைய வழி மோசடிகள் குறித்து விரிவாக விசாரிக்க உளவுத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உளவுத் துறையின் இறுதி அறிக்கை கிடைத்ததும், உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# அ.தி.மு.க கலண்டரில் சசி படம்



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா காலமாகியதையடுத்து, அவரதுபுகைப்படத்துடன்தயாரான 2017 ஆம் ஆண்டுக்கான - அ.தி.மு.கவின் உத்தியோகபூர்வ கலண்டர்களின் அச்சக ஓடர் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கமாக ஜெயலலிதாவின் பெரிய படத்துடன் வெளியாகும் இந்தக் கலண்டரில் இம்முறை சசிகலாவின் பெரியபடம் இடம்பெற்றிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தில் சசிகலாவைச் சந்திக்கத் திரண்டிருந்த அ.தி.மு.கவினர் அம்மாவை வழிபடும் காட்சி இது.

# கருணாநிதியை சுகம் விசாரித்தார் ராகுல்



சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தி.மு.க தலைவர் கருணாநிதியை காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்திபுதுடில்லியில் இருந்து விசேடமாக வருகைதந்து நேற்றுக் காலை நேரில் சென்று நலம் விசாரித்தார்.

தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு சளித் தொந்தரவு காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் காவேரி மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர். தொண்டை, நுரையீரல் தொற்றால் பாதிக்கப் பட்டுள்ள அவருக்கு 'டிரக்யாஸ்டமி' - கருவி மூலம் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் மத்திய நிதி அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான ப.சிதம்பரமும் அ.தி.மு.க சார்பில் மக்களவைத் துணை சபாநாயகர் தம்பிதுரை, தமிழக மீன்வளத்துறை அமைச்சர்ஜெயக்குமார் ஆகியோரும்நேற்றுக்காலை மருத்துவ மனைக்கு நேரில்சென்றுநலம் விசாரித்தனர்.

இதேவேளை, நலம் விசாரிக்க வந்த வைகோவுக்கு தி.மு.க. தொண்டர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் அவர் திரும்பிச் சென்றார். (உ)

# பப்புவா நியுகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

. ஆஸ்திரேலியாவுக்கு அருகாமையில் அமைந்துள்ள பப்புவா நியுகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்ஒன்றுஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் அந்நாட்டு நேரப்படி இரவு 10.51 மணிக்கு ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவியியல்ஆய்வுமையம்தெரிவித்துள்ளது.

7.9 ரிச்டர் அளவில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுஎனஅந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பப்புவா நியுகினியாவின் கிழக்குப் பகுதியான தரோன் நகரில் 46 கிலோமீற்றர்கள் தூரத்திலும், 103 கிலோமீற்றர்கள் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதுஎனபுவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் இதுவரை எதுவிததகவல்களும்வெளியிடப் படவில்லை.

எனினும் நிலநடுக்கத்தால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது எனவளிமண்டலவியல்திணைக்களம் அறிவித்துள்ளது.


# அமெரிக்காவின் ஆளில்லா நீர்மூழ்கியை கைப்பற்றியது சீனா

அமெரிக்காவின் ஆளில்லா நீர்மூழ்கி ஆய்வுக் கலத்தை பிலிப்பைன்ஸின் சுபிக் குடா விற்கு வடமேற்கே சுமார் 50 கடல் மைல் தொலைவில் - சர்வதேச கடற்பரப்பில் -வைத்து சீனக் கடற்படை கப்பல் ஒன்று எடுத்துச்சென்றிருப்பதாகஅமெரிக்கா அறிவித்திருக்கின்றது.

சட்டபூர்வமான முறையில் ஆய்வில் ஈடுபட்ட இந்த நீர்மூழ்கி ஆய்வுக் கலத்தை கடந்த வியாழனன்று சீனா கைப்பற்றியிருப்பதாக குறிப்பிட்டு அமெரிக்கா அதற்குக்கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது.

தென்சீனக் கடலில் சீனாவின் பிடி இறுகி வருவதையே இச் சம்பவம் காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir





*நேற்று சாவகச்சேரி சங்கத்தானையில் நிகழ்ந்த விபத்தின் கோரக் காட்சிகள்...*

## கோர விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரிக்கும் பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் கொண்டு விரையப்பட்டனர். அவர்களுள் ஒரு பெண்மணி சிகிச்சை பயனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்களுள் பலர் ஹொறணைப் பகுதியைச் சேர்ந்த ஒரே சிங்களக் குடும்பத்தவர்கள் என்று கூறப்பட்டது.

உயிரிழந்த 11 பேரில் அறுவர் ஆண்கள். ஐவர் பெண்கள்.

வானின் மேற்புறத்தில் பயணிகளின் பொதிகள் கட்டப்பட்டிருந்த 'கரியர்', வாகனங்கள் மோதிய வேகத்தில் வானின் கூரையை இழுத்துக் கழற்றிக் கொண்டு பஸ்ஸின் முன்புறக் கண்ணாடியைத் துளைத்து உள்ளே புகுந்து கிடந்தது.

இதனால் பஸ் சாரதியும் அவருக்கு பக்கத்தில் பஸ்ஸில் முன்புறத்தில் இருந்தவர்களுமாக 15 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பஸ் வீதியில் தனக்குரிய பக்கத்திலேயே பயணித்துள்ளது. எதிர்ப்புறத்தில் தென்னிலங்கையிருந்து வேகமாக வந்த ஹயஸ் வாகனமே வீதியின் மற்றப் பக்கத்துக்கு திடீரென வந்து பஸ்ஸுடன் நெற்றிமுட்ட மோதுண்டதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பெரும் சத்தத்துடன் இடம்பெற்ற மோதலை அடுத்து அங்கு பெரும் இரத்தக் களரி ஏற்பட்டது. விபத்தைத் தொடர்ந்து ஹயஸ் வானில் இருந்தவர்கள் பலர் அனுங்கி, முனகும் சத்தம் எழுந்தது. எனினும் சொற்ப நேரத்திலேயே அந்த முனகல் சத்தங்கள் அடங்கின.

விபத்து நடந்ததும் அப்பகுதி இளைஞர்கள் திரண்டு அவசர அவசரமாக மீட்பு முயற்சியில் ஈடுபட்டனர். ஹயஸ் வாகனத்தில் சிக்குண்டவர்களை மீட்க முடியாத அளவுக்கு வாகனம் நொறுங்கிக் கிடந்தது. அலவாங்குகள், கம்பிகள் கொண்டு வளைத்து, சிதைந்து கிடந்த வாகன உதிரிப்பாகங்களை தெண்டி, அகற்றியே உள்ளிருந்தவர்களை மீட்கமுடிந்தது. அவர்களில் அனேகர் மீட்பு முயற்சிக்கு முன்னரே உயிரிழந்து விட்டிருந்தனர்.

மீட்கப்பட்டவர்களில் காயமடைந்தோரையும், மற்றைய சடலங்களையும் இளைஞர் குழு விரைந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டது.

விபத்துத் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மெனிக்கே தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து பாதிப்புற்றோரை இளைஞர்களுடன் சேர்ந்து மீட்டு அவச்ர அவசரமாக வைத்தியசாலைக்கு அனுப்பினர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் கண்டி வீதி ஊடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. தூர இடங்களுக்கான பஸ்கள் டச்சு வீதி வழியாக பயணிப்பதற்கு பொலிஸாரினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் பிரதான வீதியூடாக பொலிஸாரின் வழிப்படுத்தலில் பயணத்தைத் தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஹயஸ் வாகனம் வீதியில் தனக்குரிய பக்கத்தில் இருந்து சடுதியாக இடம்மாறி எதிர்ப்புற வாகனங்கள் பயணிக்கும் பக்கத்துக்கு சென்றமையின் காரணம் என்ன என்பது தெரிய வரவில்லை. அந்த வாகனத்தின் டயர் ஏதும் வெடித்ததால் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசைக்குச் சென்றதா அல்லது சாரதி தூக்கக் கலக்கத்தில் தவறிழைத்தாரா என்பதும் தெரியவில்லை.

அந்த வாகனச் சாரதியும் அந்த வாகனத்தில் இருந்த ஏனைய பலரும் இறந்து விட்டமையால் இதற்கான காரணம் உடனடியாகத் தெரியவர வில்லை.

(உ-10-18-22-23-70)

## ஹயஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடத்திலிருந்து மாறி, எங்கள் பக்கத்துக்கு வந்து பஸ்ஸுடன் மோதியது.

"ஹயஸ் வாகனம் எனது பக்கமாக – பேருந்திற்கு நேராக – வருவதைக் கண்டதும் நான் எனது வாகனத்தை நிறுத்தி விட்டேன். எனது பஸ் நின்ற பின்னர்தான் ஹயஸ் வந்து பஸ் மீது நெற்றி முட்ட மோதியது.

"அந்த வாகனத்தின் சாரதி நித்திரை கொண்டாரா அல்லது வேறு ஏதும் நடந்ததா என்பது எனக்குத் தெரியாது.

"எனது பஸ்ஸை நோக்கி வந்த ஹயஸ் எமது பஸ்ஸை இடித்தது மட்டுமே எனக்குத் தெரியும். அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது." – இப்படி அவர் மேலும் கூறினார். (உ)

# முக்கியமான அரச அலுவலகங்கள் வாரத்தில் ஏழு நாள்களும் திறப்பு

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் உள்ள சில முக்கியமான அரச அலுவலகங் கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வாரத்தின் ஏழு நாள்களிலும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழி காட்டலுக்கு அமையவே இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மத ரீதியான விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நாள்களும் சில அரச அலுவலகங்கள் சேவையை வழங்க உள்ளன. அத்தியாவசிய சேவைகளை வழங்கி வரும் அரச அலுவலகங்களே இவ்வாறு வாரத்தின் ஏழு நாள்களும் திறக்கப்பட உள்ளன.

பொதுமக்களுக்குச் சிறந்த அரச சேவையை வழங்கும் நோக்கில் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தேசிய ஆள்பதிவு திணைக்களம், குடிவரவு குடி அகல்வுத் திணைக்களம் போன்றன முதல் கட்டமாக வாரத்தின் ஆறு நாள்கள் திறந்திருக்கும்.

அரச வங்கிகள் குறைந்த பட்சம் மாவட்டத்தில் ஒரு வங்கிக் கிளையேனும் மத ரீதியான விடுமுறை நாள்களைத் தவிர்ந்த வருடத்தின் ஏனைய அனைத்து நாட்களும் திறக்கப்படும். .

அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவின் சேவையை இரவு 10 மணிவரை யில் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கம்பனி பதிவுத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் போன்றன 24 மணித்தியாலங்களும் வாரத் தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டல்களின் அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. – என்றார். (ம)

# அமெ. கொள்கையால் இலங்கைக்கு பொருளாதாரப் பாதிப்பு நேருமாம்!

கொழும்பு, டிசெ.18

அடுத்த ஆண்டு அமெரிக்கா முன்னெடுக்கவுள்ள பொருளாதாரக் கொள்கையினால், இலங் கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்–

அமெரிக்க மத்திய வங்கியான 'பெடரல் றிசேவ் சிஸ்டம்' அடுத்த ஆண்டு வட்டி வீதங்களை அதிகரிக்கவுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திலும் இந்த வங்கியானது இதேபோல் வட்டி வீதத்தினை அதிகரித்ததால் இலங்கையிலிருந்து 240 கோடி டொலர் முத லீடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

அமெரிக்காவின் வட்டிவீதம் மீண்டும் உயர்த்தப்பட்டால், இலங்கையின் ரூபாவின் மீது அது மீண்டும் அழுத்தத்தைச் செலுத்தும்.

நாம் சிலகாலத்துக்குப் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் நாங்கள் கவனமாகச் செயற்படவேண்டும்.

இதேவேளை, மசகு எண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளது. இதுகூட எமது பொருளாதாரத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

கடந்த புதன்கிழமை அமெரிக்காவின் 'பெடரல் றிசேவ் சிஸ்டம்', வட்டி வீதத்தை அதிகரிக்க அனுமதி அளித்துள்ளது. அடுத்த ஆண்டு மேலும் மூன்று தடவைகள் வட்டி வீதத்தை அதிகரிக்கவும் எதிர் பார்த்துள்ளது.– என்றார்.

# கூரிய வாளை மறைத்துக்கொண்டு பரீட்சை எழுதச் சென்ற மாணவன்

### பாடசாலையில் பரபரப்பு

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு சென்ற மாணவன் ஒருவன் கூரிய வாள் ஒன்றுடன் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் வாள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரியிலேயே நேற்று சனிக்கிழமை பரீட்சையின் இறுதி நாளன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி மாணவன் சுமார் 2 அடி நீளமுள்ள கூரிய வாள் ஒன்றைத் தனது குடைக்குள் மிக சூட்சுமமாக மறைத்து வைத்திருந்தார். அந்த வாளுடன் அவர் பரீட்சை மண்டபத்தினுள் செல்ல முயன்றார்.

அவரில் சந்தேகம் கொண்ட பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தியபோதே வாள் கைப்பற்றப்பட்டது.

அந்த மாணவனை நேற்று பரீட்சைக்குத் தோற்ற அனுமதித்த பொலிஸார் அவரின் இந்தச் செயல் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனக் கூறினார். (ம)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.